

தமிழர் சிறப்பை வெளிப்படுத்தும் முகமாலையின் சிவபுரவளாகம்

பானு

பக்கம் 14

பக்கங்கள்: 20

THEEMPUNAL

# தீம்புனல்

வாராந்தப் பத்திரிகை



மலையகம் அடுத்து என்ன?

தேவராஜ்

பக்கம் 02

தீ : 02 புனல்:22 24.09.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053





உத்தமன்

## மந்திகை ஆதார வைத்தியசாலையில்

# நடந்தது என்ன...? நடப்பது என்ன...?



GMOA

Dr.Haritha Aluthge,
Secretary,
Government Medical officers

Dear sir ,

**Branch union resolution regarding appointment of Medical Superintendent to Base hospital Pointpedro**

We branch union BH/Pointpedro reliably informed that steps are taken to transfer BH/Chavakachcheri medical superintendent Dr.M.Thayalini to BH/Pointpedro as Medical superintendent.

We consider it as an arbitrary transfer process because we have been uncertain what needs arises to initiate prompt transfer process rather than appointing a Medical superintendent to Base hospital Pointpedro.

Further more post of Medical Superintendent of BH/Pointpedro yet not vacant as our Medical Superintendent is on a temporary transfer due to an inquiry process until such time Ministry of Health has appointed Dr. V. Kamalanathan as Acting Medical superintendent . As a branch union we observe a huge development process during his administrative period.

We, BH/Pointpedro Branch union strongly believe, Prompt action of transferring Dr.M.Thayalini from BH/Chavakachcheri to BH/Pointpedro without considering above fact will create much chaos at our hospital.

We Kindly requesting you to make necessary arrangements to withhold above transfer process and request the Ministry of Health to complete the inquiry process of Dr.T.Kuhathasan before appointing a Medical Superintendent to BH/Pointpedro.

Your prompt response in this regard is highly appreciated

Thank you,
Yours faithfully,

Dr.V.Tharsan,
Secretary,
GMOA Branch Union-BH Point Pedro.

Cc-Hon Governor -NP
RDHS-NP
PDHS-NP
Provincial Coordinators-NP
Acting Medical Superindentant-BH-Pointpedro.

பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்பட உள்ள நிலையில் அங்கு இடம் பெற்ற மற்றும் தற்போது இடம்பெற்று வருகின்ற சம்பவங்கள் வைத்தியசாலையின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதாக அமைகிறது.

தொண்டமானாறு நீர் ஏரியினால் பிரிக்கப்படும் வடமராட்சி பிரதேசம் யாழ்ப்பாணத்தில் இருந்து பிரிக்கப்படும் தனித்தீவு போன்று அமைந்துள்ளது.

மந்திகை ஆதார வைத்தியசாலை அப்பகுதி மக்களின் சிறந்த சுகாதார தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றது என்றால் மிகையாகாது.

வைத்தியசாலையில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் தேவையானது எனக் கருதும் நிலையில் அதனை முறைப்படி உரியவர்கள் மேற்கொள்ளாததன் விளைவே தற்போது பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியதாக உள்ளது.

**யார் அந்த வைத்தியர் கமலநாதன்**

விஞ்ஞான பாட ஆசிரியராக பல மருத்துவ மாணவர்களை உருவாக்கி தானும் பிற்பட்ட காலங்களில் மருத்துவக் கல்லூரிக்குச் சென்று மருத்துவரானவர்.

19

# மலையகம் அடுத்து என்ன?



**வி.தேவராஜ்**
**மூத்த ஊடகவியலாளர்**

மலையகத்தின் தலைவிதியை மாற்றி எழுதப் புறப்பட்ட “மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகளை” நிர்வாணமாக நிற்க வைத்துள்ளது ஐ.நா மனித உரிமைப் பேரவை அறிக்கை.

மலையக மக்கள் இலங்கையில் குடியேறி இரு நூற்றாண்டைத் தொட்டு நிற்கின்ற அதாவது, 200 வருடங்களை எட்டியுள்ள இவ்வேளையில் ஐ.நா மனித உரிமைப் பேரவை “மலையக மக்கள் நவீன அடிமைத்தனத்தின் சின்னமாக” உள்ளதை வெளி உலகிற்கு பறைசாற்றி நிற்கின்றது.

இது ஒன்றும் பரமரகசியமில்லை. காலம் காலமாகப் பேசப்பட்ட விடயம் தான். சர்வதேச ரீதியில் பேசப்பட்ட போதும் ஐ.நாவில் முதன் முறையாக மலையக விவகாரம் வந்துள்ளது.

மலையக மக்களின் “பிச்சைக் காசில்” வயிறு வளர்க்கும் ஒரு இளம் தொழிற்சங்க அரசியல்வாதி “நாட்டை நாம் காட்டிக் கொடுப்பதா எனக் கூறி மலையகம் குறித்து காண முயன்ற விடயங்களைத் திசை திருப்பிவிட முயன்றதாகத் தகவல். சிங்கள தேசமே அணிதிரண்டு ஐ.நா வாசலில் நிற்கும் போது மலையக நிலையை அறிக்கையிட வந்தவர்களைத் திசைதிருப்பிவிட முயன்றதை மலையக மக்கள் மன்றத்தில் முன்வைக்கின்றேன். “ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்” என்பதுபோல் மலையகத் தொழிற்சங்க அரசியல்வாதிகளில் இது ஒரு உதாரணம். துரதிஷ்டவசமாக மலையகத் தொழிற்சங்க அரசியலில் இன்று பதம் பார்க்காமலே நிலைமையைக் கூறிவிடலாம்.

மலையகத் தொழிற்சங்க அரசியலில் இன்று ஒரு நடேச ஜயரைப் பார்க்க முடியாதுள்ளது. ஒரு வெள்ளையனையோ அல்லது ராஜலிங்கத்தையோ தேடிப் பார்க்க முடியாதுள்ளது துரதிஷ்டமே.!

நீங்கள் யார்? என்று ஒரு மலையக மகனையோ அல்லது மகளையோ கேட்டால் எங்களை மலையகத் தமிழர்கள் என்பர். இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர் என்பர் சிங்கள மொழியில் நாம் “வத்தே தெமழ” வடக்கு கிழக்கு மொழியில் நாம் “வடக்கத்தையான்” எமக்கு “தோட்டக்காட்டான்” என்ற பெயரும் உண்டு. அன்று எமது வறுமை விலை போனது. அதனால் பல தொண்டர்களின் வாழ்வு வளமாகியது. இன்று எமது வாக்குகள் விலைபோகின்றன. சிங்களத் தேசியக் கட்சிகளுக்கு வாக்குகளை விற்று எமது மலையகத் தொழிற்சங்க அரசியல்வாதிகள் சுகபோகத்தில் திளைக்கின்றனர்.


முன்பு வேலை செய்து வயிறு கழுவ தோட்ட வேலை இருந்தது. இன்று அது பறிபோய்க் கொண்டிருக்கின்றது. நாம் கொஞ்சம் கொஞ்சமாக அன்றாட காய்ச்சிகளாக மாற்றப்பட்டு நிச்சயமற்ற வாழ்க்கையுடன் வீதியில் வீசப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.


கொரோனா அதனைத் தொடர்ந்து இன்றைய பொருளாதார நெருக்கடி எங்கள் வாழ்க்கையையே புரட்டிப் போட்டுவிட்டது. கொரோனாவும் நாட்டின் பொருளாதார நெருக்கடிகளும் எல்லோருக்கும் பொதுவானதுதான். இவைகளில் இருந்து மீண்டெழ மற்றவர்களால் முடியும். இதற்கென கொஞ்சககாலம் எடுக்கலாம். ஆனால், நாம் அரசியல் அநாதைகள். எமக்கென யார் இருக்கின்றனர். மீண்டெழ முடியாத அற்ப ஜீவன்கள் நாம்.

எமது வாழ்க்கையே அன்றாடம் போராட்டமாகவே போய்க் கொண்டிருக்கின்றது. எமது சந்ததியினர் தொழிற்சங்க உரிமைகளுக்காகப் போராடினர். சுதந்திர இலங்கை எம்மை அரசியல் அநாதைகளாக்கியது. அரசியல் உரிமைகளுக்காக பிரஜா உரிமைக்காக எமது போராட்டம் தொடர்ந்தது. 1977 இல் சௌமியமூர்த்தி தொண்டமானை பாராளுமன்றத்திற்கு பிரதிநிதியாக அனுப்பினோம். பிரஜாவுரிமைப் பிரச்சினைக்கு இறுதியாக 1988 இல் கொண்டுவரப்பட்ட நாடற்றோருக்கு பிரஜா உரிமை வழங்கும் சட்டம் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.









ஆனால், நாம் இன ஒடுக்குமுறை மனித உரிமை மீறல் மட்டுமல்ல நாம் இன்றும் இரண்டாந்தரப் பிரஜைகளே. எமது நிகழ்கால எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாக நிற்கின்றது. இவ்வேளையில் ஐ.நாவில் நாம் பேசுபொருளாக வந்துள்ளோம். இது எமது விடியலை நோக்கிய பயணத்தின் முதல்படி என நினைக்கின்றோம்.

மலையக மக்களை ஐ.நா அறிக்கையாவது விழித்தெழ வைக்கட்டும் என்றே கூறுவர். மலையகத்தைப் பொறுத்து மேலோட்டமாக மூன்று கால கட்டங்களாகப் பிரிக்கலாம்

♦ சுதந்திரத்துக்கு முந்தைய காலம்

♦ சுதந்திரத்துக்குப் பிந்தைய காலம்

1. சௌமியமூர்த்தி தொண்டமான் காலம்
2. சௌமியமூர்த்தி தொண்டமானுக்குப் பிந்தைய காலம்.

மூன்று நான்கு மலையகத் தலைமுறையை தின்ற வரலாறு இது. இன்றும் அதே வரலாறுதான். கொஞ்சம் மாற்றத்துடன் தொடர்கின்றது.

இப்போது இந்தச் சமுதாயம் சமத்துவத்திற்கும் கௌரவத்திற்காகவும் போராடி வருகின்றது. வாழ்க்கை நிலைமைகள் முன்னேறியிருந்தாலும் செம்மையான சமத்துவம் எனும் அந்தஸ்தினை இம் மக்கள் அனுபவிப்பதற்கு இன்னும் அதிக விடயங்கள் செய்யப்படவேண்டியுள்ளன. மிகவும் முக்கியமான முதல் விடயமாக மனித உரிமைகள் மீறல்கள் தொடர்ந்து இடம்பெறுவது குறிப்பிடப்பட வேண்டும் என்று The plight of Tamils of Indian origin in Sri Lanka என்ற தலைப்பில் “த நியூ இண்டியன் எக்ஸ்பிரஸ்” தளத்தில் வி.சூர்ய நாராயணன் எழுதிய கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

மலையக மக்களின் பிரச்சினைகளை ஸ்தலத்தில் கண்டறிவதற்காக ஐ.நா விசேட தூதுவரான டொமொயா ஒபொகடா 2021 நவம்பர் 26 இற்கும் டிசம்பர் 3 இற்கும் இடையில் இலங்கைக்கு விஜயம் செய்தார். விஜயம் செய்த தூதுவர் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்களையும் அரசாங்க அதிகாரிகளையும் தொழிற்சங்கத் தலைவர்களையும் விடயத்தில் சம்பந்தப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களையும் சந்தித்தார். தான் கண்டறிந்த விடயங்களின் பூர்வாங்க அறிக்கையினைத் தூதுவர் 2021 நவம்பர் 26 ஆம் திகதி நடைபெற்ற ஒரு கூட்டத்தில் சமர்ப்பித்தார். இறுதி அறிக்கையானது தற்போது 2022 செப்ரெம்பரில் ஐ.நாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி இலங்கையர்களிலுள்ள மலையக மக்கள் என்றுமே வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்ந்த வந்த சூழ்நிலையில் இன்று பொருளாதார நெருக்கடி அவர்களை எழுந்து பார்க்க முடியாத அளவிற்கு தாக்கத்தைச் செலுத்தியுள்ளமையைக் காண முடிகின்றது

தேயிலைத் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் இந்திய வம்சாவளித் தமிழர்களாவர். தனிநபர் வருமானம் வாழ்க்கை நிலைமைகள் நீண்ட ஆயுள் கல்வி அடைவுகள் மற்றும் பெண்களின் நிலை இவற்றைக் கணிப்பிட எந்த அளவுகோலையும் பிரயோகியுங்கள் - அவர்கள் ஏணியின் அடியிலேயே இருக்கின்றனர். ஐ.நா விசேட தூதுவர் பின்வருமாறு கோடிட்டுக் காட்டியுள்ளார்:

“நவீன அடிமை முறைகள் இனத்துவப் பரிமாணங்களைக் கொண்டுள்ளன. குறிப்பாக, 200 வருடங்களுக்கு முன்னர் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட மலையகத் தமிழர்கள் அவர்களின் வம்சாவளியின் அடிப்படையில் பல்வேறு வடிவிலான பாகுபாடுகளுக்கு இன்னும் முகங்கொடுத்து வருகின்றனர்.”

2017 ஆம் ஆண்டில் இலங்கை தேயிலைத் தொழில் துறையின் 150 ஆவது வருடப் பூர்த்தியினைக் கொண்டாடியது. பொருளாதாரத்தில் தேயிலைத் தொழல் துறையின் வகிபாத்திரத்தினைக் கோடிட்டுக்காட்டுவதற்கும் துறையின் உற்பத்தியினை எவ்வாறு உயர்த்துவது என்பது பற்றியும் துறையினை எவ்வாறு நவீனமயப்படுத்துவது என்பது பற்றியும் அரசாங்கமும் தோட்ட உரிமையாளர்களும் பல கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

ஆனால், கண்டியிலுள்ள சமூக அபிவிருத்தி நிறுவனம் மட்டுமே உலகம் முழுவதிலும் பல லட்சக்கணக்கானவர்களுக்கு அதிகாலைக் களிப்பினை வழங்கும் இரண்டு இலைகளையும் ஒரு கொழுந்தினையும் (கலாநிதி முல்க் ராஜ் ஆனந்தினால் எழுதப்பட்ட நாவல்) உற்பத்தி செய்பவர்கள் பற்றிய ஒரு கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருந்தது. தோட்ட உரிமையாளர்களினதும் தொழிலாளர்களினதும் மாறுபடும் வாழ்க்கைகள் கட்டாயம் கோடிட்டுக் காட்டப்பட வேண்டும் என்றும் வி.சூர்யநாராயணன் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய மலையகத் தொழிற்சங்க அரசியல்வாதிகள் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் சகாப்தத்திற்கு பிற்பட்ட இன்றைய மலையக வரலாற்றுடன் தொடர்புபட்டவர்கள். இவர்களில் பலர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் பாசறையில் வளர்ந்தவர்களும் உள்ளனர். தொண்டமான் அவர்கள் என்ன செய்தார் என்று உங்களில் பலர் கேள்வி எழுப்பலாம்.

**இலக்கின்றி மலையகத் தலைமைகள்.**

நடேச ஜயர், ராஜலிங்கம் வெள்ளையன், அஸீஸ் தொண்டமான் இவ்வாறு பலர் அங்குலம் அங்குலமாகச் செதுக்கிய மலையகத்தில் இன்றைய தொழிற்சங்க அரசியல்வாதிகள் சுகமாக அமர்ந்து தொழிற்சங்க அரசியலை செய்கின்றீர்கள். மலையகம் குறித்த எதிர்காலப் பார்வை பயணிக்க வேண்டிய இலக்கு என்பன நடேச ஜயர், ராஜலிங்கம் வெள்ளையன், அஸீஸ் தொண்டமான் போன்றவர்களுக்கு இருந்தது.

மலையகம் குறித்த இன்றைய தொழிற்சங்க அரசியல் தலைவர்களின் இலக்கு என்ன? எதிர்காலப் பார்வை என்ன?

துரதிஷ்டவசமாக இன்றைய மலையகத் தொழிற்சங்க அரசியல் தலைமைகளிடம் மலையகம் குறித்த எதிர்காலச் சிந்தனை இலக்கு என்பன இன்றியே தொழிங்சங்க அரசியலை செய்கின்றனர்.

**-வாக்கு சேகரிக்கும் முகவர்கள்**

“கட்சித் தலைகள்” பிரிந்து நின்று தேசியக் கட்சிகளில் போட்டியிடுவது. சில சந்தர்ப்பங்களில் ஒரே கட்சியில் பிரிந்து நின்று ஒரு சின்னத்தில் போட்டியிடுவது. பாராளுமன்ற உறுப்பினராகவாவது அமைச்சர்களாவது தமது “ஆலவட்டங்களுக்கு” உயர்பதவிகளைப் பெற்றுக் கொடுப்பது போன்றவைகளைத் தவிர பெரிதாக சாதித்ததாக இல்லை.

**“இனிவரும் காலத்தையாவது “மக்களுக்கான அரசியலாக” செய்ய வாருங்கள்.”**

உண்மையில் இவர்கள் தேசியக் கட்சிகளுடன் இணைந்தோ பிரிந்து நின்றோ போட்டியிட்டு மலையக வாக்குகளை தேசியக் கட்சிகளுக்கு வாரி வழங்கும் முகவர்களாகவே செயற்படுகின்றனர். இதற்கான கையூட்டே அமைச்சர் பதவிகள்.

மலையக தொழிற்சங்க அரசியல்வாதிகளிடம் சில கேள்விகள்..!

(17 ஆம் பக்கம் பார்க்க...)

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.com
news@theempunal.com

THEEMPUNAL
தீம்புனல்

# ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படும் மாணவர்கள்

இலங்கையில் உருவான பொருளாதார பிரச்சினை காரணமாக பல இடர்பாடுகளை மக்கள் அனுபவிக்கின்றனர். கிணறு வெட்ட பூதம் புறப்பட்டதுபோல ஒவ்வொரு பிரச்சினையாகத் தீர்வுகாண முயற்சி செய்யும்போது இன்னொரு பிரச்சினை உருவாகிவிடும். பழைய பிரச்சினையைத் தீர்ப்பதா? அல்லது புதியதைச் சரிப்படுத்துவதா? என பட்டிமன்றம் நடைபெறும் இடைவெளியில் இன்னொரு பிரச்சினை பூதாகரமாகக் கிளம்பிவிடும்.

உணவுப்பற்றாக்குறை சிறுவர்களையும் மாணவர்களையும் பாதிக்கத் தொடங்கியுள்ளது. இதனால் அடுத்த தலைமுறைக்கு ஊட்டச்சத்து உரிய முறையில் கிடைக்கவில்லை. பொருளாதார நெருக்கடி காரணமாக உணவுப் பொருட்களின் விலை எகிறிவிட்டது. ஊட்டச்சத்துள்ள உணவை வாங்குவதற்குரிய பொருளாதாரநிலை பலரிடம் இல்லை.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, சாதாரண நாட்களில் பிள்ளைகளுக்கு வீட்டில் வழங்கி வந்த உணவுகளை தற்போது கொடுக்க முடியாத நிலையில் பல பெற்றோர் உள்ளனர். உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்தால் பால்மா குடிப்பவர்களின் தொகை குறைவடைந்துள்ளது. மீன், முட்டை போன்ற இலகுவாகப் பெறக்கூடிய போஷாக்கு உணவுகளைக்கூட வாங்குவதற்கு வக்கில்லாத நிலையில் பலர் உள்ளனர்.

ஊட்டச்சத்து இன்மை காரணமாக குழந்தைகள் தேகாரோக்கியம் பாதிக்கப்படுகிறது. அவர்கள் மெலிந்து போகும் தன்மை சடுதியாக கடுமையாகும். இது ஒரு குழந்தையின் மரணத்துக்குக்கூட வழிவகுக்கும். சிறுவர் மந்த போஷாக்கில் உலகளவில் இலங்கை 6 ஆவது இடத்தில் உள்ளதாக யுனிசெப் அறிவித்திருக்கிறது. தெற்காசியாவில் கடுமையான போஷாக்கின்மையை எதிர்கொள்ளும் நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் இருப்பதாகவும் யுனிசெப் குறிப்பிட்டிருக்கிறது. உணவுப் பொருட்களுக்கான விலைகள் கடுமையாக அதிகரித்திருப்பது - மந்த போஷாக்கு ஏற்படுவதற்கான முக்கிய காரணம்' எனவும் யுனிசெப் சுட்டிக்காட்டியிருக்கிறது.

பொருளாதார நெருக்கடியில் முன்பள்ளிக் கட்டணத்தைச் செலுத்த முடியாத காரணத்தினால் முன்பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையில் கணிசமான அளவு குறைவடைந்துள்ளதாக இலங்கை முன்பள்ளி ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. பல பெற்றோர்கள் தங்கள் வருமான ஆதாரங்களை இழந்து, வருமானம் குறைந்துள்ளதால், பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் முன்பள்ளிக் கட்டணத்தைச் செலுத்துவதில் சிரமப்படுகின்றனர். நகர்ப்புறங்களைவிட கிராமப்புறங்களில் இந்நிலைமை அதிகமாகக் காணப்படுகின்றது.

கடந்த சில மாதங்களாக முன்பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. உதாரணமாக, முன்பள்ளியில் 20 குழந்தைகள் கல்வி கற்ற பாலர் பள்ளியில் தற்போது 15 மாணவர்கள் உள்ளனர். மேலும், பாலர் பள்ளிகளில் இரண்டு முதல் மூன்று மாதங்கள் வரை படிக்கும் சில குழந்தைகள், கட்டணம் செலுத்த முடியாததால், படிப்பை நிறுத்துகின்றனர்.

கட்டணம் செலுத்தாத மாணவர்களிடம் முன்பள்ளி ஆசிரியர்கள் உரிய கட்டணத்தை கோரவில்லை என்றாலும், ஆசிரியர்களை எதிர்கொள்ளும் தயக்கத்தால் மாணவர்கள் முன்பள்ளிக்கு வருவதில்லை என செய்திகள் வெளியாகி வருவதாக ஸ்ரீநாத் தெரிவித்தார். இந்நிலை தொடரும் பட்சத்தில் கல்வித்துறையில் சிக்கல் நிலை உருவாகும் என்றார்.

"நாட்டின் பொருளாதார நெருக்கடியால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இருப்பினும், மாநில பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சகம் மற்றும் கல்வி அமைச்சகம் போன்ற தொடர்புடைய நிறுவனங்கள் தங்கள் குழந்தைகளை பாலர் பள்ளிகளுக்கு அனுப்ப பெற்றோரை ஊக்குவிக்க முடியும். எதிர்வரும் நாட்களில் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்கவுடன் இது தொடர்பில் கலந்துரையாடவுள்ளோம் என ஸ்ரீநாத் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பல குடும்பங்கள் எதிர்நோக்கும் கடுமையான பொருளாதாரச் சிரமங்களாலும் பாடசாலைகள் முறையான முறையில் பாடங்களை நடத்தாததாலும் சில சிரேஷ்ட தர மாணவர்கள் கல்வியை இடைநிறுத்தும் போக்குக் காணப்படுவதாக அண்மையில் தெரிவிக்கப்பட்டது. வேலைவாய்ப்பு, கல்விப் பொதுச் சான்றிதழ் உயர்தர (உ/த) பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களிடையே இது பெரும்பாலும் காணப்படுகிறது. குறிப்பிட்ட சில மாணவர்கள் வேலைக்குச் செல்வதற்கு முக்கிய காரணம் அவர்களது பெற்றோர் சொந்த வேலைகளை இழந்து விட்டதால், அவர்களது வீட்டுச் செலவுகளைத் தாங்க முடியாமல் தவிப்பதாகக் கூறப்படுகிறது.

சூரியவெவ கிராமத்தில் 80% குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளதாக கணக்கெடுப்பு ஒன்றில் தெரியவந்துள்ளது என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் நிபுணத்துவ மன்றத்தின் தலைவர் டாக்டர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

ஊட்டச்சத்துக் குறைபாடு காரணமாக மாணவர்கள் பாதிக்கப்படுவது உண்மைதான். ஆனால், வெளியாகும் செய்திகள் சிலவற்றில் உண்மைத் தன்மை இல்லை என ஜனாதிபதியின் ஊடக அறிக்கை சுட்டிக்காட்டி உள்ளது.

வறுமை காரணமாக மாணவர் ஒருவர் மதிய உணவிற்காக தேங்காய்த் துருவலை உட்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்ட சம்பவம் ஆதாரமற்றது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், அத்தகைய சூழ்நிலையை எதிர்கொள்ளும் எந்தவொரு குழந்தை/குடும்பத்திற்கும் உதவுவதற்காக ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உதவிக்கு 0114354647 என்ற ஹொட் லைனை அழைக்கவும்.

பாடசாலை மாணவர்கள் சரியான உணவு கிடைக்காமல் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் அவர்களுக்கு சத்துள்ள உணவுகளை வழங்க முடியாமல் அரசாங்கம் திணறுவதாகவும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் குற்றம் சுமத்தியதால் பாராளுமன்றத்தில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

சிறுவர்களுக்கும் கர்ப்பிணிகளுக்கும் உரிய முறையில் ஊட்டச்சத்துள்ள உணவை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ■

---

# வேலையற்ற பட்டதாரிகளைக் கொண்ட உலகின் 'ஒரே நாடு இலங்கை'

உலகில் பட்டதாரிகளுக்குத் தொழில் வாய்ப்புகள் இல்லாத ஒரே நாடு இலங்கை மட்டுமே என முன்னாள் தலைவர் பிரிவு நிபுணத்துவ சங்கங்களின் (OPA) டாக்டர் லலித் விஜேதுங்க நேற்று தெரிவித்தார்.

தவறான கல்வி முறைகள், மனப்போக்கின் சிக்கல்கள் போன்ற பல சிக்கல்கள் இதற்கு முக்கியமாகும் என்று அவர் கூறினார். "நீங்கள் இந்தியாவை எடுத்துக் கொண்டால், PHD உடையவர்கள் அலுவலக உதவி (பியூன்கள்) வேலைகளுக்கு விண்ணப்பிப்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம், ஆனால் இலங்கையில் உள்ள பட்டதாரிகள் தங்கள் தகுதிக்கு ஏற்றவாறு ஒரு வேலையை வலியுறுத்துகின்றனர்.

பட்டதாரிகளுக்கும் வேலை சார்ந்த கல்வி இல்லை மற்றும் பல பொதுத்துறை நிறுவனங்கள் அவர்கள் தேர்ச்சி பெறும்போது அவர்களை வேலைக்கு அமர்த்த விரும்புவதில்லை. இதனால்தான் உலகம் முழுவதும் பொதுவான ஒரு 'பகுதி நேர வேலைவாய்ப்புக் கொள்கை'யை அறிமுகப்படுத்த (OPA) அரசுக்கு ஒரு முன்மொழிவைக் கொண்டு வந்தது. "பல தொழிலாளர் சந்தைகளில் தற்காலிக மற்றும் பகுதிநேர ஒப்பந்தங்கள் படிப்படியாக முக்கியத்துவம் பெற்று வந்தாலும் இலங்கையில் இது தொடர்பாக எந்த வழிகாட்டுதலோ அல்லது சட்டமோ இல்லை."

பகுதிநேர வேலைகளை வழங்குவதன் மூலம் பள்ளிப் படிப்பை இடைநிறுத்தம் செய்பவர்கள் விரைவான வேலைவாய்ப்பைப் பெற முடியும் என்றும் அவர்களது வாழ்க்கையில் பிணைக்கப்பட்ட அடுத்த வேலைக்குச் செல்ல நல்ல பயிற்சியும் கிடைக்கும் என்றும் அவர் கூறினார். "சில துறைகளுக்கு நிரந்தர வேலைகளை விரும்பாத பல நிறுவனங்கள் இவை மற்றும் "பகுதி நேர வேலை வாய்ப்புக் கொள்கையை" சட்டபூர்வமாக்குவது இதற்கு ஒரு தீர்வாக இருக்கும்."

கொள்கையளவில், நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்கள் இருவரும் பகுதிநேர வேலையிலிருந்து பயனடையலாம், ஏனெனில் இது தொழிலாளர்கள் தொழில்முறை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கைக்கு இடையே சமநிலையை அடைய உதவுகிறது, தொழிலாளர் சந்தை நுழைவை மேம்படுத்துகிறது மற்றும் முழு நேர வேலைகள் கிடைக்காதபோது வேலை வாய்ப்பை அதிகரிக்க உதவுகிறது.



60 வயதிற்குட்பட்ட ஊழியர்களை ஓய்வு பெறுமாறு கோரும் போது, அவர்களின் நிபுணத்துவம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அவர்கள் செய்யும் பங்களிப்பை நாடு பயன்படுத்துவதை நிறுத்துவதாக துலித பெரேரா தெரிவித்தார். இதற்கு தீர்வாக அவர்களுக்கு "பகுதிநேர வேலை" வழங்க வேண்டும்.

அவரும் தனது இளமைக் காலத்தில் டிரம்மராகப் பகுதி நேரமாகப் பணிபுரிந்ததை பெரேரா நினைவு கூர்ந்தார். 100,000 வேலையற்ற பட்டதாரிகளை உள்ளடக்கிய இலங்கையின் வேலையின்மை விகிதம் 2020 டிசம்பரில் 5.20% ஆக இருந்ததை விட, 2021 மார்ச்சில் 5.70% ஆக அதிகரித்துள்ளதாகவும் வெளிப்படுத்தப்பட்டது. 2020 முதல் காலாண்டில் பொருளாதாரத்தில் வேலை வாய்ப்புகள் 160,996 ஆக சுருங்கியது மற்றும் GCE O/L மற்றும் A/L இடைநிற்றல்களும் இதில் சேரும்.

"தொழில்நுட்பத்தின் முன்னேற்றம் காரணமாக அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கலாம்."

வேலைவாய்ப்பற்ற தொழிலாளர்களை மீண்டும் திறமையானவர்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும், இது அவர்கள் வளர்ச்சியடைந்து வரும் துறைகளில் புதிய வேலை வாய்ப்பிற்கு மாறுவதற்கு முக்கியமாகும். "இதை நடைமுறைப்படுத்த ஆர்வமாக இருந்த தொழிலாளர் அமைச்சர் மனுஷ நாணயக்காரவிடம் இந்தத் திட்டத்தை நாங்கள் முன்மொழிந்தோம். அனைத்து பகுதிநேர பணியாளர்களும் அரசால் ஒதுக்கப்பட்ட அமைப்பில் பதிவு செய்யப்பட வேண்டும்" என்று தெரிவித்தார். ■




# நாகர்கோவில் மகா வித்தியாலய 22 மாணவர்கள் படுகொலையின் 27 ஆம் ஆண்டு நினைவு நாள்

**வடமராட்சி கிழக்கூர் சிந்தனைச் செல்வன்**

வடமராட்சி கிழக்கையே பெரும் சோகத்தில் ஆழ்த்திய நாளும் வடமராட்சி கிழக்கிலே நாகர்கோவில் மண்ணில் இடம்பெற்ற இரண்டாவது இனப்படுகொலையை விமானப்படையின் புக்காரவிமானங்கள் நடாத்திய 27 ஆவது நினைவு நாள் செப்ரெம்பர் 22 ஆகும்.

அன்றைய நாட்களில் வடமராட்சி கிழக்கில் இடம் பெயர்ந்த மக்கள் நாகர்கோவில் கிராமத்தின் J/423, J/424, J/425, ஆகிய கிராமங்களிலே ஏறக்குறைய 3000க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்தனர்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு, திருகோணமலை, வடமாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தின் ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, யாழ்ப்பாணத்தின் வலிவடக்கு மயிலிட்டி, காங்கேசன்துறை, பலாலி, வாசாவிளான், வளலாய் போன்ற பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களும் 1990 தீவகத்தை இராணுவம் ஆக்கிரமித்தபோது அங்கிருந்து தப்பி வந்த மக்களும் 1991.07.14 காலப்பகுதியில் ஆனையிறவு மீட்பதற்காக வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணியில் இராணுவம் தரையிறங்கியபோது வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி போன்ற கிராமசேவகர் பிரிவுகளில் இருந்தும் இடம்பெயர்ந்த மக்களும் 1992 இல் மாதகல், இளவாலை, பண்டத்தரிப்பு, சுழிபுரம், பொன்னாலை, மூளாய், சேந்தாங்குளம், பகுதிகளைச் சேர்ந்த மக்களும் குறிப்பாக கடற்றொழிலை தமது வாழ்வாதாரமாகக் கொண்டமக்கள் அங்கு இடம்பெயர்ந்து வசித்து வந்தனர்.

குறித்த இடம்பெயர்ந்து வசித்துவந்த மக்களுக்கு தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் அவர்கள் குடியிருப்பதற்காக தற்காலிக ஓலை குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு முகாம், திருகோணமலை முகாம், ஆனையிறவு முகாம், தட டுவன்கொட்டி முகாம், பலாலி முகாம், காங்கேசன்துறை முகாம், வெற்றிலைக்கேணி முகாம், ஆழியவளை முகாம், மாதகல் முகாம், இளவாலை முகாம் எனும் பெயர்களில் இருந்து வந்தன.

இவ்வாறு இடம் பெயர்ந்து வசித்து வந்த மாணவர்களும் நாகர்கோவில் மகா வித்தியாலயம், நாகர்கோவில் தெற்கு ஆரம்ப பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தார்கள்.

சுமார் 250 மாணவர்கள் கல்வி கற்று வந்த நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் சுமார் 2500 க்கு மேற்பட்ட மாணவர்கள் அப்போது கல்வி கற்றார்கள்.

அந்த நாட்களில் நாகர்கோவில் கிராமம் ஒரு மாநகரம் போல் மக்கள் வசித்து வந்தனர். அங்கு சந்தையொன்றும் இயங்கியது. அந்த மக்களுக்காக அப்போது வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் 3 கிளை நிலையங்கள் ஊடாக தமது சேவையை வழங்கியிருந்தன.

20.09.1995 அன்று முல்லைத்தீவு, செம்மலைக் கடற்பரப்பில் விடுதலைப்புலிகளுக்கும் கடற்படைக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் ஐரிஸ் மோனா எனும் படைகளுக்கு பொருட்களைக் கொண்டு செல்லும் கப்பலைக் கைப்பற்றியிருந்தார்கள்.

கைப்பற்றப்பட்ட அந்தக் கப்பலை தமது தளம் அமைந்திருந்த நாகர்கோவிலுக்கு கிழக்குப் பகுதியில் 3 கிலோமீற்றர் தொலைவில் உள்ள குடாரப்பு கடலில் நங்கூரமிட்டிருந்தார்கள்.

அந்தக் கப்பலை இலக்குவைத்து புக்காரவிமானங்கள் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தது. விமானங்கள் மீதும் தாக்குதல்களை நடத்திக் கொண்டிந்தார்கள். இலக்கை அடையமுடியாத புக்காரவிமானங்கள் இரண்டும் நாகர்கோவில் கிராமத்தையும் சுற்றிவட்டமிட்டது.

புக்கார வட்டமிட்டபோது சந்தைக்குச் சென்ற மக்கள், உலர் உணவு நிவாரணம் பெற்றுக் கொள்ள சென்ற மக்கள் என எல்லோரும் பாதுகாப்புத் தேடி ஓடினர். பாதுகாப்பான




பதுங்குளிகளிலும் பதுங்கிக் கொண்டனர். இதில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவர்களும் பாதுகாப்புத் தேடி ஓடினர்.

அப்போது புக்கார விமானங்கள் தாழப்பறந்து வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

பாதுகாப்புத் தேடி ஓடிய பாடசாலை மாணவர்களில் ஒரு பகுதியினர் பாடசாலை ஓரமாகவிருந்த புளியமரத்தின் கீழ் பாதுகாப்புத்தேடிக் கொண்டனர். அவ்வேளையில்தான் அடுத்தடுத்து இரண்டு புக்கார விமானங்களும் ஆறுக்குமேற்பட்ட குண்டுகளை பாடசாலையைச் சுற்றிவீசியது.

இரண்டு குண்டுகள் பாடசாலை மாணவர்கள் பாதுகாப்பென பதுங்கியிருந்த அந்தப் புளிய மரத்தின்மீதும் வீசப்பட்டன. வீசப்பட்ட அந்த விமானக் குண்டுகள் வெடித்ததில் சம்பவ இடத்திலே 25 மாணவர்கள் கொல்லப்பட்டனர், 35 க்கு மேற்பட்ட மாணவர்கள் படுகாயடைந்தனர்.

மாணவர்களின் வெள்ளைநிற சீருடைகள் குருதியினால் தோய்ந்து சிவப்பு நிறமாக மாறின. இதில் ஐந்து அப்பாவிப் பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தில் மயிலிட்டியைச் சேர்ந்த மாணவி ஒருவர் தனது இரண்டு கால்களையும் இழந்தார். அவர் நாகர்கோவில் படுகொலையின் சாட்சியாக இன்றும் உள்ளார்.

காயமடைந்த மாணவர்களுக்கு விடுதலைப்புலிகளின் மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

படுகாயமடைந்த பொதுமக்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், புனர்வாழ்வுக்கழகம், விடுதலைப் புலிகள் பொதுமக்கள் அனைவருமாக அம்பன் வைத்தியசாலைக்கும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கும் கொண்டு செல்லப்பட்டனர்.

இப்படுகொலையின் சாட்சியாக இன்றும் பலர் உள்ளனர். பலர் சுனாமியிலும் இறுதியுத்தத்திலும் கொல்லப்பட்டுள்ளனர். அன்று அத்தாக்குதலில் காயமடைந்த ஒரு மாணவி இன்று ஆசிரியையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்.

வடமராட்சி கிழக்கை மட்டுமல்ல தமிழர்களையே சோகத்தில் ஆழ்த்திய அந்த நாகர்கோவில் படுகொலையின் 27 ஆவது நினைவு செப்ரெம்பர் 22 ஆகும், அந்த வலிகளையும் அப்போது கொல்லப்பட்ட மாணவர்களை மட்டுமல்ல அப்பாவித்தனமாக படுகொலை செய்யப்பட்ட அனைவரையும் நினைவு கூர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும், இவை தான் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு எமது வரலாற்றை எடுத்துச் செல்லும். ■



# யாழ்.குடாநாடு எங்கிருந்து எங்கே செல்கிறது...?

அவதானி

அண்மையில் மறைந்த எலிஸபெத் மகாராணியாரின் இறுதி நிகழ்விற்குச் சென்றவர்கள் எத்தனைபேர், அவரது மருமகள் வேல்ஸ் இளவரசி டயானாவின் இறுதி நிகழ்வுக்கு எத்தனைபேர் சென்றனர்...? என அனைத்துலக சமூகம் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கும் அதேசமயம், இலங்கையில் யாழ்.குடாநாட்டில் எத்தனைபேர் தற்போது கெரோயின் போதைப் பொருளுக்கு அடிமையாகியிருக்கின்றனர் என்ற புள்ளி விபரங்களை வைத்து ஆழ்ந்த கவலையில் இருக்கின்றனர் சமூக நலன் குறித்து சிந்திக்கும் அவதானிகள்.

ஏழு தசாப்தங்களுக்கு முன்னர் வடக்கிற்கு வருகை தந்த இஸ்ரேலிய விஞ்ஞானிகள், இங்கு நிலத்தடி நீரை பரிசோதித்துவிட்டு, காலப்போக்கில் இந்நீர் உவர்ப்பாக மாறிவிடும் சாத்தியம் இருக்கிறது என எச்சரிக்கையாக சொல்லிவிட்டுச் சென்றதாக முன்னர் கூறப்பட்டது.

குறிப்பிட்ட ஏழு தசாப்த காலத்தில், வடபுலத்திலிருந்து தென்னிலங்கையில் அமைந்த பாராளுமன்றத்திற்குச் சென்ற மக்களின் பிரதிநிதிகள் நன்னீர், உவர் நீராக மாறுவது குறித்து ஆராய்ந்து அதற்கு மாற்று நடவடிக்கை எடுத்தார்களா..?

1970 இற்குப்பின்னர் வடக்கிலிருந்து உருவான ஆயுதம் ஏந்திய விடுதலை இயக்கங்களாவது ஏதும் உருப்படியான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தார்களா..?

நல்ல குடிநீருக்காக மக்கள் கோவில் கிணறுகளை நோக்கி படையெடுத்த காட்சிகளைத்தான் பார்த்தோம். அவ்வாறு சென்றவர்களின் சாதி அடையாளம் குறித்தும் கவனம் செலுத்திய மேட்டுக்குடி சமூகத்தையும் கடந்து வந்திருக்கின்றோம்.

1970 களில் புங்குடுதீவு பிரதேசத்தில் வாழ்ந்த எமது தமிழ் மக்கள், ஒருவரை மறந்திருக்கமாட்டார்கள். அங்கிருந்த கண்ணகி ஆலயத்தில் இருந்த குடிநீர் கிணற்றில் அடிநிலை மக்களும் தண்ணீர் பெறல்வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்து அந்த காந்தீயவாதி உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார். இறுதியில் உயர் சாதிமான்களின் தூண்டுதலினால், காவலர்களிடம் அடிவாங்கியே இறந்தார்.

அவர்தான் எழுத்தாளரும் சிந்தனையாளருமான மு.தளையசிங்கம். இவரை இன்றைய தலைமுறை அறியுமா..?

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள், யாழ்ப்பாண கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் என்றார். அதே கலாசாரம் ஒரு கால கட்டத்தில் ஆயுத கலாசாரமாக திரிபடைந்தது, பின்னர் ஜனநாயகத்தின் பேரில் தற்போது, பல்வேறு அரசியல் கட்சிகளின் தோற்றுவாயாக யாழ். குடாநாடு மாறியிருக்கிறது.



அதன் பெறுபேற்றை அண்மையில் தியாகி திலீபனின் நினைவு தின நிகழ்விலும் காணமுடிந்தது.

இறுதியில் இனிவரும் காலத்தில் தியாகி திலீபனை நினைவு கூறுவதற்கான நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பதற்கென ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை, “கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்” என்ற தொனிப்பொருளில் தொடங்கப்பட்ட போராட்டம். வானத்தில் பட்டம் விட்டும் கவன ஈர்ப்பை நடத்தும் காட்சிகளையும் அவதானிக்க முடிகிறது.

அத்துடன் முன்னர் ஆரம்பிக்கப்பட்ட பொத்துவில் முதல் பொலிகண்டி (P to P) வரையில் தொடங்கப்பட்ட பேராட்டத்திற்கு வேறு வடிவங்கள் வழங்கி, அதற்கும் உரிமை கோரும் சாரார் நடத்தும் அறிக்கை சமர்களும் வெளியாகின்றன.

இது தொடர்பான செய்திகளுக்கு மத்தியில்தான் மக்களை பதற வைக்கும் போதைப்பாவனை பெருக்கம் தொடர்பான செய்திகளும் வெளிவருகின்றன.

தீம்புனலின் கடந்த வார இதழிலும் இது பற்றி சுட்டிக் காண்பித்திருந்தோம்.

அண்மையில் யாழ்.மாவட்டத்தில் கெரோயின் போதைக்கு அடிமையான பத்துப்பேர் இறந்திருப்பதாகவும் முந்நூறுக்கும் மேற்பட்டோர் பொலிஸாரால் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 130 பேருக்கும் மேல் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருப்பதாகவும் பெரும்பாலும் 18 முதல் 23 வயதிற்குட்பட்ட இளம் தலைமுறையினரே இந்நிலைக்கு ஆளாகியிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

சமுதாயத்தை சீரழித்துக்கொண்டிருக்கும் உயிர்க்கொல்லியின் தீவிரம், யாழ். மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகள் எனச்சொல்லப்படும் எவரது கண்களுக்கும் இதுவரையில் தென்படவில்லையா...?

கண்களை பாதுகாக்கும் இமை கண்களுக்குத் தெரியாதிருப்பது உடல் அமைப்பின் காரணம்.

ஆனால், எதிர்காலத்தையே உருவாக்கவேண்டிய இளம் சமுதாயம், தங்களுக்கு வாக்களித்து அனுப்பும் தலைமுறை இவ்வாறு படிப்படியாக அழிவின் விளிம்பை நோக்கி நகர்வது தெரியாமல் இருக்கிறதா..?

பொலிஸ்காரர்கள் செய்யவேண்டிய வேலையை நாம் ஏன் செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையில் இந்த மக்கள் பிரதிநிதிகள், கண்டும் காணாமலும் இருக்கிறார்களா..?

“விடுதலைப்புலிகளின் காலத்தில் யாழ்.குடாநாடு மாத்திரமல்ல வடக்கு - கிழக்கு தமிழர் பிரதேசம் எங்கும் போதைவஸ்து உட்புகவில்லை. எவரும் கசிப்பு காய்ச்சி விற்கவில்லை” என்று மக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அவ்வாறாயின், புலிகள் மௌனிக்கப்பட்ட பின்னர், இயங்கும் முன்னாள் போராளிகளின் அமைப்புகள், தமிழ்த்தேசியம் பேசிக்கொண்டிருக்கும் அரசியல் தலைவர்கள், இன்னமும் 13 ஆவது திருத்தச்சட்டம், ஜெனீவாவுக்கான தீர்மானம் பற்றி அறிக்கை விட்டுக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகளால், ஏன் யாழ் குடாநாட்டை இந்த உயிர்க்கொல்லியிலிருந்து முற்றாக விடுவிக்க முடியவில்லை...?

எவ்வாறு... எந்த மார்க்கத்தில் யாழ். மாவட்டத்திற்குள் இந்தப் போதைப்பொருள் வருகிறது..? யார் விநியோகிக்கிறார்கள்...? என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டியவர்கள் பொலிஸார் மாத்திரமல்ல, அந்தக் கடமை மக்களிடம் தேர்தல் காலத்தில் வாக்குப்பிச்சை கேட்டுவரும் அரசியல்வாதிகளுக்கும் இருக்கிறது.

இந்த விடயத்தில் குறைந்தபட்சம் பிரஜைகள் குழுக்களுடன் இந்த மக்கள் பிரதிநிதிகள் இணைந்து விழிப்புணர்வு நடவடிக்கைகளில் துரிதமாக இறங்கவேண்டும்.

மாநகர சபை, மற்றும் பிரதேச சபைகள் தங்களிடம் நீடித்திருக்கும் தன் முனைப்பு ஆணவத்தையெல்லாம் ஒரு புறம் ஒதுக்கிவைத்துவிட்டு, இளம் தலைமுறையைச் சரியான வழியில் அழைத்துச்செல்வதற்கு ஏற்ற செயற்பாடுகளில் தாமதமின்றி இறங்கவேண்டும்.

போதைக்கு அடிமையான தமது பிள்ளைகளைப் பெற்றவர்களே பொலிஸாரிடம் ஒப்படைக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

போதைக்கு அடிமையான சிறுவன், ஏழுவயது சிறுமியை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கிய செய்தியையும் உடன் பிறந்த சகோதரியையே ஒருவன் வன்கொடுமை செய்து, அவள் தற்கொலை செய்து கொண்ட செய்தியையும் அறியும் துன்பியல் கலாசாரத்திற்குள் எம்மவர் மூழ்கியிருக்கின்றனர்.

இப்போது எதனை உடனடியாக கவனிக்கவேண்டும்...? என்ற உணர்வு யாழ். குடாநாட்டு அரசியல்வாதிகளிடத்திலும் பாராளுமன்றம் சென்ற மக்கள் பிரதிநிதிகளிடத்திலும் வரல்வேண்டும்.

இல்லையேல், யாழ். குடாநாட்டின் நன்நீர் படிப்படியாக உவர் நீராக மாறியதுபோன்று, ஒரு இளம் தலைமுறையையே நாம் உயிர்க்கொல்லி போதைக்கு இழந்துவிடுவோம்.

கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்யாதீர்கள். ■

# விடைபெற்ற ராணி எலிஸபெத்தின் உடல்
# கணவரின் கல்லறை அருகே அடக்கம்



வானதி

பிரிட்டனை நீண்ட காலம் ஆட்சி செய்த மகாராணி இரண்டாம் எலிஸபெத் (வயது 97) உடல் நலக்குறைவு காரணமாகவும் வயது மூப்பினாலும் கடந்த 8 ஆம் திகதி மரணம் அடைந்தார். அவரது உடல் லண்டன் பாராளுமன்ற வளாகத்தில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அரங்கத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. லட்சக்கணக்கான பொதுமக்கள் பல மணி நேரம் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் ராணி மேல் வைத்திருந்த அன்பால் நீண்ட வரிசையில் காத்திருந்து அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். ஏராளமானோர் குடும்பம் குடும்பமாக வந்து அஞ்சலி செலுத்தினர். வெஸ்ட்மின்ஸ்டர் அரங்கில் இருந்து அலங்கரிக்கப்பட்ட குதிரைகள் பூட்டிய பீரங்கி வண்டியில் ராணி எலிஸபெத் உடல் வைக்கப்பட்டு இறுதி பயணம் தொடங்கியது. ராணி எலிசபெத் உடல் வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதிப் பிரார்த்தனை செய்யப்பட்டது. அப்போது சவப்பெட்டி மீது ராணிக்கான கிரீடம், செங்கோல் உள்ளிட்டவை வைக்கப்பட்டிருந்தது. பிரார்த்தனைக்குப் பின்னர் அவரது உடல் வின்ட்சர் கோட்டையின் வழியாக செயின்ட் ஜார்ஜ் தேவாலயத்திற்கு உடல் எடுத்துச் செல்லப்பட்டது. வழி நெடுக்க பொதுமக்கள், ராணிக்கு இறுதி மரியாதை செலுத்தி பிரியாவிடை கொடுத்தனர். கோட்டை மைதானத்தில் இருந்து துப்பாக்கிகள் முழங்க அரச மரியாதை அளிக்கப்பட்டது. ஜார்ஜ் தேவாலயத்துக்குள் சவப்பெட்டி கொண்டு வந்ததும் அங்கு கல்லறை ஜெபம் நடைபெற்றது. ஜெபத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான தனிப்பட்ட முறையில் நெருக்கமான விருந்தினர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். இந்த ஜெபத்தைத் தொடர்ந்து ராணியின் ஆட்சி நிறைவுறுவதைக் குறிக்கும் சம்பிரதாயங்கள் நடைபெற்றன. ஏகாதிபத்திய அரச மணிமுடி, ராணியின் சிலுவைக் கோளம், செங்கோல் போன்றவை சவப்பெட்டியின் மேலே இருந்து அகற்றப்பட்டன. பிறகு ராணியின் உடல் ராயல் வால்ட்டில் இறக்கப்பட்டு அரச பாரம்பரிய முறைப்படி நல்லடக்கம் செய்யப்பட்டது.





பல்வேறு நாடுகளின் மன்னர்கள், ராணிகள், ஜனாதிபதிகள், பிரதமர்கள் என சுமார் 500 தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களும் ராணியின் இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக லண்டனுக்குச் சென்றனர்.

ராணி எலிஸபெத்தின் இறுதி ஊர்வலத்தில் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து நாடுகளின் முப்படையைச் சேர்ந்த 6 ஆயிரம் வீரர்கள் கலந்து கொண்டனர். ராணியின் இறுதி ஊர்வலத்தைப் பார்ப்பதற்கும் இறுதி அஞ்சலி செலுத்துவதற்கும் நாடு முழுவதிலும் இருந்து 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் லண்டனில் குவிந்திருந்தனர். லண்டன் நகர தெருக்கள் அனைத்தும் நிரம்பி வழிந்தன. ராணியின் இறுதிச்சடங்கு மற்றும் இறுதி ஊர்வலத்தை நேரலையில் ஒளிபரப்ப அரச குடும்பத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். அதன்படி இந்த நிகழ்வுகள் அனைத்தும் நாடு முழுவதும் உள்ள பூங்காக்கள், சதுக்கங்கள், திரையரங்குகளில் பெரிய திரைகளில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. முன்னாள் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலுக்குப் பிறகு லண்டனில் சுமார் 57 ஆண்டுகளுக்குப்பின் முழு அரசு மரியாதையுடன் கூடிய இறுதிச்சடங்கு நடந்ததால் தலைநகர் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

1000 ஆண்டு கனெக்ஷன்! 13 அரசர்கள் நல்லடக்கம்! வெஸ்ட்மின்ஸ்டர் அபேவுக்கும் அரசு குடும்பத்திற்கும் உறவு

ராணி எலிஸபெத் இறுதிச்சடங்குகள் அனைத்தும் லண்டனில் இருக்கும் 1000 ஆண்டுகள் பழமையான வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்தில்தான் நடைபெறுகிறது. பிரிட்டன் நாட்டில் கடந்த 1952 முதல் ராணியாக இருந்து வந்தவர் எலிஸபெத். சுமார் 70 ஆண்டுகள் ராணியாக இருந்த அவரது உடல்நிலை சில மாதங்களாகவே மோசமடைந்து வந்தது.

1000 ஆண்டுகால வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்தில் ராணி எலிஸபெத் உடலுக்கு இறுதிச்சடங்குகள் நடைபெற்றன. மத்திய லண்டனிலுள்ள இந்த வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்தில்தான் சுமார் 1,000 ஆண்டுகளாக ஆங்கிலேயர்களின் முடிசூட்டு விழாக்கள், திருமணங்கள் மற்றும் இறுதிச் சடங்குகள் என அனைத்தும் நடக்கும் இடமாக உள்ளது. ராணி எலிஸபெத்தின் இறுதிச் சடங்கும் இங்குதான் நடக்கிறது. அதே தேவாலயத்தில்தான் அவரது திருமணமும் நடந்தது. அவர் முடி சூட்டியதும் இங்குதான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேவாலயம் முதலில் 11 ஆம் நூற்றாண்டில் மன்னர் எட்வர்ட் என்பவரால் ஒரு மடாலயத்தின் தளத்தில் கட்டப்பட்டது. இப்போது இருக்கும் இந்த தேவாலயம் பிரிட்டிஷ் தலைநகர் லண்டனின் மிகச்சிறந்த அடையாளங்களில் ஒன்றாகும். 1245 ஆம் ஆண்டில், மூன்றாம் ஹென்றி அரசராக இருந்த போது இதன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டது. ராணி எலிஸபெத்திற்கும் வெஸ்ட்மின்ஸ்டர் அபேவுக்கும் இடையேயான தொடர்பு என்பது ராணியின் சிறுவயதில் இருந்தே தொடங்குகிறது. ராணி எலிஸபெத்தின் தந்தை இதே இடத்தில்தான் முடி சூட்டப்பட்டார். இளவரசர் பிலிப்புடனான ராணியின் திருமணம் நவம்பர் 20, 1947 அன்று இதே தேவாலயத்தில்தான் நடந்தது. அவரது முடிசூட்டு விழாவும் இங்குதான் ஜூன் 2, 1953இல் நடைபெற்றது.

வெஸ்ட்மின்ஸ்டர் அபேவில் நடந்த பல முக்கிய நிகழ்ச்சிகளும் ராணி எலிஸபெத் தொடர்ந்து கலந்து கொண்டார். கடைசியாகத் தனது கணவர் பிலிப் நல்லடக்கத்திற்குப் பின்னர் மார்ச் 29, 2022 இல் ராணி எலிஸபெத் கடைசியாகத் தேவாலயத்திற்கு வந்து இருந்தார். இப்போது இதே இடத்தில்தான் அவரது இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.




டயானா ராணி எலிஸபெத் மகள் இளவரசி அன்னே, கப்டன் மார்க் பிலிப்ஸ் ஆகியோர் நவம்பர் 14, 1973 இல் இங்கு திருமணம் செய்து கொண்டனர். அவரது பேரன் இளவரசர் வில்லியம், கேட் மிடில்டனின் அரச திருமணமும் ஏப்ரல் 29, 2011 இல் இதே தேவாலயத்தில்தான் நடந்தது. இது மட்டுமின்றி இளவரசி டயானாவின் இறுதிச் சடங்கும்கூட செப்ரெம்பர் 6, 1997 இல் இங்குதான் நடந்தது. மேலும், ஏப்ரல் 9, 2002 இல் ராணி அன்னையின் இறுதிச் சடங்கும் இங்குதான் நடந்தது.

1066 ஆம் ஆண்டு மன்னர் எட்வர்ட்தான் இங்கு நல்லடக்கம் செய்யப்பட்ட முதல் மன்னர். அதன் பின்னர் 1760 ஆம் ஆண்டு வரை மொத்தம் 13 பிரிட்டன் அரசர்களும் முதலாம் எலிஸபெத் உட்பட நான்கு அரசிகளும் இங்கு நல்லடக்கம் செய்யப்பட்டனர். 1970 இல் இங்கு நல்லடக்கம் செய்யப்பட்ட கடைசி மன்னர் இரண்டாம் ஜார்ஜ் ஆவார். அப்போது ராணி எலிஸபெத் இங்கு அடக்கம் செய்யப்படவில்லையா? என நீங்கள் கேட்கலாம். ஆம் ராணி எலிஸபெத் இறுதிச் சடங்கு மட்டுமே இங்கு நடைபெறுகிறது. ஆனால், நல்லடக்கம் இங்கு இல்லை.

வின்ட்சர் கோட்டையில்தான் கணவர் பிலிப்பின் உடலுடன் ராணி எலிஸபெத்தின் உடல் நல்லடக்கம் செய்யப்படுகிறது. இரண்டாம் ஜார்ஜ்க்கு பின்னர் அனைத்து மன்னர்களின் உடல்களும் செயின்ட் ஜார்ஜ் சேப்பல், வின்ட்சர் கோட்டை அல்லது கோட்டையை ஒட்டிய தோட்டமான ஃபிராக் மோரில் உள்ள கல்லறையில்தான் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

செயின்ட் ஜார்ஜ் சேப்பல், வின்ட்சர்: இந்த கட்டடம் கிங் எட்வர்ட் IV ஆல் 1475 இல் தொடங்கப்பட்டது - இது முடிக்க 50 ஆண்டுகள் ஆனது மற்றும் வின்ட்சர் மீது ஆழ்ந்த பாசம் கொண்ட கிங் ஹென்றி VIII ஆல் இறுதியாக தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டது.

இது ஆர்டர் ஆஃப் தி கார்டரின் வீடு மற்றும் கார்டரின் மாவீரர்கள் மற்றும் பெண்கள் தேவாலயத்திற்குள் தங்கள் சொந்த இருக்கைகளைக் கொண்டுள்ளனர், அவற்றின் பேனரால் குறிக்கப்பட்டு, மேலே கூரையில் இருந்து தொங்கவிடப்பட்டுள்ளது. ராயல் ஸ்டாண்டர்ட் அவரது ஆட்சியின் தொடக்கத்திலிருந்து ராணியின் இருக்கைக்கு மேல் தொங்குகிறது. 500 ஆண்டுகளுக்கு முன்பு ஹென்றி VIII வழிபட்ட அதே இருக்கை இது.

எட்வர்ட் III இன் வாள் செயின்ட் ஜார்ஜ் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவர் பதின்னான்காம் நூற்றாண்டில் வின்ட்சர் கோட்டையில் வாழ்ந்தார், இங்கிலாந்தின் இந்த மன்னர்தான் செயின்ட் ஜார்ஜ் அரச குடும்பத்தின் பாதுகாவலராக அறிவித் தார். 1600 களில் ஆங்கில உள்நாட்டுப் போரின் ரவுண்ட்ஹெட் ஆக்கிரமிப்பின் போது தேவாலயம் மோசமாகச் சேதமடைந்தபோது தேவாலயத்தில் இருந்து மீட்கப்பட்ட பொருட்களில் அவரது வாளும் இருந்தது.

11 மீற்றர் உயரமும் ஏறக்குறைய ஒன்பது மீற்றர் அகலமும் கொண்ட மேற்கு சாளரம் இங்கிலாந்தின் மிகப்பெரிய ஒன்றாகும். இது 500 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது, ஆனால் 1842 இல் மீண்டும் கட்டப்பட்டது.

பெரும்பாலான பிரிட்டன்கள் இதுவரை அறிந்திராத ஒரே மன்னரின் ஸ்கொட்லாந்தில் அவரது கோடைகால ஓய்வு இல்லத்தில் செப்ரெம்பர் 8 அன்று இறந்த பிறகு லண்டன் மற்றும் மற்ற ஐக்கிய இராச்சியத்தை சுற்றிச் சுழன்ற சில புள்ளி விபரங்கள் இங்கே உள்ளன.

**2,000**: அரச இறுதிச் சடங்கிற்காக வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் உள்ள பிரமுகர்கள் மற்றும் விருந்தினர்கள், மன்னர் சார்லஸ் மற்றும் பிற அரசகுடும்ப உறுப்பினர்கள் முதல் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உட்பட உலகத் தலைவர்கள்வரை கோவிட்-19 தொற்று நோயை எதிர்த்துப் போராட

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# காதுவலி போய் நெஞ்சுவலி வந்தது

அதிசயன்

காதிலே ஒரு பிரச்சினை. இரைச்சல். சிறிய அளவிலான வலி. இதனால் எதையுமே சிந்திக்கவோ சிரத்தையோடு செய்யவோ முடியவில்லை. படிக்க முடியாது. பயணம் செய்ய முடியாது. யாரோடும் நிதானமாகப் பேச முடியாது. எந்த வேலையையும் செய்ய முடியாது. ஏன் ஒழுங்காகச் சாப்பிடக் கூட முடியாது. தொடர்ந்து இரைந்து கொண்டிருந்ததால் தூக்கமும் இல்லை.

இரவில் ஒழுங்கான தூக்கம் இல்லையென்றால் பகல் நாசம் என்பார்கள். அப்படித்தான் நான்கு ஐந்து நாட்களாக என்னுடைய பகல் நாசமாகிக் கொண்டிருந்தது. பசியும் தூக்கமும் இல்லாமல் அந்தளவுக்கு அவதிப்பட்டுக் கொண்டிருந்தேன்.

இதற்குள் ஏராளம் மருத்துவ ஆலோசனைகள், சிகிக்கைகள், கருணை பொங்கிய ஆறுதல் வார்த்தைகள்.

இந்த மாதிரியான சூழலில் நம்மைச் சுற்றி ஆயிரம் மருத்துவ நிபுணர்கள் கூடிவிடுவார்களல்லவா. கூடியவர்கள் ஆளாளுக்கு இலவச ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருந்தார்கள். சிலர் இன்னொரு படி மேலே வந்து சிகிச்சையையே ஆரம்பித்து விட்டனர்.

“நல்லெண்ணெயை காதுக்குள் விட்டுப் பாருங்கள்” என்றார் ஒருவர். (கடவுளே, காதென்ன எண்ணெய்க் கிடாரமா?)

“உள்ளியை நெருப்பில் சூடாக்கி, இளஞ்சூட்டோடு காதுக்குள் செருகி விடுங்கள். நீரை உறிஞ்சி எடுத்து விடும். அதோடு இரைச்சல் காலி” என்றார் இன்னொருவர். (இதற்கு தனியாக பிறகு நான் காசு செலவழித்து வைத்தியம் செய்ய வேணும். இந்த மாதிரி ஒரு விஞ்ஞான மூளைக்கு என்ன விருதைக் கொடுக்க முடியும்?).

“இதொரு வாய்வுப் பிரச்சினை. உள்ளியோடு இஞ்சி, வேர்க்கொம்பு, துளசி இலை (இப்படி இன்னும் நான் கைந்து ஐயிற்றங்களைச்சொன்னார். உண்மையில் மறந்து விட்டேன்). எல்லாவற்றையும் அரைத்து சட்டியில் சூடாக்கிப்பொட்டலம் கட்டி, அந்தப் பொட்டலத்தைக் காதுக்குக் கீழ் மடலில் (கன்னத்தின் மறைபக்கத்தில்) ஒத்தணம் கொடுங்கள். இப்படி மூன்று தடவை கொடுத்தால் எல்லாம் சரியாகி விடும்” என்று சுக சொப்பனம் சொன்னார் இன்னொரு மேதை.

எல்லாமே இலவசம்தான்.

இந்தளவுக்கு நல்லெண்ணம் கொண்ட இதயங்களை நானும் இந்த நாடும் பெற்றிருக்கிறதே என்று எண்ணி மகிழ்ந்தேன். எல்லோரும் என் மீதான அன்பினாலும் கரிசனையினாலும்தான் இதைச் சொன்னார்கள் என்று எண்ணுகிறேன். ஆனால், இப்படி ஏதாவது ஒரு நோய் நொடி யாருக்காவது ஏற்பட்டால் இந்த மாதிரி மருத்துவர்கள் தோன்றி, ஏராளம் மருத்துவ ஆலோசனைகளைச் சொல்வார்கள். ஆனால், இவர்களெல்லாம் தங்களுக்கு ஒன்று என்று வந்து விட்டால் தப்பாமல் மருத்துவமனைக்கே செல்வார்கள். அங்கே நல்லதொரு மருத்துவரைப் பார்ப்பதற்கே முயற்சிப்பார்கள்.

ம், நல்லதுதான். ஊருக்கு உபதேசம், உனக்கல்ல என்ற கதைதான்.

ஆகவே இவர்களை நம்பி என்னுடைய காதைக் கொடுக்க முடியுமா? எவருக்கும் மறுப்புச்சொல்லாமல் எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் ஆமாச் சொல்லி விட்டு, தப்பினேன் பிழைத்தேன் என்று ஒரு தனியார் மருத்துவமனையில் தஞ்சமடைந்தேன்.

“என்னதான் அந்தரம் அவசரம் என்றாலும் எதற்கும் ஒரு ஒழுங்கிருக்கு. காதைக் காட்ட வேண்டும் என்றால் நீங்கள் இரண்டு நாட்கள் பொறுத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் காதுக்கான மருத்துவ நிபுணர் வருவார். அதற்கிடையில் அவசரமாகக் காட்ட வேண்டும் என்றால், இன்னொரு டொக்டரிடம் காட்டலாம். அவர் முதற்கட்டச் சிகிச்சையைச் செய்வார்” என்று அந்த மருத்துவமனையில் சொன்னார்கள்.

வேறு வழியில்லை. அன்பானவர் வரும்வரை அமாவாசை காத்திருக்குமா? நிபுணர் வரும்வரை நிலைமை பொறுக்காது. என்னதானிருந்தாலும் இதொரு புகழ் பெற்ற கடவுளுக்கு நிகரான மருத்துவமனையல்லவா!

ஆகவே, முதலில் சாதாரண மருத்துவரிடம் சிகிச்சையை ஆரம்பிப்போம். ஏதாவது கெடுதி என்றால், பெரிய டொக்டர் (நிபுணர்) வராமலா போகிறார்? என்று துணிந்து காரியத்தில் இறங்கினேன்.

முதற்கட்டமாக சிறிய அளவிலான பரிசோதனைகள். காதுக்குள் சிறியதொரு லைற்றினால் ஒளி பாய்ச்சிப் பார்த்தார்கள். பிறகு ஒரு சிறிய உபகரணத்தால் காதுத் துவாரத்தின் வழியாக எதையோ செய்தார்கள். பிறகு ஏதோ ஒரு திரவத்தை துளியாக உள்ளே விட்டனர். இப்படிக் காதுச் சடங்குகள் முடிய, “மூன்று நாட்கள் பொறுத்துப் பாருங்கள். வலியும் இரைச்சலும் குறையவில்லையென்றால் மறுபடியும் வாருங்கள்” என்று சில மாத்திரைகளைத் தந்தனர். அதில் வலி குறைப்பு மாத்திரையும் கிருமித் தொற்று நீக்கி அல்லது கட்டுப்படுத்தி மாத்திரையும் இருந்தன.

“நோய் நீக்கி மாத்திரை இதில் இருக்கிறதா டொக்டர்?” என்று கேட்க நினைத்தேன். ஏனோ நாக்கு மேலெழவில்லை.

“கொஞ்ச நேரம் (பதினைந்து நிமிடமளவில்) இங்கே இருங்கள். பிறகு நீங்கள் போய் நாளை மறுதினம் வாருங்கள்” என்று பிரியாவிடை தந்தனர். கூடவே கையில் மருத்துவத்துக்கான கட்டணச் சிட்டையும் கையில் தரப்பட்டது.

பார்த்தேன். காது வலியை விட நெஞ்சுவலி பெரிது என்பார்கள். அந்த நெஞ்சுவலி வந்து காது வலியைச் சிறுப்பித்தது.

ஒரு பத்து நிமிடம் காதைப் பார்த்ததுக்கும் பதினைந்து நிமிடம் அந்த மருத்துவமனை விளிம்பில் நின்றதற்குமாக ஆறு ஆயிரம் ரூபாய் என்றார்கள்.

உண்மையாகத்தான் ஆறாயிரத்தைக் கேட்கிறார்களா? அல்லது ஏதாவது மாறிக் கீறித்தான் அப்படிச் சொல்கிறார்களா? என்று ஏதொன்றுமே விளங்கவில்லை.

“மெய்யாகத்தான் ஆறாயிரமா? அது சரியான கணக்குத்தானா?” என்று திரும்பக் கேட்டேன்.

“ஓ மன்னிக்க வேண்டும் உங்களுக்குக் காதுப் பிரச்சினையல்லவா. அப்படியென்றால் அதுதான் கட்டணம். இப்ப டொலர்ப் பிரச்சினை. உங்களுக்குத் தெரியுந்தானே” என்று சொல்லிக் கொண்டு இரண்டு மருந்துப் பொட்டலங்களையும் தந்தனர்.

அதாவது காசா, காதா இப்பொழுது வேண்டும் என்ற கேள்வியின் முன்னே நிறுத்தப்பட்டிருந்தேன். இந்தச் சேதியைக் கேட்க முடியாத அளவுக்கு காது கேட்காமல் விட்டிருந்தால் பரவாயில்லை என்றொரு எண்ணம் சட்டென வந்தது.

இது தொடக்கம். இனித்தான் நிபுணர். பிறகு அதற்கும்மேல் இன்னொரு நிபுணர்- நிபுணர்களுடைய கணக்குகளும் வேறு. அது கேள்விகளுக்கு அப்பாற்பட்டது. கேட்பதைக் கொடுத்து விடவேண்டும். இல்லையென்றால் காதில்லை.

வீட்டுக்கு வந்து இரண்டு நாட்களாகியும் இரைச்சல் குறையவில்லை. வலி சற்றுக் குறைந்திருந்தது.

எவ்வளவோ முயற்சிகளை எல்லாம் எடுத்து என்னுடைய காதைக் காதாகவே ஆக்குவதற்காக அந்த மருத்துவர் தனக்குத் தெரிந்த அளவில் கடுமையாகப் பாடுபட்டார். அதற்கு மேல் செய்வதற்கு அவரால் முடியவில்லை. ஆகவே, அவரைக் குறை சொல்லிப் பயனில்லை.

எப்படியோ நான் இரண்டு நாட்களில் காதுக்கான மருத்துவ நிபுணரிடம் போகத்தான் வேண்டும். அவர்கள் கேட்கின்ற பணத்தைக் கொடுக்கத்தான் வேண்டும். அது எவ்வளவாக இருந்தாலும்.

“ஏன் நீங்கள் அரச மருத்துவமனைக்குப் போகலாம் அல்லவா” என்று நீங்கள் அன்பாகக் கேட்கலாம்.

அங்கே போகலாம்தான். அங்கும் சிகிச்சை நடக்கும்தான். ஆனால், அரச மருத்துவமனைகள் எல்லாவற்றிலும் காதைக் காட்டிச் சிகிச்சை பெறக்கூடிய வசதிகள் இல்லை. சில மருத்துவமனைகளில்தான் அந்த வசதி உண்டு. அதற்காக சென்று அலைகின்ற சிரமங்களுக்காகவே இப்படித் தனியார் மருத்துவமனைகளை நாடுகிறோம்.

இங்கே அதல்ல பிரச்சினை மட்டுமல்ல. இப்படி காதுக்கான சிகிச்சையைப் பெறுவதில்தான் இப்படிப் பிரச்சினை உண்டென்றும் இல்லை. இதைவிட சிறுநீரகம் சம்மந்தப்பட்ட சிகிச்சை, இதயச் சிகிச்சைகளில் இது இன்னும் மோசம். வேறு வழியில்லாமல் நாமும் இவற்றுக்கே செல்ல வேண்டியுள்ளது.

இந்தத் தனியார் மருத்துவமனைகளில் பணியாற்றுகின்றவர்களில் (அரச மருத்துவர்களாக இருந்து ஓய்வு பெற்றவர்களைத் தவிர) பெரும்பாலான மருத்துவர்களும் மருத்துவ நிபுணர்களும் அரச மருத்துவர்களாகவும் உள்ளனர். இவர்கள் அங்கேயும் சம்பளம் பெறுகிறார்கள். இங்கேயும் (கொழுத்த) சம்பளத்தைப் பெறுகிறார்கள். இதற்கு வரையறை எதுவும் கிடையாது.

அப்படியென்றால் இவர்களுடைய வருமானத்தின் அளவு என்ன? அதற்கான வரிகளைச் செலுத்துகிறார்களா? அல்லது நியாயமான மருத்துவக் கட்டணத்தையாவது அறவிடச் சொல்கிறார்களா? அப்படிச் செய்வார்களா? ஏனென்றால் ஒரு தனியார் மருத்துவமனையில் நாளொன்றுக்கு நோயாளர்களைப் பார்க்கின்ற எந்த மருத்துவருக்கும் 10 ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத வருமானம் கிட்டும்.

அப்படியென்றால் அவருடைய மாத வருமானத்தின் அளவு - எல்லை என்ன? இவ்வளவுக்கும் இலங்கை இலவசக் கல்விக்கும் இலவச மருத்துவத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கின்ற நாடு. இவர்களும் இவர்களுடைய பிள்ளைகளும் இலவசக் கல்வியைமுழுமையாக அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள்.

இவர்கள் மருத்துவத்தைப் படித்து இந்த இடத்துக்கு வந்ததே இலவசக் கல்வி மூலமாகத்தான். மட்டுமல்ல, மருத்துவர்களாக அரச மருத்துவமனைகளிலோ சுகாதாரத்துறையிலோ பணியாற்றும்போது இவர்களுக்கான சலுகைகளும் (வாகன அனுமதிப்பத்திரமும்) கூட கிடைத்து விடுகிறது. அவற்றைப் பெறுவதற்காகவே இவர்களில் பெரும்பாலானோர் அரசாங்க மருத்துவத்துறையில் வேலை செய்கிறார்கள்.

ஆக மொத்தத்தில் தங்கள் நலனைக்குறித்தே அதிகமாகச் சிந்திக்கின்றவர்களாக மருத்துவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் பலர் அர்ப்பணிப்பான சேவைகளை வழங்குகின்றனர் என்பது உண்மை. ஆனால், இன்னொரு தரப்பு வேறு விதமாகவே வாழ்கிறது. ஆமாம், அவர்கள் அந்த மாதிரித்தான் வாழ்கிறார்கள்.

**(இதொன்றும் மருத்துவர்களுக்கு எதிரான கட்டுரை அல்ல. மருத்துவ உலகில் நடக்கின்ற மாஃபியா வியாபாரத்தைப் பற்றிய சிறுகுறிப்பே).** ■





# பாரம்பரிய பிரதேசங்களில் பறிபோகின்றதா தமிழ் மக்களின் வாழ்வுரிமை?

பி.மாணிக்கவாசகம்

நாடு நெருக்கடியில் மூழ்கிக்கொண்டிருக்கின்றது. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியை அரசு திடமாக நம்பிக்கொண்டிருக்கின்றது. ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் எதிர்பார்த்த வகையில் எதிர்பார்க்கின்ற தருணத்தில், எதிர்பார்க்கின்ற நிலையில் கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கின்றது.

ஊழலும் விரயமும் பொருளாதார மோசடிகளுமே நாட்டை மீளமுடியாத நெருக்கடிக்குள் சிக்கவைத்துள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர். இந்த நெருக்கடி நிலைமையைச் சீர்செய்வதற்காகப் பெறப்படுகின்ற அல்லது பெறுகின்ற நிதியுதவிகளை நெருக்கடியைத் தணிப்பதற்காகப் பயன்படுத்தப்படுமா என்பதில் சர்வதேசம் சந்தேகம் கொண்டிருக்கின்றது. இந்தச் சந்தேகமே உதவி வழங்குவதில் சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்கள் நாடுகளின் உதவி வழங்கும் செயற்பாட்டில் தயக்கத்தை ஏற்படுத்தி உள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஏற்கெனவே கடனில் மூழ்கியுள்ள இலங்கை தனது கடன் மீளளிப்புச் செயற்பாடுகளை மறுசீர் செய்து அதற்கான வழிவகைகளை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையை சர்வதேச நாணய நிதியம் முன்வைத்திருக்கின்றது. மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வழியில்லாத நிலைமையைச் சீர்செய்வதற்கே உதவிகள் வழங்கப்படுகின்றன. கடன் வாங்கி கடன்களை அடைக்கின்ற செயற்பாடு இடம்பெற்றுவிடக் கூடாது. பொருளாதாரச் சீரழிவுகளுக்கான ஊழல் மோசடி வீண் விரயம் போன்ற செயற்பாடுகளுக்கு புதிய உதவிகள் பயன்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே இந்த நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கின்றது என்ற கருத்தும் நிலவுகின்றது.

பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீண்டெழுவதற்கு அனைத்துத் தரப்பினரும் அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும் ஒத்துழைக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடிக்கொரு தடவை வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருக்கின்றார். அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட அரசியல் கட்சிகளிடமும் நாட்டு மக்களிடமும் அவர் கோரி வருகின்றார். அத்துடன் தமது முதலீடுகளை வழங்கி அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும் என, அவர் புலம் பெயர்ந்துள்ள தமிழ் மக்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

டொலர் பற்றாக்குறை, வருமானமின்மை போன்ற காரணங்களினால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சீரழிவை சீர்செய்வதற்கு இயலாமல் நாடு திண்டாடிக்கொண்டிருக்கின்ற இத்தகைய சந்தர்ப்பத்திலேயே தமிழ் மக்களின் பிரதேசங்களை பௌத்த சிங்கள மயமாக்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. முழு நாட்டையும் பொருளாதாரச் சீர்கேடு நிலை தடுமாறச் செய்துள்ள சூழலைப் பயன்படுத்தி தமிழ் மக்களை இனத்துவ ரீதியில் மேலும் அடக்கி ஒடுக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

பௌத்தமதக் குருக்கள் தொல்பொருள் திணைக்களத்தையும் இராணுவம் பொலிஸாரையும் பயன்படுத்தி இந்த இன ஒடுக்குமுறைச் செயற்பாட்டை முன்னெடுத்திருக்கின்றார்கள். இது நாட்டில் சிங்கள பௌத்த தேசிய மயமாக்குவதற்காக தேசிய சிறுபான்மையினர் மீது மேற்கொள்ளப்படுகின்ற இன அழிப்பு நடவடிக்கையாகவே அமைந்திருக்கின்றது. தமிழ் மக்கள் மீது பௌத்தத்தைத் திணிப்பதையும் தமிழ் மக்களின் தாயகப் பிரதேசத்தை சிங்கள மயமாக்குவதையும் இது நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் வடக்குக் கிழக்கு இணைந்த தாயகப் பிரதேசத்தின் இதயபூமியாகக் கருதப்படுகின்ற முல்லைத்தீவிலும் தமிழர் தாயகப் பிரதேசத்தின் தலைநகராகத் திகழ்ந்த திருகோணமலையையும் சிங்கள பௌத்தத் திணிப்பின் மூலம் துண்டாடி சீரழிப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

உலகளாவிய மதங்களில் இந்து மதம் சிறப்பானது, முக்கியமானது. அந்த மதத்தின் ஐந்து ஈஸ்வரங்கள் எனப் போற்றப்படுகின்ற ஆலயங்களில் ஒன்றாகிய கோணேஸ்வரம் ஆலயத்தைக் கபளீகரம் செய்து சிங்கள மயமாக்குவதற்கு தொல்பொருள் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. தமிழ் மக்களையும் இந்துக்களையும் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ள இந்த நடவடிக்கைக்கு எதிர்க்குரல் எழுப்பி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றார்கள்.

இந்த நிலைமையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர்மலை இந்து ஆலயப் பிரதேசத்தைத் தொல்பொருள் திணைக்களத்திற்குச் சொந்தமான பிரதேசமாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. குருந்தூர்மலை இந்து ஆலய விவகாரம் ஏற்கெனவே நீதிமன்ற நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது. பூர்வீக இந்து ஆலயம் அமைந்துள்ள அந்த இடத்தில் வலிந்து பௌத்த மதம் திணிக்கப்பட்டது.

அந்த இந்து ஆலயப் பகுதியில் புத்தர் சிலையை நிறுவி பின்னர் பௌத்த விகாரையொன்றை அமைக்கும் நடவடிக்கைகள் தொல்பொருள் திணைக்களம் மற்றும் ஆயுதப்படைகளின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன. அதனை எதிர்த்துப் போராடிய இந்தப் பிரதேசத்துப் பூர்வீகத் தமிழ் மக்கள் நீதிமன்றத்தையும் நாடியிருந்தார்கள். அந்த இடம் இந்துக்களுக்குச் சொந்தமானது என்பதைக் கண்டறிந்து, அங்கு வேற்று மதக் கட்டடங்கள் அமைக்கக் கூடாது. புதிதாக எந்தவித நிர்மாண வேலைகளும் இடம்பெறக் கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. மாவட்ட நீதிபதி அந்தப் பிரதேசத்தை நேரில் பார்வையிட்டுத் திரும்பிய பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஆனால், அந்த நீதிமன்ற உத்தரவை மீறி, இராணுவத்தின் பாதுகாப்பு உதவியுடன் குருந்தூர்மலையில் பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்லாமல், குருந்தூர்மலையைச் சூழவுள்ள பிரதேசத்தில் பூர்வீகமாக வசித்து வந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான தண்ணிமுறிப்பு கிராமப் பிரதேசத்தின் 632 ஏக்கர் காணிகளை தொல்பொருள் திணைக்களம் எல்லைக் கற்களைப் பதித்து, தனது உடைமையாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றது.

இதனை எதிர்த்துப் போராட்டம் நடத்தியவர்களைப் பொலிஸார் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தி இருக்கின்றார்கள். இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் எனக் கூறி, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் சமூகச் செயற்பாட்டாளர் மயூரன் ஆகியோரை பொலிஸார் கைது செய்திருக்கின்றனர். அத்துடன் சட்டத்தரணி சுகாஷ் உட்பட மேலும் நான்கு பேரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை இதனை எழுதும்போது - பொலிஸார் எடுத்திருந்தனர்.

குருந்தூர்மலையையும் அதன் சூழலையும் சிங்கள பௌத்த பேரினவாதம் ஆக்கிரமிக்கின்ற செயற்பாட்டுக்கு எதிராக வாழ்வுரிமை மற்றும் மத வழிபாட்டு உரிமை மீறல் என்ற அடிப்படையிலேயே மக்கள் போராட்டத்தில் குதித்திருக்கின்றார்கள். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், குருந்தூர்மலையில் தொல்பொருள் திணைக்களத்தினரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாகவே பொலிஸாரின் ஆரம்ப சட்ட நடவடிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது. அத்துடன் அங்கிருந்த பணியாளர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாகவும் அதனடிப்படையில் அவர்களைக் கைது செய்வதற்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குருந்தூர்மலையில் எவ்விதமான கட்டுமாண வேலைகளையும் செய்யக் கூடாது என்பது நீதிமன்ற உத்தரவு. அதனையும் மீறி அங்கு பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. மேலும், நிர்மாண வேலைகளைச் செய்வதற்காக கட்டடப் பொருட்கள் அங்கு குவிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அத்தகைய ஓரிடத்திலேயே தொல்பொருள் திணைக்களத்தினருடைய கடமைகளுக்கு போராட்டக்காரர்கள் இடையூறு விளைவித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது.

நீதிமன்றத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ள இடத்தில் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டிருப்பது அப்பட்டமான நீதிமன்ற உத்தரவை மீறிய செயலாகும். நீதிமன்றம் தடை செய்துள்ள இடத்தில் - நீதிமன்ற உத்தரவை மீறி கட்டடம் கட்டப்பட்டுள்ள இடத்தில் பணியாளர்கள் எத்தகைய பணியில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதும் தொல்பொருள் திணைக்களத்தினர் எத்தகைய கடமையில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதும் கேள்விக்கு உரியது. அந்த இடத்தில் கட்டடத்தை நிர்மாணித்தவர்கள் நீதிமன்ற உத்தரவை மீறியிருக்கின்றார்கள். அதேவேளை தொல்பொருள் திணைக்களத்தினரும் நீதிமன்ற உத்தரவை மீறியிருக்கின்றார்கள் என்றே பொருள் கொள்ள வேண்டி உள்ளது.


இத்தகைய நிலைமையில் தடை செய்யப்பட்டுள்ள ஓரிடத்தில் கடமைக்கு இடையூறு விளைவித்ததாகவும் பணியாளர்களுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் குற்றம் சுமத்தி போராட்டக்காரர்களைக் கைது செய்திருக்கின்ற பொலிஸாரின் நடவடிக்கை கேள்விக்கு உரியதாகும்.

அதேவேளை, பாரம்பரிய இந்து ஆலயம் அமைந்துள்ள குருந்தூர்மலைப் பிரதேசத்தைத் தொல்பொருள் திணைக்களம் அபகரித்து அங்கு பௌத்த மதத்தைத் திணித்துள்ளமையும் அதனைச் சூழவுள்ள 632 ஏக்கர் காணிகளைத் தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்த முற்பட்டிருக்கின்றமையும் அப்பட்டமான தமிழர்கள் மீதான இன மத அழிப்பு நடவடிக்கை என்றே கொள்ள வேண்டும்.

இதேபோன்று தேவார காலத்துப் பாடல் பாடப்பட்ட புராதன வரலாற்றுப் பெருமையைக் கொண்டுள்ள திருகோணமலை கோணேஸ்வர ஆலயத்துக்குச் சொந்தமான காணிகளைத் தொல்பொருள் திணைக்களம் கைப்பற்றி அங்கு சுற்றுலா மையம்

(18 ஆம் பக்கம் பார்க்க...)

செந்தமிழ்ச்செல்வர் பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா



04

# குறள் இன்பம்

திருக்குறள், காமத்துப்பாலின் இனிய காட்சிகளின் இன்பத்தைப் பகிர்ந்துகொள்ளும் கட்டுரைத்தொடர்.

**இல்லாளுடன் சேர்வதே இனிதான இன்பம்!**

பதினெண்கணக்கு நூல்களில் ஒன்றாக உள்ள திருக்குறள் சங்கமருவிய காலத்தில் தோன்றிய இலக்கியம். சங்ககாலத்திலும் அதற்கு முன்னரும் தமிழ் மக்களின் வாழ்வியலில் கட்டுக்கோப்பான முறைகள் பெரும்பாலும் கடைப்பிடிக்கப்படவில்லை. காதலும் வீரமும் வாழ்வியலில் கலந்திருந்தன. ஒருவனுக்கு ஒருத்தி என்பது அவரவரின் விருப்பத்தைப் பொறுத்துத் தனிப்பட்டவகையில் கடைப்பிடிக்கப்பட்டிருந்ததே தவிர, ஆண்களுக்கு அது ஒரு பொதுவான வாழ்வியலாக இருக்கவில்லை. பரத்தையரின் தொடர்பு மிகவும் சாதாரணமாக இருந்தது. பரத்தையரிடம் சென்று வரும் ஆண்களை அவர்களது மனைவிமார் ஒருகுற்றமாக வெறுத்து ஒதுக்கும் மனோபாவம் மனைவிமாரிடமும் இருந்ததில்லை, மக்களிடமும் இருந்ததில்லை. ஆனால், சங்கமருவிய கால இலக்கியங்கள் ஒருவனுக்கு ஒருத்தி வாழ்வியலையும் சமூக ஒழுக்க நெறிகளையும் அரசியல் நெறிமுறைகளையும் வகுத்து எழுந்தன. சமூகத்தை சீர்திருத்தும் வகையில் மக்களின் வாழ்வியலைக் கட்டமைத்தன. அந்த முயற்சியில் தலையாய பங்கு வகிப்பது திருக்குறள். அதனால்த்தான் பரத்தையர் தொடர்பினைக் கண்டித்தும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டை வலியுறுத்தியும் திருவள்ளுவர் எழுதினார்.

அறத்துப்பாலில், இல்லறவியலில் ஒழுக்கம் உடைமை, பிறன் இல் விழையாமை என்று இரண்டு அதிகாரங்களையும் பொருட்பாலின் நட்பியலில் வரைவின் மகளிர் என்று ஓர் அதிகாரத்தையும் அந்த நோக்கத்திற்காகவே படைத்து அகிலத்தை நேர்வழிப்படுத்தும் அறிவுரைகளை நேரடியாகவே சொல்லும் பொய்யாமொழிப் புலவர், ஆணும் பெண்ணும் அனுபவிக்கும் இவ்வுலகத் தலைமை இன்பத்தைச் சொல்லும் காமத்துப்பாலிலும் ஆங்காங்கே மக்களை நெறிப்படுத்தியுள்ளமை உலகத்து மக்களில் அவர் கொண்டுள்ள ஒப்பற்ற அக்கறையை எடுத்துக்காட்டுகிறது. அதற்கு உதாரணமாக வரும் ஒரு குறள் இது.

**"தம் இல் இருந்து தமதுபாத்து உண்டற்றால்**
**அம்ம அரிவை முயக்கு"**
**(1107)**

தனது இல்லத் தலைவியுடன் சேர்ந்து அனுபவிக்கும் இன்பம், ஒருவன் தான் சம்பாதித்த பொருளைத் தன்வீட்டில் உள்ளவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து, எல்லோருடனும் சேர்ந்து உண்ணும்போது கிடைக்கும் மகிழ்ச்சிக்கு நிகரானதாகும் என்பது இதன் நேரடிப் பொருளாகும்.

**காற்றும் நுழையாது, காதலுக்கு விலை ஏது?**

கணவன் வெளியூர் செல்கிறான். நீண்ட நாட்கள் மனைவியைப் பிரிந்திருக்க நேரிடுகிறது. தொலைத்தொடர்பு வசதிகள் இல்லாத அந்தக் காலத்தில் என்றாலும் சரி, கண்டம் விட்டுக் கண்டம் சென்றாலும் முகம்பார்த்தே பேசக்கூடிய வசதிகள் உள்ள இந்தக்காலத்தில் என்றாலும் சரி பிரிவு பிரிவுதான்! அருகருகே இருவரும் இல்லாத நிலையில் உள்ளமும் உடலும் உருகி வாடுவதைத் தவிர்க்க முடியாது. அவ்வாறு பிரிந்திருந்து மீண்டும் இருவரும் சந்திக்கும்போது சூழலையும் மறந்து இருவரும் இறுக அணைத்துக்கொள்வதும் அதுவரை தேக்கி வைத்திருந்த ஆசையெல்லாம் ஆனந்தக்கண்ணீராய் வெளிப்படுவதும் எல்லாக் காதலர்களின் வாழ்விலும் இயல்பானது.

அந்த நேரத்தில் இடம், பொருள், ஏவல் எதையும் மனம் பார்ப்பதில்லை. அச்சம், மடம், நாணம் எல்லாவற்றுக்கும் விடை கொடுத்து தன் இச்சைக்குரியவனை இறுகத் தழுவிக்கொள்ளும் அந்த நிலை காதலர்களுக்கு மிகவும் இனிமையானது என்று உள்ளத்து உணர்வுகளை வள்ளுவப் பெருந்தகை இந்தக் குறளில் படம்போல வரைந்து தந்திருக்கின்றார்.

காதலர்கள் பிரிந்திருந்து மீண்டும் சேர்கின்ற சந்தர்ப்பங்களில் மட்டுமல்ல, பொதுவாகவே அன்பினால் இணைந்த காதலர்கள் தனிமையில் ஒருவரை ஒருவர் தழுவிக்கொள்ளும்போதும் இறுக அணைத்துக்கொள்வதுதான் இனிமை தரும். அந்த அணைப்பு எப்படிப்பட்டது? இருவருக்கும் இடையில் காற்றுக்கூடப் புகுந்து கொள்ள முடியாதவாறு இருக்குமாம்.

**"வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை**
**போழப் படாஅ முயக்கு" (1108)**

இருவருக்கும் இடையே காற்றுக்கூட நுழைய முடியாத அளவுக்கு இடைவெளியில்லாமல் இருவரும் விரும்பி அணைத்துக் கொள்வதே காதலர்களுக்கு இனிமை தரும் என்பது இந்தக் குறளின் நேரடிக் கருத்து.

**இன்பமும், பேரின்பமும்!**

ஊடல் என்பது பொய்க் கோபத்தினால் காதலர்களில் ஒருவர் மற்றவருடன் போலியாகச் சண்டை பிடித்தல், பொய்க் கோபம் கொண்டு ஒருவருடன் மற்றவர் பேசாமல் இருப்பதும் ஊடலே. அவ்வாறு ஊடல் கொண்டவர், தான் என்ன காரணத்திற்காக எதற்காக ஊடல் கொண்டாரோ அந்தக் காரணம் தவறு என்று தானாகவோ அல்லது மற்றவர் அன்போடு தெளிவுபடுத்தியதனாலோ அதனை ஏற்றுக்கொள்ளுதலையே திருவள்ளுவர் உணர்தல் என்று சொல்லியிருக்கிறார். ஊடலுக்குப் பின்னர் உணர்தல் நடந்துவிட்டால், அன்பு மனங்கள் இரண்டும் ஆனந்தக்கூத்தாடும் அல்லவா? அதன் விளைவு இயல்பாக நடக்கும். இருவரும் சேர்ந்து கொள்வார்கள். இவைதான், காதலில் மிகவும் சிறந்து வாழ்கின்ற காதலர்கள் பெறுகின்ற உண்மையான பயன்களாகும். காதல் வாழ்வில் உச்சம் அதுதான்.

பண்டைக்காலத்தில் பரத்தையரிடம் சென்றுவரும் கணவனிடம் ஊடல்கொள்வதும் அவன் ஏதோவெல்லாம் சொல்லி, எப்படியெல்லாமோ முயன்று, இறுதியில் மனைவியின் தோழிகள் மூலம் தூதுவிட்டு, மனைவியை உணரச் செய்வதும் அதன்பின்னர் ஊடல் முடிந்து, கூடல் நடந்து இருவரும் ஒன்றாகச் சேர்வதும் மிகவும் சாதாரணமான நிகழ்வுகளாக இருந்திருக்கின்றன. இந்தக் காலத்தில் அவ்வாறு கணவன் ஒருவன் நடப்பானென்றால், அது மணமுறிவில் போய் முடியும். இது இரு பாலாருக்கும் பொருந்தும். ஆயினும், ஒழுக்கம் தவறிய வாழ்க்கைத் துணையுடன் தவிர்க்க முடியாத பல்வேறு காரணங்களுக்காகச் சமரசம் செய்து கொண்டு அல்லது கண்டும் காணாமல் இருந்துகொண்டு இல்வாழ்க்கையினைத் தொடர்கின்ற வாழ்க்கைத் துணைவர்களும் ஆயிரத்தில் ஒருவராக, அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கத்தான் செய்கின்றார்கள். அவர்கள் வள்ளுவர் காட்டும் இன்பவாழ்வைக் கண்டிருக்க மாட்டார்கள். ஆனால், அதே வேளை சின்னச் சின்ன விடயங்களுக்காக சில்லறைச் சண்டை போடுவதும் சிறிது நேரத்தில், சண்டையை மறந்து இருவரும் சிரித்துக்கொள்வதும் இறுதியில் இருவரும் விரும்பிச் சேர்ந்து மகிழ்ச்சிக்கடலில் நீந்துவதும் வீட்டுக்கு வீடு நடக்கின்ற இல்லற விளையாட்டுக்கள்தானே! இதனைத்தான் வள்ளுவப் பெருந்தகை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே வாழ்க்கை நெறியை வகுக்கும் இலக்கியமாகப் படைத்திருக்கிறார்.

**"ஊடல் உணர்தல் புணர்தல் இவை காமம்**
**கூடியார் பெற்ற பயன்" (1109)**

ஒருவரோடொருவர் பொய்ச் சண்டை போடுதல், பின்னர் உண்மையைப் புரிந்து கொள்ளுதல் அதன்பின்னர் இருவரும் சேர்தல் என்பனவே இன்பவாழ்வில் இணைந்துள்ளவர்கள் பெறுகின்ற பயனாகும்.

இதனை இன்னும் ஒரு வகையாக திருக்குறளின் இறுதிக்குறள் இப்படிக்கூறுகிறது.

**"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கு இன்பம்**
**கூடி முயங்கப் பெறின்" (1330)**

ஆம், காதல் வாழ்வில் ஊடுதல்தான், பொய்ச் சண்டையிடல்தான், இன்பமானது. ஆனால், ஊடல் தணிந்தபின்னர் கூடுவது அதனைவிட இன்பம்தருவது. அது பேரின்பமாகும்.

(தொடரும்...)

முருகபூபதி



# இலக்கியவாதி இந்திய நாடாளுமன்றம் பிரவேசித்த கதை

05 முதல் சந்திப்பு

# இயக்கமாக மாறிய தமிழச்சி சுமதி தங்கபாண்டியன்

உலகில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை எப்போது வழங்கப்பட்டது..? என்பதை ஆராயும்போது பல சுவாரஸ்யமான கதைகள் தெரியவரும்.

பெண்கள் தேர்தலில் வாக்களிக்க வேண்டுமாயின் அவர்கள் வேலைக்குச் சென்று வரி செலுத்த வேண்டும், திருமணம் ஆகியிருக்க வேண்டும் முதலான நிபந்தனைகளும் ஒரு காலத்திலிருந்தன. பிற்காலத்தில் பெண்கள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டி நாட்டின் பிரதமராக - அதிபராக மாறிய கதைகள் பலவற்றை அறிவீர்கள்.

கல்லூரியில் ஆங்கில இலக்கிய விரிவுரையாளராகவும் கலை, இலக்கியவாதியாகவும் விளங்கி 2019 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டின் தென் சென்னை தொகுதியிலிருந்து தெரிவாகி இந்திய நாடாளுமன்ற உறுப்பினராகியிருக்கும் ஆளுமை மிக்க ஒரு பெண்ணைப்பற்றிய கதை இது.

அவரது இயற்பெயர் சுமதி. புனைபெயர் தமிழச்சி.

தமிழச்சியின் தந்தையார் தங்கபாண்டியன், அறிஞர் அண்ணாதுரை 1967 இல் தமிழகத்தின் முதல்வரான சமயத்தில் அவரது அமைச்சரவையில் கல்வி அமைச்சராகப் பதவி வகித்தவர். அருப்புக் கோட்டை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர். தி.மு.கவிலிருந்த எம்.ஜி.ஆர், பறங்கிமலையிலும் ஆண்டிப்பட்டியிலும் தேர்தலில் நின்று வென்றவர். அனைத்திந்திய அண்ணா தி.மு.க தொடங்கிய பின்னர் எம்.ஜிஆர், அருப்புக்கோட்டையில் களத்தில் இறங்கி தங்கபாண்டியனைத் தோற்கடிக்கிறார். தொடர்ந்தும் தி.மு.க.விலிருந்த தங்கபாண்டியன், ராஜபாளயத்தில் நடந்த ஒரு கலவரத்தை நேரில் பார்த்து அங்கு அமைதியை ஏற்படுத்தச் சென்ற வேளையில் மாரடைப்பு வந்து காலமானார்.

தந்தையின் திடீர் மறைவு மகள் தமிழச்சியை மிகவும் பாதித்தது. தமது பூர்வீகம் மல்லாங்கிணறில் தந்தையின் நினைவாக உருவாக்கப்பட்ட நினைவு மண்டபத்தில் வருடந்தோறும் பல தானதருமங்களையும் பொது நிகழ்ச்சிகளையும் தமிழச்சி நடத்திவருகிறார். தொழில் நிமித்தம் சென்னை மாநகரவாசியானபோதிலும் அடிக்கடி கிராமத்துக்குச் சென்று மக்களைச் சந்தித்து திரும்புகிறார். திரும்பும்போது அவருக்குப் பல கவிதைகளும் கட்டுரைகளும் வரவாகின்றன. அவற்றில் கிராமத்தின் ஆத்மாவும் மலர்களின் வாசனையும் கனிகளின் சுவையும் மரங்களின் கிளைகளில் பிறக்கும் காற்றும் படர்ந்திருக்கும்.




ஈழத்தின் மூத்த எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை சென்னையில் தமது மித்ர பதிப்பகத்தின் முழுநாள் இலக்கிய விழாவை வெகுசிறப்பாக நடத்தி முடித்த பின்னர், நான் வதியும் அவுஸ்திரேலியாவில் நியூசவுத்வேல்ஸ் மாநில மாநகர் சிட்னியிலும் ஒரு பெருவிழாவை 28-08-2004 ஆம் திகதி சிட்னி ஹோம்புஷ் ஆண்கள் உயர்நிலைக்கல்லூரியில் நடத்தினார்.

அதற்குத் தலைமை தாங்கவருமாறு எஸ்.பொவின் மூத்த புதல்வர் மருத்துவர் அநுரா என்னை அழைத்திருந்தார். இவ்விழாவில் மூத்த கவிஞர் அம்பியின் பவளவிழா நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. அன்றைய விழாவில் மித்ர வெளியீடுகளான ஆசி.கந்தராஜாவின் உயரப்பறக்கும் காகங்கள், தமிழச்சி சுமதி தங்கபாண்டியனின் எஞ்சோட்டுப்பெண், நடேசனின் வண்ணாத்திக்குளம், கவிஞர் அம்பியின் அந்தச்சிரிப்பு, எஸ்.பொவின் சுயசரிதை வரலாற்றில் வாழ்தல் இரண்டு பாகங்கள், எஸ்.பொ ஒரு பன்முகப்பார்வை மற்றும் பூ ஆகிய நூல்களும் வெளியிடப்பட்டன.

மண்டபம் நிறைந்த இலக்கிய சுவைஞர்கள் அனைவருக்கும் அன்று இராப்போசன விருந்தையும் பொன்.அநுரா வழங்கினார். ந.கருணாகரன், பேராசிரியர் பொன்.பூலோகசிங்கம், திருநந்தகுமார், டொக்டர் ஜெயமோகன், மா.அருச்சுணமணி, தனபாலசிங்கம், குலம் சண்முகம் ஆகியோருடன் இலங்கையிலிருந்து வருகை தந்த ஞானம் ஆசிரியர்டொக்டர் தி.ஞானசேகரன், தமிழகத்திலிருந்து வருகை தந்த தமிழச்சி சுமதி தங்கபாண்டியன் ஆகியோரும் உரையாற்றினர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த விழாவில் நேரம் பற்றாக்குறையினால் எஸ்.பொ ஒரு சில நிமிடங்கள்தான் பேசினார். இராப்போசன விருந்தின்போதுதான் சுமதி தமிழச்சி, தான் புலம்பெயர்ந்த இலங்கை தமிழர்களின் ஆங்கில கலை இலக்கிய படைப்புகள் தொடர்பான ஆய்வுக்காக அவுஸ்திரேலியாவுக்கு வந்திருப்பதாகவும் மெல்பனுக்கும் வரவிருப்பதாகவும் சொன்னதுடன், தனக்கு தங்குமிட வசதி செய்து தருமாறும் கேட்டுக்கொண்டார்.

அவ்வாறு அறிமுகமான தமிழச்சி சுமதி, தமிழக ஐ.பி.எஸ். அதிகாரி சந்திரசேகரின் மனைவி என்பதையும் இரண்டு பெண்குழந்தைகளின் தாய் என்பதையும் அறியமுடிந்தது.

எமது இல்லத்தில் அவர் தங்கியிருந்த நாட்களில் தொடர்ந்து இலக்கியமே பேசினோம். அவருடனான சந்திப்பு நேர்காணலை கொழும்பு தினக்குரல் வார இதழில் எழுதினேன். அக்காலப்பகுதியில் அவர் சென்னை ராணிமேரி கல்லூரியில் ஆங்கில இலக்கியத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார்.

தந்தை தங்கபாண்டியனின் திடீர் மறைவு அவரை பெரும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியிருந்தது. அவ்வேளையில் 'கையறுநிலை' என்ற தலைப்பில் தமது தந்தையாருக்கு அஞ்சலி செலுத்தும் கவிதையையும் குங்குமம் இதழில் எழுதியிருந்தார். இதுவே அவருடைய முதல் இலக்கியப்படைப்பு.

தமிழச்சி சுமதி, அவுஸ்திரேலியாவில் தங்கியிருந்த காலப்பகுதியில் எழுத்தாளர்கள் அருண். விஜயராணி, நடேசன், அக்கினிக்குஞ்சு யாழ்.பாஸ்கர், சட்டத்தரணி செ.ரவீந்திரன் ஆகியோரையும் சந்தித்தார். அவ்வாறு இலக்கிய நட்புறவு கொண்டிருந்த அவர் எமது குடும்ப சிநேகிதியாகவும் மாறினார்.

தமிழச்சியின் எஞ்சோட்டுப்பெண், வனப்பேச்சி, அருகன், மஞ்சனத்தி, பாம்படம் முதலான கவிதைத் தொகுப்புகள் அவர் உளமாற நேசிக்கும் மல்லாங்கிணறு கிராமத்தையே உயிர்ப்புடன் சித்திரிக்கின்றன.

தமிழ்நாடு கணையாழி இதழ், அவுஸ்திரேலியா சிறப்பிதழை வெளியிட்டபோது, அதில் பிரசுரமான மெல்பன் எழுத்தாளர் (அமரர்) அருண். விஜயராணியின் தொத்துவியாதிகள் என்ற சிறுகதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, சென்னைப்பல்கலைக்கழகத்தில் அவுஸ்திரேலியன் ஸ்டடீஸ் சென்டரில் நடந்த கருத்தரங்கில் ஆய்வு செய்தார்.

தமிழச்சியின் பாம்படம் என்னும் கட்டுரைத் தொகுப்பில் “சிலோன் காலனி” என்ற படைப்புள்ளது.

தமிழச்சியின் கிராமத்துக்கு அருகேயுள்ள ஒரு ஈழ அகதிகளின் முகாமில் அவர் சந்தித்த ஒரு சிறுமி பற்றிய கதை. வட- கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் (1956-2008) அறிக்கையின் ஒரு சிறுகுறிப்புடன் அந்தக்கதையைச் சொல்கிறார் தமிழச்சி.

விடுமுறை காலத்தில் கிராமத்துக்குச்செல்லும் போது, அந்த அகதிமுகாம் பிரதேசத்தில் நடமாடிய தமிழச்சியை, அந்த ஈழத்து அகதிச் சிறுமி யுகாமினி கவர்ந்துவிடுகிறாள். தனது வீட்டுக்கு அவளை அழைப்பதற்கு தமிழச்சி பலதடவை முயன்றும் அவள் வரவில்லை. காரணமும் தெரியவில்லை. ஒருநாள் யுகாமினியின் குடும்ப சூழ்நிலை பற்றி நன்கு தெரிந்து வைத்துள்ள தமிழச்சியின் ஊர்ச்சிநேகிதியான பெருமாளக்காவே அந்தப்புதிரை இப்படி அவிழ்க்கிறாள்.

“யுகாமினியோட குடும்பம் மொத்தமும் ஷெல் ஆமே, அதுல அடிபட்டுச்செத்துப்போச்சுது. அவளோட பாட்டிதான் சின்னவளா இருந்தவள இங்க கூட்டிவந்து வளர்த்துச்சுது. அதுவும் இரண்டு வருடத்துக்கு முன்னால செத்துப்போச்சு. காலனி ஆளுகதான் அதுக்கப்புறம் அவள பார்த்துக்கறாங்க. கவர்மென்ட் கொடுத்த வீட்டுலதானே சமைச்சு இருந்துக்கிறா. ராத்திரிக்கு மட்டும் துணைக்கு அந்தக்கிருபாணியும் காலனி பெரிசுகளும் மாறி மாறி துணைக்குப் படுத்துக்குவாங்க. இப்ப தானே மீன் குழம்பு வைக்கிற அளவுக்கு தேறிட்டா. சாமி கை விட்டப்புறம், சக மனுஷங்கதான துணை. ஆனா, ரொம்பச்சூட்டிகை. படிப்பு படம் வரையறுதுன்னு ஸ்கூலுக்கே செல்லப்பொண்ணு அவதான். போன வருடம் அவ பெரியவளானப்ப, டீச்சர்மாருக கூடப் படிக்கிற புள்ளகன்னு காலனியே விழாக்கோலம் தான். ஆகாசமும் கரிசல் மண்ணும்தான் அவளுக்கு இப்ப அப்பன் ஆத்தா.”

இந்த ஆக்கத்தை தமிழச்சி இப்படி முடிக்கிறார்: “யுகாமினி அந்தப்புதைகுழியில் அமிழாமல் இந்தக் கரிசலின் பருத்திப்பூவாய் மலரவேண்டுமென நினைத்துக்கொண்டேன். அவளிடமிருக்கின்ற ஞாபகத்தின் எச்சம் கிளராமல் நாளை என் சந்திப்பில் கவனமாக இருக்கவேண்டுமெனவும் தீர்மானித்துக்கொண்டேன். அதில் என் சுயநலமும் இருக்கிறது என் குற்றவுணர்வை எதிரே இருக்கின்ற அந்தச்சுமைதாங்கிக் கல் மேல் முழுவதுமாக இறக்கிவைக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அனாரின் கீழ்க் கண்ட கவிதை நினைவுக்குவர வீடு திரும்புகிறேன். ‘இருள் என்னைக்கவ்வியபடி தூக்கிச்செல்கிறது ஒரு வேட்டை நாயென.’ (அனார் - கிழக்கிலங்கையில் சாய்ந்தமருதுவில் வசிக்கும் கவிஞர்)

2004 இல் அவுஸ்திரேலியாவில் ஆய்வுப்பணியைத் தொடங்கிய தமிழச்சி, 2018 ஆம் ஆண்டு தனது ஆய்வினை நிழல் வெளி என்ற பெயரில் தனிநூலாக்கிய பின்னர் அதனை வெளியிடுவதற்காக மெல்பனுக்கு தமது குடும்பத்தினருடன் வருகை தந்தார்.

எமது அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் ஏற்பாட்டில் அவ்வேளையில் சங்கத் தலைவர் சங்கர சுப்பிரமணியன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

கடந்த 2019 ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தென் சென்னை தொகுதியில் அ.தி.மு.க வேட்பாளர் ஜெயவர்தனை எதிர்த்து போட்டியிட்டு 2,62,212 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியீட்டினார்.

■

# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

ரமணி

36

தமிழ்த்திரை உலகின் முடிசூடா மன்னர்களான சிவாஜி கணேசனும் எம்.ஜி.ஆரும் மிக இலகுவாக அந்தக் கிரீடத்தைக் கைப்பற்றவில்லை. நாடக மேடையில் இருந்து கதாநாயகனாக திரை உலகில் காலடி வைத்தவர் சிவாஜி. சிறு சிறு வேடங்களில் நடித்து கதாநாயகனாக மிளிர்ந்தவர் எம்.ஜி.ஆர். கதாநாயகனாக முதல் படத்தில் நடிக்கும்போதே இருவருக்கும் பல ரூபங்களில் எதிர்ப்புகள் கிளம்பின. படத்தைக் கைவிடப்போகிறார்கள், கதாநாயகனை மாற்றப் போகிறார்கள் போன்ற தகவல்களால் இருவரும் பயந்து பயந்துதான் நடித்தார்கள்.

1946 ஆம் ஆண்டு தீபாவளியன்று ஜூபிடர் பிக்சர்ஸ் தயாரித்த 'ஸ்ரீமுருகன்', டி.ஆர்.ராமச்சந்திரன் கதாநாயகனாக நடித்த 'வித்யாபதி' ஆகிய இரு படங்களும் திரைக்கு வந்தன. அது வரையில் ஒரே நிறுவனம் தயாரித்த இரு திரைப்படங்கள் ஒரே நாளில் வெளிவந்ததே இல்லை. ஆகவே, இந்தியாவில் அப்படிப்பட்ட சாதனையைச் செய்த முதல் நிறுவனம் என்ற பெருமையை ஜூபிடர் பிக்சர்ஸ் பெற்றது. இரு படங்களும் படுதோல்வியடைந்தன.

ஜூபிடர் பிக்சர்ஸ் நிறுவனத்தில் கதாசிரியராக மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்த ஏ.எஸ்.ஏ.சாமி. அவருக்கு ஒரு படத்தை இயக்குகின்ற வாய்ப்பை கொடுக்க முடிவெடுத்த ஜூபிடர் பிக்சர்ஸ் அதிபர்களான சோமுவும் மொகிதீனும் ஒரு நாள் ஏ.எஸ்.ஏ.சாமியை அழைத்து அவரிடம் மனம் விட்டுப் பேசினார்கள்.

நஷ்டமடைந்திருக்கும் நிறுவனத்தைத் தூக்கி நிமிர்த்த வேண்டும் இது உங்களது முதல்படம். எமது ஒப்பந்தத்தில் உள்ள நடிகர்களை வைத்து படத்தை இயக்க வேண்டும் என நிபந்தனை விதித்தார்கள். அதற்கு ஒப்புக் கொண்ட சாமி "ராஜ குமாரி" எனும் கதையை எழுதினார். திரைக்கதையைக் கேட்ட ஜூபிடர் சோமுவும் மொகிதீனும் தங்கள் முடிவை அடியோடு மாற்றிக் கொண்டனர். "கதை நன்றாக இருக்கிறது. ஆனால், இந்தக் கதையை நமது கம்பெனி நடிகர்களை வைத்து எடுத்தால் நிச்சயமாக எடுபடாது. அதனால் கதாநாயகனாக பி.யு. சின்னப்பாவை கதாநாயகியாக டி.ஆர். ராஜகுமாரியையும் ஒப்பந்தம் செய்து விடுவோம்" என்றார்கள். எம்.கே.தியாகராஜா பாகவதரும் பி.யு.சின்னப்பாவும் அந்தக் காலகட்டத்தில் தமிழ்ப்பட உலகில் இருந்த இரண்டு சூப்பர் ஸ்டார்களாக வலம் வந்தனர். ஆனால், சாமியின் எண்ண ஓட்டம் வேறு மாதிரியாக இருந்தது.

"எனக்கு பி.யு.சின்னப்பாவும் டி.ஆர்.ராஜகுமாரியும் வேண்டாம். உங்களது 'ஸ்ரீமுருகன்' படத்திலே சிவனாகவும் பார்வதியாகவும் நடித்த ராமச்சந்திரனையும் மாலதியையும் நீங்கள் ஒப்பந்தம் செய்து தாருங்கள் போதும்" என்றார்.

அந்தக் கதைக்காக பெரிய நடிகர்களை ஒப்பந்தம் செய்ய தயாரிப்பாளர்கள் விரும்பிய போதும் சாமியின் மனதில் எம்.ஜி.ஆர்தான் இருந்தார்.

ஏ.எஸ்.ஏ.சாமி அப்படிச் சொன்னவுடன் சோமு அவர்களுக்கும் மொகிதீன் அவர்களும் அவர் சொன்னதை அப்படியே ஒப்புக் கொள்ளவில்லை. "இது நீங்கள் டைரக்ட் செய்யப் போகும் முதல் படம். அதில் பி.யு.சின்னப்பாவும் டி.ஆர்.ராஜகுமாரியும் நடித்தார்கள் என்றால் வெற்றி நிச்சயம். செலவைப் பற்றிக் கவலைப்படாமல் நாங்களே பெரிய நடிகர்களை ஒப்பந்தம் செய்யலாம் என்று சொல்லும் போது நீங்கள் ஏன் வேண்டாம் என்று சொல்கிறீர்கள்?" என்று ஏ.எஸ்.ஏ.சாமியிடம் கேட்டனர்.

"ராமச்சந்திரனையும் மாலதியையும் வைத்துக் கொண்டு இந்தப் படத்தை மிகப் பெரிய வெற்றிப் படமாக்க முடியும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அப்படி இருக்க எனக்கு எதற்கு மிகப் பெரிய நட்சத்திரங்கள்?" என்று ஏ.எஸ்.ஏ.சாமி சொன்னவுடன் "உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கை இருக்கும்போது அதில் குறுக்கிட நாங்கள் விரும்பவில்லை. உங்கள் விருப்பப்படியே படம் எடுங்கள்" என்று இயக்குனர் ஏ.எஸ்.ஏ.சாமிக்கு தயாரிப்பாளர்கள் இருவரும் பச்சைக் கொடி காட்டினார்கள்.

'ராஜகுமாரி' படத்துக்கு இசையமைக்கும் பொறுப்பை ஏற்றிருந்த எஸ்.எஸ்.சுப்பையா நாயுடு தனது மிக நெருங்கிய நண்பரான எம்.ஜி.ஆருக்கு அந்த இனிய செய்தியைச் சொன்னார். எம்.ஜி.ஆர் சந்தோசப்படவில்லை 'சாயா' என்றொரு படத்தில் கதாநாயகனாக ஒப்பந்தம் செய்யப்பட்டு, பல நாட்கள் நடித்த பின்னர் அந்த படத்திலிருந்து நீக்கப்பட்ட காயத்தின் வடு அந்த அளவிற்கு அவர் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது. "ஏ.எஸ்.ஏ.சாமி உங்களது நெருங்கிய நண்பர்தானே. ஆகவே அவரிடமே 'ராஜகுமாரி' பட நாயகன் நீங்கள்தானா என்பதைக் கேட்டு தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்" என்றார் எஸ்.எம்.சுப்பையா நாயுடு. ஏ.எஸ்.ஏ.சாமியை, எம்.ஜி.ராமச்சந்திரன் சந்தித்தபோது 'ராஜகுமாரி' படத்தின் நாயகன் அவர்தான் என்பதை உறுதிப்படுத்தினார் அவர்.

'ராஜகுமாரி' படம்தான் கதாநாயகனாக எம்.ஜி. ஆருக்கு முதல் படம் என்பதால் எம்.ஜி.ஆருக்கு அந்தப் படத்தில் சம்பளம் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் என்று முடிவு செய்யப்பட்டது . அதே படத்தில் இன்னொரு முக்கியமான பாத்திரத்தில் நடித்த டி.எஸ். பாலையாவுக்கு எம்.ஜி.ஆரின் சம்பளத்தைப் போல நான்கு மடங்கு சம்பளம் தரப்பட்டது.

பின்னாளில் எம்.ஜி.ஆர்.அவர்களோடு திரையுலகில் மிக நெருக்கமாக இருந்த பலர் இந்த 'ராஜகுமாரி' படத்தில் அவரோடு பணியாற்றினார்கள்.




எம்.ஜி.ஆர். நடித்த பதினாறு படங்களை இயக்கிய எம்.ஏ.திருமுகம் அந்தப் படத்தில் உதவி எடிட்டராகப் பணிபுரிந்தார்.

எம்.ஜி.ஆரை வைத்து அதிகமான படங்களைத் தயாரித்த நிறுவனம் என்ற பெயரைப் பெற்ற தேவர் பிலிம்ஸ் அதிபரான சாண்டோ எம்.எம்.ஏ.சின்னப்பா தேவர் 'ராஜகுமாரி'யில்தான் முதன்முதலாக எம்.ஜி. ஆரோடு நடித்தார். எம்.ஜி.ஆர் அவர்களின் பெரும்பாலான படங்களில் தவறாமல் இடம் பெற்ற இன்னொரு நடிகரான எம்.என்.நம்பியார் எம்.ஜி.ஆரோடு இணைந்து நடித்த முதல் படமும் இதே 'ராஜகுமாரி' தான். கலை உலகில் மட்டுமின்றி அரசியலிலும் எம். ஜி.ஆர். அவர்களோடு இணைந்து பல ஆண்டுகள் பயணம் செய்த கலைஞர் மு.கருணாநிதி எம்.ஜி. ஆரோடு இணைந்து பணியாற்றிய முதல் படமாகவும் 'ராஜகுமாரி' அமைந்தது கலைஞர் கருணாநிதி அந்தப் படத்திலே பணியாற்றக் காரணமாக அமைந்தவர் பிரபல பாடகரான சிதம்பரம்.எஸ்.ஜெயராமன். ஜூபிடர் பிக்சர்ஸ் தயாரிப்பதாக இருந்த 'உதயணன்' என்ற திரைப்படத்துக்கு இசையமைக்க இவர் ஒப்பந்தமானார்.அது தொடர்பாக அடிக்கடி ஜூபிடர் பிக்சர்சுக்கு வந்தபோது ஏ.எஸ். ஏ.சாமி அவர்களோடு அவருக்கு நல்ல நட்பு ஏற்பட்டது.

"என் மைத்துனரான மு.கருணாநிதி திராவிடர் கழகத்தில் இருக்கிறார். இப்போது 'குடியரசு' பத்திரிகையிலே பணியாற்றிக் கொண்டிருக்கும் அவர் மிகச் சிறந்த எழுத்தாற்றல் கொண்டவர். சந்தர்ப்பம் வரும்போது அவரைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று ஒரு முறை தன்னிடம் சிதம்பரம் ஜெயராமன் கூறியதை நினைவில் வைத்துக் கொண்டிருந்த ஏ.எஸ். ஏ.சாமி, தனக்கு 'ராஜகுமாரி' படத்தை இயக்குகின்ற வாய்ப்புக் கிடைத்ததும் தன்னு டன் இணைந்து வசனம் எழுத வரும்படி கலைஞர் கருணாநிதிக்கு அழைப்பு விடுத்தார்.

கோவைக்குச் சென்ற கலைஞர் கருணாநிதி, ஏ.எஸ். ஏ.சாமியைச் சந்தித்தார். கலைஞர் கருணாநிதிக்கு ஏற்கெனவே பல நாடகங்களை எழுதிய அனுபவம் இருந்ததால் ஏ.எஸ்.ஏ.சாமி சொன்ன காட்சிகளுக்கு எல்லாம் உடனுக்குடன் அவர் வசனங்களை எழுதிக் கொடுத்தார். வசனம் எழுதுவதில் அவருக்குள்ள ஆற்றலைப் பார்த்து அசந்து போன ஏ.எஸ்.ஏ.சாமி முழுத் திரைப்படத்திற்கும் அவரையே வசனம் எழுதச் சொன்னார்.

'சதி லீலாவதி' படத்திலே எம்.ஜி.ஆருக்கு நிச்சயமாக ஒரு வாய்ப்புத் தந்தே ஆக வேண்டும் என்று எம்.கே.ராதா அவர்கள் போராடியதைப்போல 'ராஜகுமாரி' படத்திலே தனது நண்பரான சின்னப்பா தேவருக்கு ஒரு வாய்ப்பினைப் பெற்றுத் தரப் போராடினார் எம்.ஜி.ஆர். 'ராஜகுமாரி' கதையின்படி ராணிக்கு ஒரு மெய்க்காப்பாளன் இருந்தான். அந்த மெய்க்காப்பாளனிடம் சண்டையிட்டு கதாநாயகன் அவரை வெல்கின்ற காட்சியிலே எம்.ஜி.ஆரோடு நடிக்க மிகப் பெரிய பயில்வான் ஒருவரை ஏற்பாடு செய்திருந்தார் தயாரிப்பாளரான சோமு. இறுதியில் எம்.ஜி.ஆரின் பிடிவாதம் வென்றது.

'ராஜகுமாரி' படத்தின் தயாரிப்பாளர்களான சோமுவுக்கும் மொகிதீனுக்கும் படத்தை எடுத்த வரையில் திரையிட்டுக் காட்டினார் இயக்குநர் ஏ.எஸ்.ஏ.சாமி. படம் மிகச் சிறப்பாக அமைந்திருப்பதாக அவர் எண்ணினார். ஆகவே படத்தைப் பார்த்துவிட்டு முதலாளிகள் இருவரும் தன்னை நிச்சயம் பாராட்டுவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் தியேட்டருக்கு வெளியே காத்துக் கொண்டிருந்தார் அவர். ஆனால், அவரது எதிர்பார்ப்பிற்கு முற்றிலும் மாறாக படத்தின் முதலாளிகள் இருவரும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு தியேட்டரை விட்டு வெளியே வந்தனர். அவர்கள் இருவருக்குமே படம் பிடிக்கவில்லை.

"முந்தைய இரு படங்களும் தோல்வியடைந்துள்ள நிலையில் இன்னொரு தோல்விப் படம் கொடுக்க வேண்டுமா என்று ஒரு முறைக்கு இரு முறை யோசித்துக் கொள்ளுங்கள்" என்று தன்னுடைய பங்குதாரரான சோமுவிடம் கூறினார் மொகிதீன். அவர் அப்படிக் கூறியவுடன் சோமு மிகப்பெரிய குழப்பத்துக்கு ஆளானார்.

இன்னொரு தோல்விப் படத்தை தங்களது நிறுவனம் தாங்காது என்று அவருக்கும் நன்றாகத் தெரிந்திருந்தது. ஆனால், அதே சமயம் 'ராஜகுமாரி' படம் நிறுத்தப்பட்டால் முதன் முதலாக அந்தப் படத்திலே இயக்குநராக அறிமுகமாகும் ஏ.எஸ். ஏ.சாமி, அந்தப் படத்தில் கதாநாயகனாக நடித்து வரும் ராமச்சந்திரன் ஆகிய இருவரின் எதிர்காலமும் கேள்விக்குறியாகி விடுமே என்று யோசனை செய்த அவர், அவர்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு வித்தியாசமான ஒரு முடிவை எடுத்தார்.

'எப்படியும் பாதிப் படத்துக்கும் மேலாக எடுத்துவிட்டோம். மீதமுள்ள நான்காயிரம் அடி படத்தையும் எடுத்துவிட்டுப் போட்டுப் பார்ப்போம். அதற்குப் பிறகும் படம் பிடிக்கவில்லை என்றால் யார் கண்ணிலும் காட்டாமல் படத்தை தூக்கிப் போட்டுவிடலாம்' என்பதுதான் மொகிதீனிடம் அவர் சொன்ன முடிவு.

எம்.ஜி.ஆர், ஏ.எஸ்.ஏ.சாமி ஆகிய இருவரின் எதிர்காலத்தை மனதில் கொண்டு மொகிதீனும் சோமுவின் முடிவை ஏற்றுக் கொள்ள 'ராஜகுமாரி' படத்தின் படப்பிடிப்புத் தொடர்ந்தது.


பலபோராட்டங்களைச் சந்தித்துவிட்டு திரைக்கு வந்த 'ராஜகுமாரி' திரைப்படம் மிகப் பெரிய வெற்றியைக் குவித்தது. அந்தப் படம்தான் தமிழ்த் திரைப்படக் கதாநாயகர்களின் பட்டியலில் ஒரு நிரந்தரமான இடத்தை எம்.ஜி.ஆருக்கு பெற்றுத் தந்தது. ■

# கல்யாணக் கனவு

தொடர்கதை

கனவு 42

யாழ் சத்யா



சஞ்சயனோ இந்த ஒரு விடயத்தில் மட்டும் அவள் பேச்சைக் கேட்கத் தயாராயில்லை. வைஷாலியோ அவனோடு ஒரு வார்த்தை பேசாது மௌனத்தால் தன் எதிர்ப்பைக் காட்டிக் கொண்டிருந்தாள். ஒரே நாளில் எதிர் எதிர் துருவங்களாக முறைத்துக் கொண்டு திரிந்தனர்.

அடுத்த நாளிலிருந்து வழக்கம் போல இருவரும் வேலைக்குப் போய் வந்தனர். வைஷாலி முச்சக்கரவண்டியில் செல்ல, சஞ்சயன் வீட்டிலிருந்து வங்கி, வங்கியிலிருந்து வீடு என்று முச்சக்கரவண்டியைத் தொடர்ந்து பாதுகாப்புச் சேவையை வழங்கிக் கொண்டிருந்தான். இரவிலும் அவள் வீட்டின் முன்னே காரைக் கொண்டு வந்து விட்டு விட்டு அதில் தூங்குவான்.

வைஷாலிக்கு இதனைப் பார்த்து மனவேதனை இன்னமும் அதிகரித்தது. தாங்க முடியாதவளாய் தாய்க்கு அழைத்தவள் விசாலிக்கு மாற்று ஏற்பாடு செய்து விட்டுத் தன்னோடு வந்து தங்குமாறு அழைத்தாள். விசாலியை கணவனது பிறந்த வீட்டில் விட்டு விட்டு வைஷாலியின் பெற்றோர் மலையகத்துக்குக் குடிபெயர்ந்தனர். சஞ்சயனும் பொழுதெல்லாம் வைஷாலி வீட்டிலேயே கழித்து விட்டுத் தூங்க மட்டும் தனது வீட்டிற்குச் செல்வான்.

இன்னும் ஒரு மாதத்தில் நல்ல நாள் இருப்பதாகக் கூறித் திருமணத்துக்கும் நாள் குறித்தாயிற்று. வைஷாலி எல்லோரையும் கெஞ்சிப் பார்த்து, அழுத பார்த்து, கோபப்பட்டுப் பார்த்தும் எந்தப் பயனுமின்றிப் போயிற்று. எல்லோரதும் ஒரே பதில்,

“நீ முரளியைக் கல்யாணம் செய்ய ஆசைப்பட்ட நேரம் நாங்க யாரும் மறுக்கேல்ல. உன்ர விருப்பத்தை நிறைவேற்றி வைச்சம்தானே. இப்ப நீ எங்கட ஆசைப்படி இந்தக் கல்யாணத்தைச் செய்ய வேணும். அவ்வளவுதான்...”

வைஷாலிக்கோ வாழ்க்கை வெறுத்துப் போயிற்று. சஞ்சயன் மீதுதான் கோபம் மிக அதிகமாக இருந்தது. இருந்தும் பெற்றோரின் முன்னால் அவன் மேல் கோபத்தைக் காட்ட முடியாதவளாய் சகஜமாக நடப்பதாகக் காட்டிக் கொண்டாள். இத்தனைக்கும் அவளுக்கு யார் மாப்பிள்ளை என்று கூடத் தெரியாது. முன்பொருமுறை சஞ்சயன் கூற வந்த போது இவள் காது கொடுத்துக் கேட்கவில்லை. இப்போது அது யாராக இருக்கும் என்ற விடயம் வேறு இவள் மனதைக் குடைந்தது.

அன்று வைஷாலி வேலை முடித்து வந்ததும் சஞ்சயனோடு தனியாகப் பேசும் வாய்ப்புக் கிடைத்தது.

“என்ர முயல்குட்டிக்கு ரொம்பக் கோபமோ...?”

தெரிந்து கொண்டே கேட்டவனை நிமிர்ந்து ஒரு முறைப்பைப் பரிசளித்து விட்டு மறுபடியும் கை வேலையைத் தொடர்ந்தாள். அவள் கோபம் குறைவதாய் இல்லை என்பதை உணர்ந்தவன் தனது இரண்டு காதுகளையும் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போட ஆரம்பித்தான்.

“அடியே... உன்னைக் கேட்காமல் கல்யாணத்துக்கு நாள் பார்க்கச் சொன்னது பிழை தான். அதுக்கு என்னை மன்னிச்சிடு...”

அவன் சிறு வயதில் செய்வது போலவே இப்போதும் இவள் முன்னே தோப்புக்கரணம் போடவும் வைஷாலிக்கு அதற்கு மேல் கோபத்தை இழுத்துப் பிடித்து வைத்திருக்க முடியவில்லை. பொங்கி வந்த சிரிப்பை அடக்கியவள்,

“சரி... சரி... காணும் நிப்பாட்டு...”

“அப்பாடா... எங்க நூறு போடச் சொல்லிடுவியோ என்று பயந்து போனன்... ஞாபகம் இருக்கா? சின்ன வயசில ஒருக்கால் யாரையோ அடிச்சுப் போட்டன் என்று நூறு தோப்புக்கரணம் போட விட்டனி...”

“ஹூம்... அதெல்லாம் எங்களுக்கு ஞாபகம் இருக்கு... கடம்பனைத்தானே அடிச்சனி... அவன் எனக்கு லவ் லெட்டர் தந்தவன் என்று...”

“அட ஓம் என்ன... பரவாயில்லை... இவ்வளவு வருடம் கழிச்சுப் பேரெல்லாம் ஞாபகம் வைச்சிருக்கிறாயே...”

“பாவம் அவன்... சரி... அதை விடு... நீ கதையை மாத்தாமல் முதலில அப்பாட்டச் சொல்லி இந்தக் கல்யாணத்தை நிப்பாட்டச் சொல்லுடா...”

“வைஷூ... ப்ளீஸ்டி... கொஞ்சமாவது என்ர பக்கமிருந்தும் யோசிச்சுப் பார்... உன்னை இப்பிடித் தனியாக இருக்க விட்டிட்டு என்னால நிம்மதியாக வாழ முடியாதுடி...”

“நீ எப்ப இருந்து சஞ்சு இவ்வளவு சுயநலவாதியாக மாறினனி? நீ நிம்மதியாக வாழுறதுக்காக நான் என்ர நிம்மதியைத் துலைக்க வேணுமா?

என்ர பக்கம் இருந்தும் யோசிச்சுப் பாரன் சஞ்சு... என்னால எப்பிடி எல்லாத்தையும் மறந்து இயல்பாக குடும்பம் நடத்த முடியும் சொல்லு பார்ப்பம்... ஊர்ச்சனம் வேற வெக்கமில்லாமல் ரெண்டாம் கல்யாணம் கட்டியிருக்கிறன் என்று கதைக்குங்கள். அதுக்குப் பிறகு எப்பிடி என்னால நிம்மதியாக சந்தோசமாக இருக்க முடியும் சொல்லு...”

“நீ முதல்ல இந்த ஊர்ப் புராணத்தை நிப்பாட்டுடி... எப்ப பாரு ஊர் என்ன சொல்லும்... சனம் என்ன கதைக்கும் என்றபடிதான்... ஊருக்காக வாழுறதை விட்டிட்டுக் கொஞ்சமாவது உனக்காக வாழு வைஷூ...”

“நீ என்ன சொன்னாலும் எனக்கு இந்தக் கல்யாணத்தில இஷ்டம் இல்லை சஞ்சு... அந்தச் சொல்லைக் கேட்டாலே ஏதோ செய்யுது... தயவுசெய்து என்னை ஃபோர்ஸ் பண்ணாதை... ப்ளீஸ்டா புரிஞ்சு கொள்ளு...”

“உனக்கு என்னில நம்பிக்கை இல்லையா வைஷூ? உனக்கு ஒரு கெட்டது நடக்க நான் விடுவனாடி? நீ இவனைக் கலியாணம் செய்தால் நிச்சயமாக உன்ர வாழ்க்கை சுகப்படும் என்று எனக்கு முழுசாக நம்பிக்கை இருக்கிறபடியால் தானேடி நான் உன்னை இவ்வளவு கட்டாயப்படுத்திறன்... நீ ஏன் அதைப் புரிஞ்சு கொள்ளுறாய் இல்லை வைஷூ?”

“ஐயோ சஞ்சு... இது உன்னில நம்பிக்கை இருக்கோ இல்லையோ பிரச்சினை இல்லையடா... எனக்குக் கல்யாணம் என்றாலே வெறுப்பாக இருக்கு... பிறகு எப்பிடிடா என்னால புதுசா ஒருத்தனோட சேர்ந்து வாழுறதைப் பற்றி யோசிக்க முடியும்? ப்ளீஸ் சஞ்சு... என்னைக் கட்டாயப்படுத்தாதை... ப்ளீஸ்டா...”

கோபத்திலிருந்து மாறி மிக நயமாக உரைத்தாள் வைஷாலி. ஆனால், சஞ்சயனோ இந்த விடயத்தில் மிக உறுதியாக நின்றான். வழக்கமாக வைஷாலி எது கேட்டாலும் செய்பவன், அவளறியாமலேயே விட்டுக் கொடுத்துச் செல்பவன் இந்த முறை தனது முடிவில் கொஞ்சமும் தளர்ந்தான் இல்லை. வைஷாலிக்கே இவன் பிடிவாதம் வியப்பாக இருந்தது.

அன்று மாலையில் வைஷாலிக்கு நிச்சயம் செய்யப்பட்ட மாப்பிள்ளை, சஞ்சயனின் நண்பன், வைஷாலியைச் சந்திக்கவென்று இவர்கள் வீட்டுக்கு வந்தான். மாப்பிள்ளையாக வந்தவனைப் பார்த்து மேலும் அதிர்ந்து போய் நின்றாள் வைஷாலி.

மாப்பிள்ளை யாரோ? வைஷாலியின் சம்மதம் பெறுவானா?

**அவள் கனவு நனவாகுமா...?**

சிறுகதை

# நான் அவனில்லை

ஆதவன்

“உங்கட பெயர சொல்லுங்கோ?”

“பத்மநாதன்”

“வயது?”

“71”

“என்னென்ன வருத்தங்கள் இருக்கு”

பத்மநாதன் கொஞ்ச நேரம் அமைதியானார். உண்மையைச் சொல்வதா? பொய்யைச் சொல்லி அவர்களே பரிசோதித்து கண்டுபிடிக்க விடுவதா? அப்படிச் செய்தாலும் காரியமில்லை. கேட்டால் நான் இதுவரை முற்றுமுழுதாக உடல் பரிசோதனை செய்யவில்லை. அதனால் முதலில் சொல்லத் தெரியவில்லை என்று நியாயப்படுத்தலாம். இவ்வாறு தனது தயக்கத்துக்கு காரணம் தேடியவர் போல் குழப்பத்தை அவரின் முகத்தில் பார்த்த பதிவாளர், “ஐயா சொல்லுங்கோ எதுவாக இருந்தாலும் நாங்கள் உங்களின் ஆரம்ப தகவலுக்குத்தான் இதை எடுப்பது சம்பிரதாயம். போகப்போக வைத்தியர்கள் வந்து டெஸ்ட் செய்து நிச்சயப்படுத்துவினம். மேலதிக டெஸ்ட் தேவைப்பட்டால் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி செய்வம்.” பதிவாளர் வெண்ணிலா அவரின் தயக்கத்தைப் போக்க முயற்சித்தாள். பல முதியவர்களுடன் பேசி தகவல்களை சேகரித்த அனுபவம் அவளுக்கு இருந்ததும் ஒரு காரணம். வடமாகாணத்தில் இந்த முதியோர் இல்லம் கிட்டத்தட்ட நாற்பது வருடங்களாக இயங்குகிறது. அவள் கடந்த மூன்று வருடங்களாக பணிபுரிகிறாள். வயது முப்பதுக்குக் கீழே இருக்கும். பெரிதாக அழகு என்று சொல்லமுடியாது. இந்த மாதிரி இடத்தில் வேலைக்கு நல்ல அழகான பெண்களை வரவேற்பாளராகவும் பதிவாளராகவும் கண்டுபிடிப்பது சிரமம் என்று நிர்வாகத்திற்குத் தெரிந்திருந்தது. கணினித்துறை, நிதித்துறை வங்கிகள் வர்த்தக நிறுவனங்கள் ஆள் எடுப்பதில் காட்டும் நுணுக்கம் வேறு இங்கே இல்லத்திற்கு அந்தளவு நுணுக்கம் பாக்கிறதில்லை. ஆனால், அழகை விடவும் அனுபவத்திறன் இருக்கவேண்டும் என்பதில் நிர்வாகம் சமரசம் செய்வதில்லை.

பத்மநாதன் சிறிது நேரம் அவளையே குறு குறுப்பாகப் பார்த்தார். “எனக்குத் தெரிந்து வருத்தம் எதுவும் இல்லை. கொஞ்சம் நாரிப் பிடிப்பு எப்பவாவது வரும் அவ்வளவுதான்.”

வெண்ணிலா படிவத்தை அவர் சொன்னது போல நிரப்பினாள்.

“குடும்பத்தில் உள்ள மற்றவர்களின் பெயரையும் முறையையும் ஒவ்வொன்றா சொல்லுங்கோ” என்று மீதம் உள்ள கேள்விகளைத் தொடர்ந்தாள்.

“அவங்கள் வேண்டாம் என்று வந்திருக்கிறன். உதெல்லாம் முக்கியமே?” அவரின் முகம் சட்டென்று மாறியது.

“கட்டாயம் தெரிய வேண்டும் ஐயா. ஒரு அவசரத்துக்கு அறிவிக்க வேண்டும். இது வழமையான தகவல்கள். நீங்கள் தெரியப்படுத்தினால் நல்லது.”

“ஆட்களை முடிச்சு போட்டுத்தான் அனுப்புவீங்கள். அதுக்கு சொந்தங்கள் தேவைப்படுது போல. எனக்குச் சொல்ல விருப்பமில்லை.”

“ஆராவது நண்பர்கள் பெயர், போன் நம்பர் தாங்கோ.” அவளும் விடாமல் கேட்டாள்.

சற்று யோசித்தவர்,

“சந்திரன் இதுதான் அவன்ர நம்பர்” என்று சேட் பொக்கெட்டில் இருந்த பர்சை எடுத்து உள்ளிருந்த பழுப்பேறிய கடதாசியைக் கொடுத்தார்.

“சரி ஐயா நீங்கள் தந்த தகவல்களை நான் நிர்வாகத்துக்குக் கொடுக்கின்றேன். அவர்கள் முடிவு செய்வார்கள் உங்களை இல்லத்தில் சேர்ப்பதா இல்லையா என்று.” மினரல் வாட்டர் பாட்டில் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள். அதை வாங்கி புன்முறுவலுடன் பார்த்தார்.

“எல்லாம் மாறிப் போனது” என்று தனக்குத் தானே ஏதோ சொல்லி கொஞ்சம் தண்ணீர் குடித்தார்.

“அப்புறம் சொல்லுங்கோ உங்களின் கதையை. இஞ்ச வர்றதுக்கு என்ன காரணம்?” உள்ளே இல்லத்தில் இருந்து சில முதியவர்கள் நகைச்சுவையாகப் பேசுவதும் பெரிதாகச் சிரிப்பதும் கேட்டுக் கொண்டே இருந்தது.

பத்மநாதன் ஐயா செருமிக்கொண்டே பேசத் தொடங்கினார்.

“எங்கட ஊரில சவாரி விடுறது ஒரு கௌரவம் தெரியுமா?”

“மாட்டுவண்டிச் சவாரிதானே”

“ஓம். அந்த நேரத்தில் இருந்து எந்தப் பிரிவிலயாவது என்ர ஒரு சோடி மாடு எப்பவும் ஓடும். எனக்கு 15 வயசு இருக்கேக்க கைக்கொடி சவாரி விட்டனான்.”

“ஐயா இந்தக் கைக்கொடி சவாரி எண்டுறது, ஒரு மாட்டை கழுத்தில் கயிறு கட்டி அதைப் பிடிச்சுக் கொண்டு சேர்ந்து ஓடுறதுதானே?”

அவள் இடையிடையே பேசுவது அவருக்கு இடைஞ்சலாக இருக்கவேண்டும். “ஓம் அதுதான்” எண்டு கடுமையாகச் சொல்லிவிட்டு தொடர்ந்தார்.

“காந்தரோடை, நீர்வேலி மற்றது மட்டுவில் எண்டு எல்லா இடத்திலும் ஓடினான். அதைவிட வன்னியையும் விட்டு வைக்கேல. அதில எழும்பின விலாசம் கன பேருக்கு வயித்தெரிச்சல். எழிய வேலையெல்லாம் நடந்தது. அதையேன் கேக்கிறா. எனக்கும் என்ர மாடுகளுக்கு செய்வினை செய்ய வெளிக்கிட்டவங்கள். செய்வினை அண்டாமல் நானும் மறு செய்வினை செய்தனான். சந்திரன் தான் பெரிய குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டு மறு செய்வினை செய்ய வந்தவன். அப்ப இருந்து நல்ல பழக்கம். என்று ஒரு மாதிரி ஏதோ நினைத்தவராகச் சிரித்தார்.

“கண்ணுறு கழிக்கிறது, மந்திரிச்சு நூல் கட்டுறது, கழிப்புக் கழிக்கிறது என்று கனக்க வேலை செய்வான். அடிக்கடி வீட்டுக்கு வந்து பழகவும் தொடங்கிவிட்டான். அதால தான் அவன்ர நம்பர தந்தன்”



“அப்ப அவருக்கு கோல் எடுத்து இப்பவே கேட்கவா உங்களைப் பற்றி” வெண்ணிலா அவசரப்பட்டாள்.

“நான் செல்லுறத நம்பமாட்டா அப்படித்தானே” இறுக்கமான முக பாவத்துடன் குரலில் காட்டமாகக் கேட்டார்.

“அதற்கில்லை ஐயா. எப்படியும் அவரைத் தொடர்பு கொள்ளத்தான் போகிறேன். வேளையோட தகவல்கள் எடுத்து விட்டால் நீங்கள் தங்குவதில் மெளனக் கேடு இல்லை.”

“நான் தங்கப்போகிறன் என்று உனக்குச் சொன்னனானா?” கண்களைச் சுருக்கி சிரித்தார். அது கொடூர புன்னகையாக வெண்ணிலாவுக்கு இருந்தது. பிரச்சினைக்குரிய ஆள் போலத்தான் தெரிந்தார். சட்டென்று மேசையில் இருந்த சந்திரனின் நம்பர் எழுதிய துண்டை எடுத்து வைத்துக்கொண்டார்.

“இங்கு வரும் முதியவர்கள் பெரும்பாலும் தங்குவதற்குத்தான் வருவார்கள். சரி நீங்கள் ஏன் வந்தீங்கள் யாரையாவது சந்திக்க வேண்டுமா? உங்களுக்கு தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் பெயரைச் சொல்லுங்கள். நான் போய் வரச் சொல்லுறன்.” தன்மையாகக் கேட்டாள்.

தலையை நிமிர்த்தி கொஞ்ச நேரம் அவளையே பார்த்தார். அந்தப் பார்வை மிகவும் வெறுமையாக இருந்தது. பதில் சொல்ல வாயைத் திறக்கவும் அங்கே பணிபுரியும் ஊழியர் கனகு உள்ளே வந்தான். தோட்டத்தில் வேலைசெய்து விட்டு வந்திருப்பான் போல வியர்வை வடிந்த உடல். ஆடையில் தெட்டம் தெட்டமாக களிமண் கறைகள். உள்ளே நுழையும் போதே வியர்வை வாடையும் சேர்ந்து வந்தது. பத்மநாதன் ஐயா சொல்ல வந்ததை நிறுத்திக் கொண்டார்.

“என்ன வேணும்?” வெண்ணிலாவும் எரிச்சலாகக் கேட்டாள்.

“மெசினுக்கு எண்ணெய் வேணும். ஸ்டோர் ரூம் திறப்பைப் தாங்கோ.” பவ்வியமாகக் கேட்டவன் மெதுவாகத் தலையைத் திருப்பி அவரையும் பார்த்து இலேசாகச் சிரித்தான்.

“எண்ணெய் விக்கிற விலையில கிழமைக்கு ஒரு நாள் இறைச்சால் காணும். இந்தா கீ.” மேசை இலாச்சியில் எடுத்துக் கொடுத்தாள்.

“அடிக்கிற வெயிலுக்கு ரெண்டு நாளைக்கு ஒருக்கா இறைக்க வேணும் போல கிடக்கு.”

“பார்த்து வீணாக்காமல் பாவியுங்கோ. எனி எப்ப அடுத்த கப்பல் வந்து எண்ணெய் கிடைக்குதோ தெரியேல.” சலித்துக் கொண்டாள். டீசல் எண்ணெய்க்கு தட்டுப்பாடு வந்ததால தேவைகளுக்கே கட்டுப்படுத்தபட்ட அளவில் பாவிக்கத் தொடங்கி விட்டது சனம். கிடைக்கிற நேரம் அடிபட்டு வாங்கி சேர்ப்பது என்ற போக்கில் காலம் கடக்கும் நிலைமை. நிர்வாகத்துக்குக் காரணம் சொல்ல வேண்டியதும் அவளின் கடமை.

முழங்கால் அளவு கால்சட்டை அரைக்கை சேர்ட் அணிந்து முகத்தில் நரை நிறைந்த மூன்று அங்குல தாடி தடித்த மீசையுடன் இருந்த பத்மநாதனை மீண்டும் உற்றுப் பார்த்தான்.

“ஐயாவை எங்கயோ பார்த்த மாதிரி இருக்கு.”

“எனக்குத் தெரியாது. நீ வந்த வேலைய பார்”

“இல்லை நீங்கள் சவாரி பத்தர்தானே?” என்று மீண்டும் அடையாளம் சொன்னான் கனகு.

“ஓம் அதுக்கு என்ன இப்ப?”

“ஆர பார்க்க வந்திருக்கிறீங்கள்?”

“நீ உன்ர வேலையைப் பார். வந்தவரை நான் கவனிக்கிறன்” அதுவரை அமைதியாக இருந்த வெண்ணிலா கனகுவைக் கண்டித்து வெளியேற்றினாள். அதுவரை தேவை இல்லாமல் அவரின் தகவல்களைச் சேகரித்த வீண் வேலையால் வெறுப்படைந்திருந்தாள். கனகு தலையை ஆட்டிவிட்டு நமட்டுச் சிரிப்புடன் வெளியேறினான்.

“வந்த விடயத்தைச் சொல்லுங்கோ. எனக்கு வேற வேலைகள் இருக்கு.” வெளியில் விராந்தாவில் முதிய வர் ஒருவர் பழைய பாடல் ஒன்றை மெலிதாகப் பாடுவது காற்றில் தாழ்ந்து அறைக்குள் நுழைந்தது அழையா விருந்தாளியாக அவரிடம் இருந்து வார்த்தைகள் வரவில்லை. அவள் மெதுவாக எழுந்தாள்.

“சந்திரன் இஞ்ச இருக்கிறதா கேள்விப்பட்டனான். அவனைக் கூப்பிட முடியுமா?”

“ஆர் உங்கட நண்பன் அவரா? ஆனால், சந்திரன் என்ற பெயரில் இப்ப யாரும் இங்க இல் லையே. சந்திரகீர்த்தி என்று ஒருவர் இருக்கி றார் எண்பது வயதில்.”

“அவன் இங்கயும் இல்லையா? இதுவரை நான்கு இல்லங்களில தேடிட்டன்.” சொல்லிக் கொண்டே இருக்கையை விட்டு எழுந்து அவளை நேருக்கு நேர் பார்த்தார்.

“நீங்கள்தானே அவருக்கு கோல் எடுத்து கதைக்க சொன்னீங்கள். இப்ப அவர் இங்க இருக்கிறாரா எண்டு கேட்பது வேடிக்கையா இருக்கு.”

அப்பதான் அவளுக்கு ஞாபகம் வந்தது. அவர் கொடுத்த எண்ணை பிரதிசெய்த தனது படிவத்தில் பார்த்தாள். அதிலே எதுவும் எழுதப்படாமல் வெறுமையாக இருந்தது. தான் எழுதியது அவளுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. ஆனால், அங்கே இல்லை.

“என்ன தேடியும் கிடைக்கேலயா?”

“எழுதின நம்பர் தெரியேல இப்ப.”

“அது மறைந்திருக்கும். அதற்குப் பிறகு தோட்டக்காரன் வந்தான் நீ சாவியைக் கொடுத்தாய். ஆனால், இப்ப மறுபடியும் வருவான் பார்” என்று நக்கலாக சிரித்தபடியே அமர்ந்தார்.

அவள் குளம்பிவிட்டாள். தானும் மறுபடியும் அமர்ந்தாள். அவரையே கண்வெட்டாமல் பார்த்தாள். எதை நம்புவது என்று தெரியவில்லை. உண்மையில் சந்திரன் தனக்குச் செய்வினை தீர்க்க வந்ததாகச் சொன்னார். நடப்பதைப் பார்த்தால் இவர் அப்படியான ஆள் மாதிரிக் கிடக்கு என்று தனக்குள் நினைத்தாள்.

கனகு கதவை தட்டிவிட்டு அதே கோலத்தில் உள்ளே வந்தான். வெண்ணிலா திகைத்தாள். மறுபடியும் சாவியைக் கேட்டு வாங்கிக் கொண்டு போனான். இப்போது அவன் அவரை எதுவும் கேட்கவும் இல்லை பார்க்கவும் இல்லை.

“அவன் உங்களை எதுவும் கேட்கவில்லையே?” தனது சந்தேகத்தைக் கேட்டாள்.

“நான் அவன் இல்லை. எதுவும் நடக்கமுன்னமே யூகிக்கிறாய். நாளை இதேநேரம் வேற டெஸ்டிங் இருக்கு” என்று பரிதாபமாகச் சிரித்தார்.

முற்றும்...

பானு

# தமிழர் சிறப்பை வெளிப்படுத்தும் முகமாலையின் சிவபுரவளாகம்

"ஏழை எளியவர்களை தெய்வமாக நினைத்து தொண்டாற்றுவதே நாம் செய்ய வேண்டிய வழிபாடாகும்" என சுவாமி விவேகானந்தரின்அழகான கருத்துக்கிணங்க கிளிநொச்சி முகமாலையில் சைவத்தமிழ்ச் சங்கத்தின் சிவபுரவளாகத்தில் மூதாளர் அன்பு இல்லம்- 01.09.2022 அன்று தமிழ் கலாசாரங்களைப் பின்பற்றி அரச, அரச சார்பற்ற மற்றும் சைவத்தமிழ்ச் சங்கத்தின் அன்பேசிவ புலம்பெயர், ஈழத்துத் தொண்டர்கள், பொது மக்கள் என்போர் பங்கு பற்றலுடன் திறக்கப்பட்டது.




இன்றைய காலத்தில் உறவுகள் இன்றி தனித்து வாழ்பவர்களாக இருப்பவர்களும் மற்றும் சொந்தங்களின்றி கவனிப்பாரின்றி ஆதரவு தேடுபவர்களுக்கும் சமூக நோக்கோடு ஆதரவு கொடுப்பது இன்றைய காலத்தின் தேவை. அதை நிஜமாக்கியது சைவத்தமிழ்ச்சங்கம் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் யுத்த களமாகக் காட்சியளித்து பல உறவுகள் பலியாகி பயன்தரு மரங்களின்றி காட்சியளித்த கிளிநொச்சி மாவட்டத்தின் முகமாலை மண்ணில் முதியோர் இல்லம் உதயமாகியது. அனைத்து தமிழ் மக்கள் மனங்களிலும் நீங்கா இடம் பிடித்துள்ளது.



28 வருடங்களுக்கு முன்பு ஈழத்தில் அதிக யுத்தம் இடம்பெற்றிருந்த காலப்பகுதியில் புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டிற்குச் சென்ற தமிழ் உறவுகள் தமிழையும் சைவத்தையும் வளர்க்க வேண்டும் என்ற நோக்கில் சைவத்தமிழ்ச் சங்கத்தை உருவாக்கி அதனூடாக சுவிற்சர்லாந்து நாட்டின் சூரிச்சில் சிவன் ஆலயத்தை உருவாக்கி அன்று தொட்டு இன்றைய காலம் வரை ஈழத்து உறவுகளுக்கு அன்புக்கரம் கொடுத்து வருகிறார்கள்.

சுவிற்சர்லாந்து சூரிச்சிவன் கோவில் சைவத்தமிழ்ச் சங்கத்தில் 225 தொண்டர்களுக்கு மேல் இரவு, பகல், குளிர் எனப்பாராது கடின உழைப்பின் மூலம் கிடைத்த நிதியையும் அவர்களின் எண்ணங்கள், கனவுகளையும் நிஜமாக்கும் ஒரு தளமாக முகமாலையில் ஈழத்து ஒருங்கிணைப்பாளர்கள், தொண்டர்களின் பங்களிப்புடன் மூதாளர் அன்பு இல்லம் உருவாக்கப்பட்டுள்ளது.

சைவத்தமிழ்ச் சங்க புலம்பெயர் தமிழ் உறவுகள் ஈழத்து உறவுகளின் துயர் துடைக்க எண்ணிலடங்கா உதவிகளைப் புரிந்து வருகிறார்கள். 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்பு தமிழ் மக்கள் முள்வேலிக்குள் முகாமில் அடைக்கப்பட்ட பொழுது மண் சுமந்த மேனியர் என்ற பெயருடனும் பின்பு அன்பேசிவம் என்ற பெயருடனும் வவுனியாவில் புனர்வாழ்வு முகாமில் இருந்த இளைஞர், யுவதிகளுக்கு உணவு வழங்கப்பட்டது. அதன் பின்பு வடமராட்சி கிழக்கு மறைக்காட்டு நலன்புரி நிலையத்தில் இருந்த 20ற்கு மேற்பட்ட மாணவர்களின் கற்றலை மேம்படுத்த கற்றல் சார்ந்த உதவிகள் தொடர்ந்து செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் சிறிய சிறிய உதவிகள் செய்து இன்று வடக்கு, கிழக்கு, மலையகம், பொலன்னறுவை இந்தியாவில் உள்ள தமிழ் நாடு எனப்பல உதவிகளைச் செய்து ஒரு பெரு விருட்சமாகத்திகழ்கிறது.

தற்போது வடக்கு, கிழக்கு மாகாணம் மற்றும் மலையகம், பொலன்னறுவை போன்ற மாவட்டங்களிற்கு இணைப்பாளர்களை உருவாக்கி பட்டினியால் வாழும் எமது உறவுகளுக்கு உலர் உணவு, வாழ்வாதாரம், அத்தியாவசியப் பொருட்கள், கற்றல் சார்ந்த உதவிகளைச் செய்வதோடு அண்மையில் கொரோனா வைரஸ் காரணமாக ஊரடங்கு நிலையில் தொழிலின்றி பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு உலர் உணவுகள், வெள்ளம் காரணமாக பாதிப்படைந்த உறவுகளுக்கு உலர் உணவுப் பொருட்கள் போன்ற பல உதவிகளை செவ்வனே செய்து வருகிறது.

புலம்பெயர்ந்த நாட்டில் வாழ்பவர்கள் தமது தாய், தந்தை, பிள்ளைகள், உறவுகளின் நினைவு நாட்கள், பிறந்தநாள், திருமணநாள் எனப் பல நிகழ்வுகளை அன்பேசிவம் அமைப்பின் மூலம் நிதிகளை வழங்கி ஈழத்து உறவுகளின் வாழ்க்கையை முன்னேற்ற அன்புக்கரம் வழங்கி வருகின்றார்கள். அதே போன்று சூரிச்சிவன் கோவிலில் விசேட பூசைககள், சுற்றார் சுழி பசி தீர்த்தல் என்ற நிகழ்வுகள் மூலம் கிடைக்கும் நிதிகளை ஈழத்தில் உள்ளவர்களின் துயர் போக்க வழங்கப்பட்டு வருகின்றமை சிறப்பம்சமாகும்.

புலம் பெயர் உறவுகள் சுயநலம் கொள்ளாது ஈழத்தில் உள்ள உறவுகளுக்காக தமது பாதி வாழ்க்கையை செலவு செய்து எமது தமிழ் உறவுகளின் வாழ்வாதாரத்தையும் கல்வியையும் முன்னேற்ற முயல்வது தற்காலத்தில் மிகவும் தேவையானதும் பயனுள்ள விடயமும் என்றே கூறலாம்.

சைவத்தமிழ்ச் சங்கம் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் அளப்பரிய பணிகளை ஆற்றி வருகிறது. அன்பேசிவம் என்ற அறக்கட்டளையை உருவாக்கி கல்வி, வாழ்வாதாரம், மனிதாபிமானம், நிவாரணப்பணிகள், வரப்புயர மரநடுகைத் திட்டம், தமிழர் கலாசார நிகழ்வுகள், சிவபுரவளாகம்

(19 ஆம் பக்கம் பார்க்க...)




# இளையவர்களைக் கவரும் இன்ஸ்டாகிராம் வலைத்தளம்

க.ஹரிகரன்
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இன்றைய உலகில் சமூக வலைத்தளங்களின் பாவனையானது மிக இன்றியமையாத ஒன்றாக மாறியுள்ளது என்பது அனைவரும் அறிந்த விடயம்தான். அந்த வகையில் பல நிறுவனங்களும் தங்கள் வலைத்தளங்களின் நன்மைகளை மக்களுக்கு எளிதில் சென்றடையக் கூடிய வகையில் மிக எளிமையாக மீளப் பரிசீலனை செய்து வருகின்றார்கள் என்றால் மிகையாகாது.

இன்றைய உலகில் தனி நபராக இருக்கட்டும் குழுவாக இருக்கட்டும் ஏன் சிறிய நிறுவனம் தொடக்கம் பெரிய மல்ரி நிறுவனங்கள் வரை தங்களை விளம்பரப்படுத்துவதற்கு ஒரு கருவியாக இந்தச் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துகின்றார்கள் என்றால் அது மிகையாகாது.

அந்த அளவுக்கு சமூக வலைத்தளங்களின் பாவனையானது எமது மக்களிடையே மிகவும் பிரபல்யம் அடைந்ததுடன் ஒரு இலகு வலைத்தளமாகவும் எம்மவர் மத்தியில் வலம் வருகிறது.




நம்மவர்கள் மத்தியில் மிகவும் பேசுபடுபொருளாக அமைந்துள்ள இன்ஸ்டாகிராம் தொடர்பாக நோக்குவோம்.

இன்ஸ்டாகிராம் என்பது புகைப் படம், வீடியோ சமூக வலைப்பின்னல்களில் ஒன்றாகும். இது இணையப் பயனாளிகள்குறிப்பாக, இளைஞர்கள் இன்று அதிகம் பயன்படுத்தப்படும் ஒரு சாதனமாகும். கூடுதலாக சமூக வலைப்பின்னல் Instagram மிகவும் பயனுள்ள தகவல் தொடர்பு சாதனங்களில் ஒன்றாகும். இது மிகவும் மக்களிடையேயான தொடர்புகளை ஊக்குவிப்பதற்கு உதவுகின்றது. உலகளவில் சராசரியாக பல பில்லியன் பயனாளிகளை எளிதில் சென்றடையக் கூடியது.

இன்று இன்ஸ்டாகிராம் இரண்டு முக்கிய சமூக வலைப்பின்னல்களுடன் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களைப் பகிர்வதற்கான மிகப் பெரிய மற்றும் மிகவும் பிரபலமான சமூக வலைப்பின்னல் ஆகும். Facebook, Twitter. இது IOS மற்றும் Android இயங்குதளங்களில் விருப் பங்களின் அடிப்படையில் பல்வேறு புகைப் படம் மற்றும் வீடியோ எடிட்டிங் முறைகளை வழங்கும் ஒரு இலவச சாதனமாகும்.

2010 இல் முதன்முதலில் காலடி எடுத்து வைத்த Instagram கெவின் சிஸ்ட்ரோம்,மைக் க்ரீகர் ஆகியோரால் பர்பின் என்ற அசல் பெயரில் நிறுவப்பட்டது. இது HTML இயங்குதளத்தைப் பயன்படுத்தும் ஒரு பயன்பாடாகும்.

இன்ஸ்டாகிராம் பல போட்டோ எடிட்டிங் எபெக்ட்களைப் பயன்படுத்துகிறது பயனாளிகளை கவர்ச்சிகரமான வீடியோக்களை உருவாக்க உதவுகின்றது.

கணக்கை உருவாக்கி இன்ஸ்டாகிராமில் உள்நுழைவது எப்படி என்றால் மொபைலில் ஆப் ஸ்டோரிலிருந்து IOSக்கான Instagram பயன்பாட்டையும் Google Play Store இலிருந்து Androidஐயும் பதிவிறக்கலாம்.

உங்கள் கணினியில் இன்ஸ்டாகிராம் முகப்புப் பக்கத்திற்குச் சென்று புதிய கணக்கிற்குப் பதிவு செய்யத் தொடங்க பதிவுசெய் என்பதைத் தேர்ந்தெடுக்கவும் அல்லது உங்களிடம் ஏற்கெனவே கணக்கு இருந்தால் உள்நுழையவும்.

மார்க்கெட்டிங்கில் Instagram பயன்பாடு பற்றி நோக்கையில் இன்ஸ்டாகிராம் சனலை மேம்படுத்துவதற்கும் நல்ல முடிவுகளை அடைவதற்கும் படங்களைப் பயன்படுத்துவதோடு உள்ளடக்கமும் முக்கியபங்கு வகிக்கிறது. இன்ஸ்டாகிராமில் கவர்ச்சிகரமான தகவல்களைப்பெற உதவுகின்றது.

இன்ஸ்டாகிராம் என்பது தகவல் தொடர்பு மற்றும் பிராண்டிங்கிற்கான தளமாகும். எங்கள் பிராண்ட் படத்திற்கு ஏற்ற கருப்பொருளின் படி அனைத்து படங்களும் வழங்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுகின்றன. பயனுள்ள தகவல்தொடர்பு சனலை உருவாக்க Instagram எங்களுக்கு உதவும்.

மார்க்கெட்டில் மிகவும் பிரபலமான சமூக ஊடகப் போக்குகளில் ஒன்றாக இது தெளிவுபடுத்தப்பட்டால் அந்தப் போக்கு வணிகத்திற்கான சிறந்த முடிவுகளுடன் தொடர்புகளை அதிகரிக்கும் நடவடிக்கைகளின் திசையாக இருக்கும். கூடுதலாக சரியான செல்வாக்குச் செலுத்துபவரைத் தேர்ந்தெடுப்பது பிராண்டுகள் அதிக புதிய வாங்குபவர்களைக் கண்டறியவும் பொருத்தத்தை அதிகரிக்கவும் முதலீட்டின் மீதான வருவாயை (ROI) கணிசமாக அதிகரிக்கவும் உதவும்.

சமூக ஊடகங்கள் இன்று மிக முக்கியமான சந்தைப்படுத்தல் உத்திகளில் ஒன்றாகும். இன்று Instagram ஒரு பெரிய உலகளாவிய பார்வையாளர்களையும் அதன் பிராண்டிற்காக வாங்கக்கூடியவர்களையும் சென்றடையக் கூடியது. இதன் விளைவாக Instagram இல் பல பில்லியனுக்கும் அதிகமான பயனாளிகள் உள்ளனர். மேலும், தளத்தில் உள்ள ஒவ்வொரு இடுகையும் Facebook பக்கத்தைவிட சராசரியாக 23% அதிக ஈடுபாட்டைப் பெறுகிறது. எனவே, இடுகைகளுக்கான வடிவமைப்பின் படி உள்ளடக்கத்தை உருவாக்குவது தொடர்புகொள்பவர்கள் தங்கள் வாடிக்கையாளர் தளத்தை அடைவதற்கு கவனிக்க வேண்டிய ஒரு திசையாகும்.

எது எப்படி என்றாலும் எம்மில் பலர் தமது நேரத்தினை சமூக வலைத்தளங்களிலேயே கழிக்கின்றனர் என்பது ஒரு கவலைக்குரிய விடயமாகும்.

அத்தோடு உறவுகளைத் தேடவும் பழகவும் இந்தச் சமூக வலைத்தளங்கள் மக்களுக்கு இன்றியமையாததாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ■

ஐந்து நாட்களாய்
தேடப்பட்டுக் கொண்டிருக்கிறது
அஞ்சனவின் குரல்..

திரும்பிவர மாட்டேனென்ற
ஒற்றைக் காகிதத்தின்
உறுதிமொழி

விழுங்கிய இரவில்
நிராகரிப்புகளை தின்று
மூடிக்கிடக்கும்
உன்நினைவுகள்
கண்ணீரோடு
சாபமிட்டுக் கொள்கின்றன..
மன்மதக் கடவுளை



# சாம்பலாக்குக மன்மதனை

பொய்த்துப் போகுமென்ற
நம்பிக்கையில் இன்னமும்
தேடிக்கொண்டிருக்கின்றன
கண்கள்...

காரணங்களை கேட்டபடி
அனுதாபப்பட்டுக்கொள்கின்றன
மானிட உதடுகள்..

மரணத்தின் புதைவாயில்
முழுவதுமாய் உன்னை

மீண்டும் ஒருமுறை
சாம்பலாக்குக..

ஒவ்வொரு ஆண்டும்
ஒவ்வொரு பட்டதாரியை
அன்பின் பெயரால்
உமிழ்ந்துவிடும் மரணம்
பரவ விடுகிறது உலகமெங்கும்
ரோஜா முகைகளில்
துர்நாற்றத்தை..

✍ வில்லரசன்

# ஆதரவு



ஆதரவு இன்றியே
அன்பைத் தேட
வாட்டியே நாளும்
வறுமை தாக்க
அணைப்பார் யாரே

அன்பாய் இங்கே

மண்ணில் நாளும்
மனிதம் மறக்க
அன்பைத் தேடியே
அலையுதே உலகம்
உணர்வார் யாரோ
உறவாய் இங்கே

பசியில் வாடி
பாதை மறக்கையில்
தடையை தந்தே
தள்ளியே நிற்கிறதே
ஆதரவு இல்லா
அன்பு உறவுகள்

காலம் கடந்தே
கனவை சுமக்கையில்

தயக்கம் கொண்டே
தடுமாறி நடக்கையில்
அணைக்க எண்ணியே
ஆசை கொள்ளுதே

பாதை மாறியே
பயணம் செய்கையில்
தட்டிக் கேட்கவே
தஞ்சமும் இல்லை
கண்ணீரை வந்தே
கருணை பொழியுதே

அள்ளி அணைத்தே
அன்பை கேட்கையில்
வேசம் போட்டே
வேடிக்கை பாக்குதே
பாசம் இல்லா
பாரில் நாளும்

உணர்வை சுமந்தே
உறவை என்ன
பகையை தந்தே
பள்ளத்தில் வீழ்த்துதே
தஞ்சம் இல்லா
தரணியும் இங்கே

ஆதரவு தேடியே
அலையும் உலகில்
அன்பைக் கொடுத்தே
அணைப்போம் நாளும்
தடையை வெல்ல
தஞ்சமாம் இருந்தே

✍ பாரதி மைந்தன்
முல்லைத்தீவு

# கடத்தல்



மனம் மடிந்து விடிகிறது

மனமொரு கண்ணாடி மாளிகை
உடைந்தால் ஒட்டமுடியாதாமே
இல்லை இல்லவே இல்லை

காயங்களைக் கழுவும்
இரகசிய மருந்தே கடத்தல்
கடத்தலே உலகின்
உன்னத வித்தை

வெல்வதை விட
கடத்தல் எவ்வளவு அழகிய
கற்கையென
காலம் எழுதிச் செல்லும்
பாடல்களில்
இந்த இரவையும் கடக்கிறோம்
நாளைவிடியுமென

கடத்தல் ஒரு ஊற்று
கடத்தல் ஒரு மாற்று

கடத்தல் பற்றி எழுத கடந்த
காலம் சிரிக்கிறது
எதிர்காலம் அழுகிறது
நிகழ்காலம் சிந்திக்கிறது

கடந்து செல்ல
கற்றுக்கொள்
என்பது வாழ்வின்
விதியாகி நெழிய

எல்லாவற்றையும்
எல்லோரையும்
எல்லாமாய்க் கடக்கலாமோவென

யாரும்
எழும்பவில்லையென்பதற்காக
சூரியன் வராமலா போகும்
யாரிடமும் குடை
இல்லையென்பதால்
மழை பொழியாமலா போகும்

கடந்தால் நெஞ்சில் மாமழை

உடைந்தால் அதுவே இறுதிவிடை

✍ த.செல்வா

வாட்டும் வறுமையால்
வதைபடும் ஏழைகள்
மேட்டுக் குடியாக
மிளிரும் பணக்காரர்!
வீட்டின் செலவெண்ணி
பெண்சிசு கொல்வோர்
ஆட்டும் திமிரினால்
அழகிகள் சிதைப்பவர்!

கூட்டத்தில் பெண்களை
மாடாய் இடிப்பவர்!
நோட்டமிட்டு தாலி
சங்கிலிகள் அறுப்போர்!

தீட்டென்று சொல்லி
மனிதரை ஒதுக்குவோர்!
பூட்டிய வீட்டினுள்
புகுந்து திருடுவோர்!

காட்டின் வளங்களைக்
கண்டபடி சுரண்டுவோர்!
போட்டியின் தேர்தலில்
பொருட்கள் கொடுப்பவர்!
நாட்டின் அவலங்கள்
நாளும் வரும் செய்தி
கேட்டவுடன் "வீறு கொண்டு எழு
மனமே"எழுக..!!!

# வீறு கொண்டெழு மனமே

✍ வி.அபிவர்ணா
முல்லைத்தீவு.



# 380 மில்லியன் ஆண்டுகள் பழமையான இதயம் கண்டுபிடிப்பு

உலகில் ஆகப் பழமையான வரலாற்றுக்கு முந்தைய ஒரு மீனின் இதயம் மேற்கு அவுஸ்திரேலியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த இதயம் 380 மில்லியன் ஆண்டுகள் பழமையானது என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

"வரலாற்று ஆய்வுகள்" இது வெறும் வார்த்தைகள் அல்ல. மனிதர்கள், விலங்குகள் மற்றும் அவற்றின் நாகரிகங்கள் என அனைத்தையுமே உலகிற்கு சாட்சிகளோடு பறைசாற்றும் அற்புதமான நிகழ்வு. நீண்டகாலமாக மேற்கொண்ட ஆய்வுகள் பொது வெளிக்கு வரும் போதுதான், இத்தனை விடயங்களை நம்முன்னோர்கள் கடைப்பிடித்தார்களா? என நம்மை வியப்பில் ஆழ்த்தும்.

குறிப்பாக, மனிதர்களின் நாகரிகம், வாழ்க்கை முறை, வியந்து பார்க்க வைக்கும் கட்டடக் கலை என வரலாற்று ஆய்வுகளின் சான்றுகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம். அதிலும் மனிதர்களுடன் டைனோசர் போன்ற ராட்சத மிருகங்களும் பலநூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்துள்ளன என்பதை ஆய்வுகள் மற்றும் தொல்லியல் எச்சங்கள்தான் நமக்கு வெளிப்படுத்தியது.

இந்த வரிசையில் அவுஸ்திரேலியாவில் உள்ள புகழ்பெற்ற கர்டின் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தொல்பொருட்களை ஆய்வு நடத்தி வந்தனர். அப்போது மேற்கு அவுஸ்திரேலியாவில் ஒரு மீனின் தொல்பொருள் கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டு வந்தது. இதன் முடிவில் தெரிய வந்த உண்மைதான் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மீனில் நடத்தப்பட்ட ஆய்வின் போது கண்டுப்பிடிக்கப்பட்ட இதயம் சுமார் 300 மில்லியன் ஆண்டுகள் ஆகப் பழமையான எனக் கண்டறியப்பட்டது. இதுவரை தங்கள் ஆராய்ச்சிப் பணியில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய கண்டுபிடிப்பு இதுதான் என்கின்றனர் அவுஸ்திரேலியாவின் கர்டின் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.

இதுபோன்று ஆராய்ச்சியாளர்களே வியந்து சொல்லும் அளவிற்கு தற்போது கண்டுபிடிக்கப்பட்



டுள்ள மீனின் இதயத்தில் என்ன அம்சங்கள் உள்ளது என இங்கே நாமும் தெரிந்து கொள்வோம்.

'கோ கோ' என்று அழைக்கப்படும் மீன் வகை இப்போது அழிந்துவிட்டது என்றும் இத்தோடு இந்த மீன்வகை டைனோசர்கள் தோன்றுவதற்கு முன்னரே சுமார் 60 ஆண்டுகள் பழமையானதாக இருந்துள்ளது. மேலும், மனிதர்கள் உள்ளிட்ட முதுகெலும்புள்ள அனைத்து மிருகங்களிலும் இதயம் எவ்வாறு உருமாறியது என்பதை தெரியப்படுத்தக்கூடிய முக்கிய கண்டுபிடிப்பாக நம்புகின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

இத்தோடு இந்த மீனின் இதயம் மற்ற மீன்களை விட பரிணாம வளர்ச்சி அடைந்திருந்ததும் ஆய்வில் தெரியவந்துள்ளது. மேலும் கூடுதல் சிறப்பு என்னவென்றால் இந்த மீனின் இதயம் மனிதர்களின் இதயம் போன்றே இருந்துள்ளது. மனிதர்களின் உடல் அமைப்பை விளக்குவதற்கு இந்தக் கண்டுபிடிப்பு முக்கியமானதாக அமையும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

கர்டின் பல்கலைக்கழக இணை ஆசிரியர் ஜான் லாங், இந்தப் பழங்கால மீன்களில் மென்மையான உறுப்புகளின் இந்தப் புதிய கண்டுபிடிப்புகள் உண்மையிலேயே பழங்கால ஆராய்ச்சியாளர்களின் கனவுகளின் பொருளாக இருக்கும் என்றும் இந்தப் புதைபடிவங்கள் இந்த வயதிற்கு உலகில் சிறந்த முறையில் பாதுகாக்கப்படுகின்றன என்றார்.

நிச்சயம் இதுபோன்ற தொல்பொருள் ஆய்வுகள் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷங்கள் என்றும் இன்னும் பல ஆய்வுகள் நடத்தப்படும் என்கின்றனர் வரலாற்று ஆர்வலர்கள். ■

# மலையகம் அடுத்து.....

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றத் தீர்ப்பை நிராகரித்து நிற்கும் பெருந்தோட்டக் கம்பெனிகளை வழிக்குக் கொண்டுவர உங்களால் முடிந்ததா? தோட்டத் தொழிலாளர்கள் அன்றாடம் காய்ச்சிகளாக மாற்றப்படுகின்றனர். உங்களால் தடுத்து நிறுத்த முடிந்ததா? இதனால் அவர்களுக்கான EPF மற்றும் சலுகைகள் மறுக்கப்படுகின்றனவே.

2015 ஆம் ஆண்டில் இருந்து பேசப்படும் 1000 ரூபாவை பெற்றுக் கொடுக்க முடியாமல் போனதேன்? மலையகம் குறித்த பொது வேலைத்திட்டம் உள்ளதா? மலையக மக்களை சொந்தக் காலில் நிற்க வைக்கும் திட்டங்கள் உள்ளனவா? தொழிற்சங்கங்களுக்குள் போட்டி ஏன் தொழிலாளர்களுக்காக ஒற்றுமைப்பட முடியாதா? சந்தா இல்லாததால் பொது வேலைத்திட்டம் குறித்து தொழிற்சங்கங்கள் தற்போது பேசுகின்றன உண்மைதானே? தீப்பிடிக்கும் தோட்டக் குடியிருப்புகள்.

தொடர்ச்சியாக இது தொடர்பான செய்திகள் வெளிவருகின்றன. சுமார் 300க்கும் மேற்பட்ட தோட்ட வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளதாகத் தெரிகின்றது. எரிந்து நாசமாகியது நூற்றாண்டு கால பழமையான காலணித்துவ சின்னங்கள் மாத்திரமல்ல 300க்கும் மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்களின் வாழ்க்கையும் சிறுகச் சிறுக சேர்த்த உடமைகளும் கஷ்டப்பட்டுத் தேடிவைத்த ஆவணங்களும் தான் என்பது உங்களுக்குத் தெரியாதா? பாலங்கள் இன்றி ஆற்றில் அடித்துச் செல்லப்படும் மக்கள். மண்சரிவு அபாயத்தில் இடம் பெயர்ந்தோர். மீரியபத்தை மக்களை நோக்கி வந்த உதவிகளுக்கு என்ன நடந்தது? நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் 25 ஆயிரம் ஹெக்டர் தோட்டக் காணிகள் காடாக்கப்பட உள்ளன. இந்தத் தோட்டங்களில் வாழும் தோட்டத் தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பத்தவர்களினதும் எதிர்காலம் கேள்விக் குறியாக நிற்கின்றது.

"சிஸ்டம் சேன்ஜ்" பற்றிப் பேசும் தலைமைகள் இன்னும் பேசலாம் ஆனால், நீங்களோ இலங்கையின் அரசியல் "சிஸ்டம் சேன்ஜ்" பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றீர்கள். இது பற்றி பேசும் மலையகத் தொழிற்சங்க அரசியல்வாதிகளே இந்த மாற்றத்தால் மலையகத்தில் ஏற்படப்போகும் மாற்றம் என்ன என்று கூறுவீர்களா?

கடந்த 74 வருடங்களுக்கு மேல் தமது அரசியல் உரிமைகளுக்காகப் போராடும் வடக்குக் கிழக்கு மக்களே "சிஸ்டம் சேன்ஜ்" தமக்கு ஒன்றும் கொண்டு வந்துவிடாது என ஒதுங்கி இருக்கும் போது நீங்கள் மலையக மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முயல்வது என்ன?

ஆற்றைக் கடக்க முயன்ற தொழிலாளர்களும் அவர்களது பிள்ளைகளும் அள்ளுண்டு போனதை தொலைக்காட்சிகள் உங்கள் கண் முன் காட்டிய போது நீங்கள் இதுவரை பாராளுமன்ற உறுப்பினர்களாக அமைச்சர்களாக இராஜாங்க அமைச்சர்களாக இருப்பது மக்கள் ஆற்றிலும் மண்சரிவிலும் அள்ளுண்டு போவதைப் பார்த்துக் கொண்டிருப்பதற்கா என மக்கள் எழுப்பும் கேள்விகளுக்கப் பதில் கூறுங்கள்.

சில வேளைகளில் உங்களில் பலருக்கு அமைச்சுப் பதவிகளுக்கான கதவுகளைத் திறப்பதாக இருக்கலாம். பதுளை மாவட்டத்தில் ஒரு தோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய ஒரு மலையகத் தொழிற்சங்க அரசியல்வாதி கூறிய வார்த்தை இது.

"இப்பொழுது நான் ஒரு எம்.பியாக உங்கள் முன் பேசிக் கொண்டிருக்கின்றேன் அடுத்த முறை நான் ஒரு அமைச்சராக உங்கள் முன் நிற்பேன்" என்று கூறியதை இங்கு பதிவு செய்கின்றேன்.

மொத்தத்தில் மலையகத் தொழிற்சங்க வரலாற்றில் நடேச ஐயர் காலம் ஒரு சகாப்தம். வெள்ளையன் ராஜலிங்கம் காலம் அப்பழுக்கற்ற அரசியலின் சின்னம். சௌமியமூர்த்தி தொண்டமான் காலம் பலம் பலவீனம் இதற்கப்பால் ஒரு சகாப்தம். "கிங் மேக்கர்" அரசியலை உருவாக்கியவர்.

**தங்கத்தை உரசலாம் கோதை?**

இந்த வரிசையில் இன்றைய மலையகத் தொழிற்சங்க அரசியலின் சாதனை என்ன? தங்கத்தை உரசிப் பார்த்து அறியலாம். துரதிஷ்டவசமாக உரசிப் பார்த்து அறியும் நிலையில் இல்லை. ஒன்றும் இல்லா "கோது" என்பதை மக்கள் அறிவர். இதனை வெளிப்படையாக மக்கள் கூறுகின்றனர். தொலைக்காட்சிகளில் கோபக் கனல் கக்க "மக்கள் மலையக அரசியல்வாதிகள் மீது கொப்பளிக்கும் வார்த்தைகளே இதற்குச் சான்று."

இலங்கையில் நடைமுறையில் இருக்கும் அரசியல் "சிஸ்டம்" மலையக மக்களை எவ்வாறு வைத்திருக்கின்றது என்பதை தோலுரித்துக் காட்டுவதே ஐ.நா அறிக்கை. இன்று தென்னிலங்கை கோரி நிற்கின்ற "அரகலயா சிஸ்டம் சேன்ஜ்சில்" வடக்குக் கிழக்கு மக்கள்பற்றியோ முஸ்லிம் மக்கள்பற்றியோ பேசவில்லை. மலையக மக்களை ஆர்ப்பாட்டத்தில் இறக்கிய மலையகத் தொழிற்சங்க அரசியல்வாதிகளிடம் மலையக மக்கள்பற்றி "அரகலயா" தமது நிகழ்ச்சி நிரலில் என்ன கூறி இருக்கின்றதென தெளிவுபடுத்த வேண்டும்.

அதற்காக "அரகலயா சிந்தனை" தேவையில்லை என்பதல்ல அர்த்தம். இந்த சிந்தனை மூலம் தென்னிலங்கை தமக்கான அரசியல் ஒழுங்கை ஏற்படுத்திக் கொள்ள முயல்கின்றது. ஜனநாயகத்தின் குறைந்தபட்ச இந்தக் கோரிக்கைக்கே இன்று பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு "அரகலயா போராட்டக்காரர்கள்" பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்மூலம் வேட்டையாடப்படுகின்றனர்.

மலையகத் தொழிற்சங்க அரசியல் தலைமைகளே மலையக மக்களை வைத்து அரசியல் செய்து உங்களுக்காகவும் உங்களைச் சார்ந்தோருக்கும் "அறுவடையாக்கியது" போதும். நீங்கள் மலையகத்திற்கு போதிக்கின்ற "சிஸ்டம் சேன்ஜில்" ஊழல் மோசடி என்பன முக்கிய அம்சமாக உள்ளது.

இனிவரும் காலத்தையாவது "மக்களுக்கான அரசியலாக" செய்ய வாருங்கள். ■

# விடைபெற்ற ராணி எலிஸபெத்.....

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உதவிய பிரிட்டிஷ் பொதுமக்கள் வரை.

✸ **800**: வின்ட்சர் கோட்டையில் உள்ள செயின்ட் ஜார்ஜ் சேப்பலில் ஒரு உறுதியான சேவையில் விருந்தினர்கள்.

✸ **5,949**: ஸ்கொட்டிஷ் ஹைலேண்ட்ஸில் உள்ள அவரது பால்மோரல் எஸ்டேட்டில் செப்ரெம்பர் 8 அன்று ராணியின் மரணத்துடன் தொடங்கிய உன்னிப்பாக நடனமாடப்பட்ட நடவடிக்கை முழுவதும் இராணுவப் பணியாளர்கள் நிறுத்தப்பட்டனர். அந்த எண்ணிக்கையில் இராணுவத்தைச் சேர்ந்த 4,416 பேரும் கடற்படையைச் சேர்ந்த 847 பேரும் விமானப்படையைச் சேர்ந்த 686 பேரும் அடங்குவர். மேலும், காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த சுமார் 175 ஆயுதப்படை வீரர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர்.



✸ **1,650**: ராணியின் இறுதிச் சடங்கிற்குப் பிறகு வெஸ்ட்மின்ஸ்டர் அபேயிலிருந்து வெலிங்டன் ஆர்ச் வரை ராணியின் சவப்பெட்டியின் ஆடம்பரமான ஊர்வலத்தில் குறைந்தபட்சம் அந்த எண்ணிக்கையிலான இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். மேலும் 1,000 பேர் சவப்பெட்டி வின்ட்சரை அடையும் போது, 410 இராணுவ வீரர்கள் ஊர்வலத்தில் பங்கேற்பார்கள், 480 பேர் தெருக்களில் வரிசையாக இருப்பார்கள், 150 பேர் மரியாதை மற்றும் வரிசைப் படிகளில் மற்றும் 130 பேர் மற்ற சடங்குகளை நிறைவேற்றுவார்கள்.

✸ **142**: திங்களன்று ராணியின் சவப்பெட்டியைச் சுமந்து செல்லும் அரசு துப்பாக்கி வண்டியை இழுத்தராயல் நேவி

✸ **10,000** க்கும் மேற்பட்டோர்: பொலிஸ் அதிகாரிகள். பெருநகர காவல்துறை துணை உதவி ஆணையர் ஸ்டுவர்ட் கண்டி கூறுகையில், "மிகவும் சிக்கலான" காவல் நடவடிக்கை லண்டன் படையின் வரலாற்றில் மிகப்பெரியது, இது லண்டன் 2012 ஒலிம்பிக்கை விஞ்சியது, இது ஒரு நாளைக்கு 10,000 பொலி அதிகாரிகள் வரை பணியில்இருந்தார்கள்

✸ **22**: மத்திய லண்டனில் மட்டும் மைல்கள் (36 கிலோமீற்றர்) தடுப்புகள் அமைக்கப்பட்டன, கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும் பார்லிமென்ட், வெஸ்ட்மின்ஸ்டர் அபே மற்றும் பக்கிங்ஹாம் அரண்மனையைச் சுற்றியுள்ள முக்கிய பகுதிகளை பாதுகாப்பாக வைத்திருந்தனர்.

✸ 1 மில்லியன்: லண்டன் போக்குவரத்து அதிகாரிகள் திங்களன்று தலைநகருக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். நகரத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மக்களை நகர்த்துவதற்காக சுமார் 250 கூடுதல் ரயில் சேவைகள் இயக்கப்படும்.

✸ **5**: மைல்கள் (8 கிலோமீற்றர்) மக்கள் வெஸ்ட்மின்ஸ்டர் ஹாலில் உள்ள ராணியின் சவப்பெட்டியைக் கடந்தும் வரிசையில் நிற்கிறார்கள். தேம்ஸ் நதியின் தென்கரையில் உள்ள நாடாளுமன்ற மாளிகையிலிருந்து சவுத்வார்க் பூங்கா வரை மாபெரும் வரிசை நீண்டிருந்தது. திங்கட்கிழமை அதிகாலையில் லையிங்-இன்-ஸ்டேட் மூடப்படும் வரை வரிசையில் இருப்பவர்களின் எண்ணிக்கை தெரிய வாய்ப்பில்லை.

✸ **125**: திங்கட்கிழமை இறுதிச் சடங்கை நேரடியாக ஒளிபரப்பிய திரையரங்குகள்

✸ **2,868**: வைரங்கள், 17 சபையர்கள், 11 மரகதங்கள், 269 முத்துக்கள் மற்றும் 4 மாணிக்கங்களுடன் ராணியின் சவப்பெட்டியில் தங்கியிருந்த இம்பீரியல் ஸ்டேட் கிரீடத்தில் மின்னுகின்றன.

✸ **2**: வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் இறுதிச் சடங்கின் முடிவில் சில நிமிடங்கள் மௌனம்.

✸ **சவப்பெட்டி**: ஆடம்பரம், ஆடம்பரம் மற்றும் பாதுகாப்பு என்ற பலநாட்கள் நீடித்த புயலில் அமைதியான கண் என்பது பெரும்பாலான பிரிட்டன்கள் அறிந்த ஒரே மன்னரைச் சுமந்து செல்லும் ஒற்றை, கொடியால் மூடப்பட்ட ஓக் சவப்பெட்டியாகும். ■

---

# பாரம்பரிய பிரதேசங்களில் பறிபோகின்றதா...

(08 ஆம் பக்கத்தொடர்ச்சி...)

ஒன்றையும் பௌத்த விகாரை ஒன்றையும் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த பௌத்த மத ஆக்கிரமிப்பை எதிர்த்து இந்துசமயப் பெரியார்களும் மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்த ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் அரச அங்கீகாரம் பெற்ற நடவடிக்கைகளாகும். இதற்கு அரசாங்கம் முழுமையாக அங்கீகாரம் வழங்கியிருக்கின்றது. இது சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்களின் தமிழர்கள் மீதான இன அழிப்புத் தொடர் நடவடிக்கையின் மறைநிலை நிகழ்ச்சி நிரலாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் மலைப் பிரதேச காணி அபகரிப்பு நடவடிக்கை குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்று பாராளுமன்றத்தில் இது குறித்து கேள்வி எழுப்பியிருந்த பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்குப் பதிலளித்ததுமாகிய தண்ணிமுறிப்பு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள காணி அபகரிப்பு நடவடிக்கை குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்துள்ள புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உடனடியாகவே தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அந்த நடவடிக்கையை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

மேலோட்டப் பார்வையில் இந்த நடவடிக்கை உண்மையிலேயே நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையை இடைநிறுத்துவதற்கான உத்தரவாக - செயற்பாடாகத் தோன்றினாலும் அது ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகவே தெரிகின்றது. அத்துமீறிய நிலையில் தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதற்கு முற்பட்ட தொல்பொருள் திணைக்களத்தை விசாரணைக்கு உட்படுத்தி, ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு நிர்வாக ரீதியிலும் சட்ட ரீதியிலும் நடவடிக்கை



எடுக்கப்பட வேண்டும். அத்தகைய நடவடிக்கை எதுவும் இல்லாமல் வெறுமனே எல்லைக் கற்களைப் பதிக்கின்ற நடவடிக்கையை இடைநிறுத்துமாறு உத்தரவிடுவது தற்போதைக்கு அந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையை ஆறப்போடுகின்ற செயற்பாடே அல்லாமல் வேறொன்றுமில்லை.

தமிழ் மக்களின் பாரம்பரிய வரலாற்றுச் சிறப்புடைய வழிபாட்டு இடங்களையும் அதனைச் சூழ்ந்த காணிகளையும அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆக்கிரமித்து அபகரிப்பது என்பது ஓர் இன அழிப்பு நடவடிக்கையே அல்லாமல் வேறொன்றுமில்லை. அதுவும் நாடு மிக மோசமான பொருளாதாரம் சார்ந்த நெருக்கடிகளுக்குள் சிக்கித் திணறுகின்ற நிலையில் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை அரச இயந்திரங்கள் முழ்கி விட்டிருப்பது மிக மிக மோசமான செயற்பாடாகும்.

அதிலும் இலங்கையின் மனித உரிமை மீறல் நிலைமைகள் தொடர்பிலும் போர்க் குற்றச் செயற்பாடுகள் தொடர்பிலும் பொருளாதார உரிமை மீறல்கள் தொடர்பிலும் பொறுப்பு கூறும் விடயத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை கரிசனையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற தருணத்தில் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றிருப்பது இலங்கை அரசாங்கத்தின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளையும் தமிழர்களின் அடிப்படை வாழ்வுரிமை மீறல்களையுமே வெளிச்சம் போட்டுக் காண்பித்திருக்கின்றன. இது குறித்து தமிழ்த்தரப்பினர் அரசியல், சமூக மட்டங்களில் ஒன்றிணைந்த போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இந்தப் போராட்டம் நீதிமன்றப் பொறிமுறையிலும் சர்வதேச மனித உரிமை மற்றும் சர்வதேச மனிதாபிமான வாழ்வுரிமை மீறல் முறையிலும் விரிவுபடுத்தப்பட வேண்டியதும் அவசியம். ■

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

# மந்திகை ஆதார வைத்திய.....

அவர் வைத்தியராக முன்பு வேலை செய்த இடம் நேர்மை கண்ணியம் கட்டுப்பாடு என்பவற்றிற்கு பேர்போன கட்டமைப்புக்குள் செயற்பட்டவர்.

பின்னர் கொரோனா ஊசி மோசடி ரூபவ் கொரோனா இடைத்தங்கள் நிலையங்களில் இடம்பெற்ற மோசடி ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரனிடம் சரணடைந்துவிட்ட நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு தகுதியற்ற தற்காலிக பொறுப்பதிகாரியாக நியமனம் பெற்றவர்.

**பிரச்சினை தோன்றக் காரணம்**

மந்திகை வைத்தியசாலை அபிவிருத்தித் திட்டங்களை கண்காணிக்க என அமைக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பில் உள்ள பெண் ஒருவருக்கு புதிய வீடு அமைப்பதற்காக வைத்தியசாலையில் இருந்து மணல், கல் ஏற்றப்பட்டதாக குற்றச்சாட்டுகள் தொடர்பில் கருத்து மோதல்கள் இடம்பெற்றது.

அதெல்லாம் வைத்தியர் ஒருவர் கார் வாங்குவதற்காக வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பு நிதியில் சிறிய தொகை ஒன்று கைமாற்றாக வழங்கப்பட்ட சம்பவங்களே பிரச்சினைகள் மற்றும் நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை.

மந்திகை ஆதார வைத்தியசாலையின் கணக்காளரோ அல்லது பிராந்திய சுகாதார பிரிவின் கணக்காளரோ அல்லது வடமாகாண சுகாதார பணிமனை கணக்காளரோ குறித்த நிதி விடயம் தொடர்பில் கையாளப்படவில்லை. அதுமட்டுமல்லாது கொடையாளர்கள் வழங்கிய பணத்திற்கு முறையான பற்றுச்சீட்டு வழங்காமை தொடர்பில் வடமாகாண உள்ளக கணக்காய்வுப் பிரிவும் அதிர்தி தெரிவித்துள்ளது.

**கேதீஸ்வரன் தலைமையில் முறையற்ற நிர்வாகம்**

வைத்தியசாலையின் அபிவிருத்தி பணிகளை கையாள்வதற்காக முன்னாள் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் கலாநிதி வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தலைமையில் அமைக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பு யாப்பு விதிகளுக்கு முரணானது என வடமாகாண உள்ளக கணக்காய்வுப் பிரிவு வெளிப்படையாகவே தனது விசாரணை அறிக்கையில் கூறியுள்ளது .

அது மட்டும் அல்லாது குறித்த நிர்வாகத்தில் இணைக்கப்பட்ட அங்கத்தவர்கள் தொகையும் குறித்த வைத்தியசாலையில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள யாப்பு விதிகளை மீறுவதாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அவர் வந்தால் பல்வேறு முறைகேடுகள் வெளிவந்து விடும் என்ற நோக்கத்துக்காக வைத்தியர் கமலநாதனும் முன்னாள் வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் இணைந்து மந்திகை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளரைத் தூண்டிவிட்டு கடிதம் ஒன்றை எழுதினார்கள்.

செயலாளருக்கும் தேவை இருக்கிறது ஏனெனில் குறித்த வைத்தியசாலையில் இடம்பெற்று அபிவிருத்தித் திட்டங்களின் பெரும்பான்மை அவரின் உறவினர் ஒருவருக்கு வழங்கப்பட்ட நிலையில் தானும் காப்பாற்றப்பட வேண்டும் தன்னோடு சேர்ந்தவர்களும் காப்பாற்றப்பட வேண்டும் என்ற எண்ணத்திற்காக அவரும் கடிதம் எழுதினார்.

அவர்கள் அத்தோடு நின்றுவிடவில்லை அவர்கள் குறித்த வைத்தியசாலை நலன்புரிச் சங்கம் என்ற போர்வையில் அனைவருடைய சம்மதமும் இன்றி திருட்டுத்தனமாக ஒருவரை வசப்படுத்தி ஏற்கெனவே எங்கள் வைத்தியசாலையின் அத்தியட்சகர் விசா ரணையில் இருக்கிறார் நீக்கப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி புதியவர் வேண்டாம் என்றார்கள்.

கூட்டுக் களவாணிகள் தொடர்ந்தால் வைத்தியசாலையின் எதிர்காலம் கேள்விக்குறி.

வைத்தியர் கமலநாதனை மீண்டும் பதவியில் இருத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளை மக்களும் ஏனைய வைத்தியர்களும் இணைந்து தோற்கடிக்க வேண்டும். அவரை பதவியில் அமர்த்துவதற்காக வடமாகாண ஆளுநருக்கு சுகாதார அமைச்சுக்கும் குறித்த வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் தர்ஷன் கடிதம் அனுப்பியுள்ளார்.

இவ்வாறான நிலையில் குறித்த வைத்தியசாலையைப் பயன்படுத்தும் மக்கள் மற்றும் நன்கொடையாளர்கள் குறித்த வைத்தியசாலையில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் வெளியிடப்பட்ட மாகாண உள்ளக கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பில் இதுவரை பொறுப்பாளர்கள் பதிலளிக்கவில்லை.

தமது பக்கம் நியாயம் இருக்குமானால் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு ஏன் வைத்தியர் கமலநாதன் மற்றும் வைத்தியர் கேதீஸ்வரன் மறுத்துப் பதிலளிக்கவில்லை. ஆகவே, எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என மீண்டும் கூட்டுக் களவாணிகளை வைத்தியசாலைக்குள் அனுமதித்தால் தொடர்ந்தும் முறையற்ற நிர்வாகம் மற்றும் நிதிமோசடிகள் இடம் பெறும் என்பதே விசாரணைகுழு அறிக்கைகள் மூலம் உணரக்கூடியதாக உள்ளது. ■

காட்டிக்கொடுப்புகளுக்கு மூலகாரணமாக அமைந்ததாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் மூலம் அறியக்கிடைத்தது.

எது எவ்வாறாயினும் வடமாகாண பிரதம உள்ளக கணக்காய்வாளரால் விசாரணை மேற்கொள்ளப்பட்ட விடயங்களை மையமாக வைத்து குறித்த வைத்தியசாலையில் என்ன நடந்தது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது பற்றி அலசுவோம்.

**அனுமதியின்றிய அபிவிருத்தித் திட்டங்கள்**

மந்திகை ஆதார வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சுமார் 22 அபிவிருத்தித் திட்டங்களில் 10 அபிவிருத்தித் திட்டங்கள் மட்டும் முறையான அனுமதி பெற்று இடம்பெற்றதாக முறைகேடுகள் தொடர்பில் விசாரணை நடாத்திய வடமாகாண உள்ளக கணக்காய்வுப் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும், அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் போது சிறந்த விலை மனுக்கோரல் இன்றி வைத்தியசாலையுடன் சார்ந்த நபர் ஒருவருக்கு திட்டங்கள் வழங்கப்பட்டமை தொடர்பிலும் விசாரணைக் குழு தனது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது.

**நிதி கையாளப்பட்ட விதத்தில் குழறுபடி**

வைத்தியசாலைக்கு அபிவிருத்தித் திட்டங்களுக்கு என புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் கொடையாளர்கள் மற்றும் வடமராட்சி பிரதேசத்தைச் சார்ந்தவர்களிடமிருந்து சுமார் 5 கோடிக்கு அதிகமான நிதி பெறப்பட்ட நிலையில் அவற்றுக்கான பற்றுச் சீட்டுகள் வழங்கும் போது நிர்வாக

ஆளுநரிடம் சென்ற முறைப்பாடும் கணக்காளர் இடமாற்றமும் மந்திகை வைத்தியசாலையில் இடம்பெற்ற நிர்வாக நிதி முறைகேடுகள் தொடர்பில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கு எழுத்து மூலமாக ஆவணம் ஒன்று அனுப்பப் பட்ட நிலையில் அது தொடர்பில் குறித்த வைத்தியசாலையின் முன்னைய பொறுப்பு அதிகாரியாக செயற்பட்ட கமலநாதன் நேரடியாக ஆளுநர் செயலகம் அழைக்கப்பட்டு கேள்வி மேல் கேள்வி கேட்கப்பட்டார்.

அத்தோடு ஆளுநர் நின்று கொள்ளவில்லை பிரதம கணக்காளரிடம் ஏன்? முறைகேடுகள் தொடர்பில் ஆளுநர் செயலகத்துக்கு தெரியப்படுத்தவில்லை என்ற கேள்வியை எழுப்பிய நிலையில் கணக்காளரிடமிருந்து முறையான பதில்கள் கிடைக்காத பட்சத்தில் வடமாகாண பிரதம உள்ளகக் கணக்காளராக பதவி வகித்த சுரேஜினி ஆளுநரால் உடனடியாக இடமாற்றப்பட்டார். புதிய வைத்திய அத்தியட்சகர் திருமதி.யாழினி பேரின்நாதன் நியமனத்தைத் தடுக்க முனையும் ஊழல்வாதிகள்.

முன்னாள் பொறுப்புவைத்தியர் கமலநாதன் குறித்த வைத்தியசாலையில் இடம்பெற்ற பல்வேறு முறைகேடுகளின் பின்னணியில் இருக்கின்ற நிலையில் அவரை மாற்றி தற்காலிக வைத்தியராக சாவச்சேரி வைத்தியசாலையில் கடமையாற்றிய அத்தியட்சகர் கடந்த வாரம் நியமிக்கப்பட்டார்.

---

(14 ஆம் பக்கத்தொடர்ச்சி...)

# தமிழர் சிறப்பை...



போன்ற நற்பணிகளைப் புரிந்து வருகிறது.

இன்று சுவிஸ் நாட்டின் சூரிச்சிவன் ஆலயத்தின் சைவத்தமிழ் சங்கத்தின் அடையாளமாகவும் இதயமாகவும் திகழும் சிவபுரவளாகத்தின் மூதாளர் இல்லம் இவ்வளாகத்தில் சிவன் கோவில் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளமை இப்பிரதேச இந்து மக்களுக்கு மிகவும் வரப் பிரசாதம். முதியோர் இல்லமானது இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கேற்ற முறையில் இயற்கையான மரங்கள், மரத்தினாலும் ஓலையினாலும் அமைந்த கூடாரங்கள், தமிழ் அடையாளங்களைப் பிரதிபலிக்கும் தமிழ் சொற்கள், தமிழர் விழுமியங்கள், முதியோர்கள் பொழுதைக் கழிப்பதற்கேற்ப வசதிகள் ஒவ்வொருவருக்கும் ஏற்ற வகையில் தங்குமிட வசதிகள் அவர்களை பராமரிக்க பணியாளர்கள், தாதியர்கள், சமையலாளர்கள், காவலர்கள், வாகன வசதிகள், அன்பே சிவத் தொண்டர்கள் என அனைத்து வசதிகளோடும் ஆரம்பத்திலே அமைந்திருப்பது ஈழத்தில் உள்ளவர்களுக்கு எப்போதும் பயனடையக் கூடிய ஒரு வளாகமாக எழுச்சி கொள்கிறது.

சிவபுரவளாகத்தில் அரைக்கும் ஆலை உணவகம் என்பனகூட அமைந்திருப்பது இப்பிரதேசத்தவர்களுக்கும் இவ்வீதியால் பயணிப்பவர்களும் இளைப்பாறிச் செல்ல ஒரு நல்ல வாய்ப்பாக உள்ளது.

புலம்பெயர் நாட்டில் உள்ளவர்களும் ஈழத்தில் உள்ளவர்களும் இவ்விடத்தை வந்துபார்த்து செல்வதற்கும் முதியோருடன் கலந்துரையாடி செல்லவும் நல்ல வாய்ப்பு. எமது முதியோர்கள் இறுதிக் காலங்களில் சிறப்பான வாழ்க்கையை வாழ்வதற்கு ஏற்ற விதத்தில் சிவபுரவளாகத்தின் மூதாளர் அன்பு இல்லம் அமைந்திருப்பது தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பெருமை கொள்வதோடு அவ்வில்லத்துக்குச் சென்று முதியவர்களுடன் கலந்துரையாடி சிவபுரவளாகத்தின் வளரச்சியினைப் பார்ப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். எமது இனத்தின் எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்கு எப்போதும் முதுகெலும்பாகத் திகழ்ந்த முதியவர்களை கவனிப்பாரின்றி விடாமல் கவனிக்க முடியாமல் விட்டால் மூதாளர் அன்பு இல்லத்தில் இணைந்தால் அவர்கள் சௌபாக்கியங்களுடன் வாழ வாய்ப்பாக இருக்கும். ■



# ரஷ்யாவுக்குத் தடை பெலாரஸ்க்கு அனுமதி

ஜேர்மனியில் 2024 ஆம் ஆண்டு நடைபெறும் யூரோ கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடுவதற்கு ரஷ்யாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஆனால், பெலாரஸ் பங்குபற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2024 ஆண்களுக்கான ஐரோப்பிய சாம்பியன்ஷிப்பிற்கு தகுதி பெறுவதற்கு ரஷ்யாவை காற்பந்தாட்டத்தின் ஐரோப்பிய ஆளும் குழுவான UEFA தடை செய்துள்ளது, ஆனால், பெலாரஸ் பங்கேற்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரியில் உக்ரைன் படையெடுப்பைத் தொடர்ந்து பீபா, யூரோ ஆகியவை ரஷ்ய கிளப்புகள் மற்றும் தேசிய அணிகளை தங்கள் போட்டிகளில் இருந்து நீக்கும் நிலைப்பாட்டை எடுத்துள்ளன, ஆனால் பெலாரஸ்ய அணிகள் தொடர்ந்து பங்கேற்க அனுமதிக்கப்பட்டுள்ளன, நடுநிலை மைதானங்களிலும் மூடிய கதவுகளுக்குப் பின் னாலும் தங்கள் ஐரோப்பிய மற்றும் சர்வதேச போட்டிகளில் விளையாடுகின்றன.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி, இரு நாட்டு வீரர்களும் அதிகாரிகளும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

குரோஷியாவின் ஹ்வார் தீவில் நடந்த கூட்டத்தில், யூரோ 2024க்கான தகுதிப் போட்டியில் ரஷ்யா பங்கேற்க அனுமதிக்கப்படாது என்று UEFA வின் நிர்வாகக் குழு முடிவு செய்தது.

கட்டாரில் நடைபெறும் 2022 ஆண்களுக்கான பீபா உலகக் கிண்ணம், UEFA மகளிர் யூரோ 2022 இன் முக்கிய போட்டிக்கு தகுதி பெறுவதில் இருந்து ரஷ்யா ஏற்கெனவே வெளியேற்றப்பட்டுள்ளது, மேலும் அதன் கிளப்புகள் இந்தப் பருவத்தில் ஐரோப்பிய போட்டிகளில் பங்கேற்கவில்லை. ஜூலையில் நடந்த பீபா, UEFA போட்டிகளில் இருந்து ரஷ்ய அணிகள் விலக்கப்படுவதை விளையாட்டுக்கான நடுவர் நீதி மன்றம் உறுதி செய்தது.

உக்ரைன் மீதான படையெடுப்பில் நாட்டின் ஆதரவான பங்கு இருந்தபோதிலும் UEFA யூரோ 2024 க்கு தகுதிபெற பெலாரஸ் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய மற்றும் பெலாரஸ்ய அதிகாரிகளும் பீபா, UEFA இல் தங்கள் பதவிகளைத் தக்கவைத்துள்ளனர், ரஷ்யாவின் காற்பந்து ஒன்றியத்தின் தலைவர் அலெக்சாண்டர் டியூகோவ் கண்ட நிர்வாகக் குழுவில் உள்ளார்.

ஒரு பெரிய காற்பந்து போட்டிக்கு ஒருபோதும் தகுதி பெறாத பெலாரஸ், UEFA யூரோ 2024 க்கு தகுதி பெறும் 53 நாடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. ■

# பவுல் அவுட்டில் மீண்டும் வென்ற இந்தியா

தென் ஆபிரிக்காவில் கடந்த 2007 இல் வரலாற்றில் முதல் முறையாக ரி20 உலகக் கிண்ணப் போட்டி நடைபெற்றது. அதில் எம்.எஸ் டோனி எனும் கேப்டன்ஷிப் அனுபவமில்லாதவர் தலைமையில் அனுபவமும் இளமையும் கலந்த வீரர்களுடன் சொல்லி அடித்த இந்தியா யுவராஜ் சிங்கின் 6 பந்துகளில் 6 சிக்ஸர்கள் உட்பட ஒவ்வொரு போட்டியிலும் மஜிக் நிகழ்ச்சி யாருமே எதிர்பாராத வகையில் சம்பியனானது.

உலகக் கிண்ண முதல் போட்டியை பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா துவக்கிய விதத்தையும் ரசிகர்கள் மறக்க முடியாது. டர்பன் நகரில் நடைபெற்ற தன்னுடைய முதல் லீக் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 141/8 ஓட்டங்கள் எடுக்க அதை துரத்திய பாகிஸ்தானும் 20 ஓவர்களில் சரியாக 141/7 ஓட்டங்கள் எடுத்ததால் போட்டி டையில் முடிந்தது. அதனால் அந்த சமயத்தில் சூப்பர் ஓவர் பிரபலமில்லாத நிலைமையில் வெற்றியைத் தீர்மானிப்பதற்காக உதைபந்தாட்டத்தில் பயன்படும் பவுல் அவுட் முறை வரலாற்றிலேயே முதன் முறையாகக் கொண்டுவரப்பட்டது.

ஸ்டம்பை குறி பார்த்து பந்து வீச 5 வாய்ப்புகள் கொடுக்கப்பட்ட நிலையில் இந்தியா சார்பில் வீரேந்திர சேவாக், ரொபின் உத்தப்பா, ஹர்பஜன்சிங் ஆகியோர் சுழலில் மாயாஜாலம் நிகழ்த்துவதைப் போல் பின்புறத்தில் டோனி அமர்ந்திருந்ததைப் பயன்படுத்தி துல்லியமாக பந்து வீசி முதல் 3 வாய்ப்புகளில் விக்கெட்டை வீழ்த்தினர். ஆனால், டோனியின் யுக்தியை பாகிஸ்தான் விக்கெட் கீப்பர் கம்ரான் அக்மல் கவனிக்கத் தவறிய நிலையில் ஷாஹித் அப்ரிடி, உம்ராகுல் போன்ற பாகிஸ்தான் வீரர்கள் ஒருமுறை கூட ஸ்டம்பை அடிக்காமல் கோட்டை விட்டதால் இந்தியா வெற்றி பெற்றது.

16 வருடங்கள் கடந்தும் அந்த நிகழ்வு ரசிகர்களின் நினைவுகளில் இன்னும் புதுப்பொலிவுடன் ஜொலிக்கும் நிலையில் நடைபெற்று முடிந்த ஆசியக் கிண்ணப் போட்டியில் அந்தத் தருணத்தை இந்தியா பாகிஸ்தானைச் சேர்ந்த முன்னாள் ஜாம்பவான் வீரர்கள் மீண்டும் நிகழ்த்திய வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. அதாவது, ஆசியக் கிண்ண வர்ணனையாளராகப் பணியாற்றிய இந்தியா பாகிஸ்தானைச் சேர்ந்த முன்னாள் வீரர்கள் டீம் ப்ளூ மற்றும் டீம் க்ரீன் என்ற 2 பிரிவுகளாகப் பிரிந்து பவுல் அவுட் போட்டியில் ஈடுபட்டனர்.

பாகிஸ்தான் முன்னாள் வீரர் மற்றும் தற்போதைய வாரியத் தலைவர் ரமீஷ் ராஜா முதல் பந்திலேயே ஸ்டம்ப்பை அடிக்கத் தவறவிட்ட நிலையில் இந்திய ஜாம்பவான் சுனில் கவாஸ்கர் கச்சிதமாக அடித்து கொண்டாடினார். அதன் பின் பாகிஸ்தானின் ஆமிர் சோஹைல் தவறவிட்ட ஸ்டம்பை இந்தியாவின் ஜாம்பவான் வி.வி.எஸ்.லக்ஷ்மன் சரியாக அடித்துக் கொண்டாடினார். அப்போது நான் சரியாக அடிப்பேன் என்று பேசிய பாகிஸ்தானின் சோயப் அக்தர் செயலில் காட்டத் தவறி தலையைத் தொங்கப் போட்டார். ஆனால், தமிழகத்தின் முன்னாள் வீரர் லக்ஷ்மன் சிவராம கிருஷ்ணன் 3 ஆவது பந்தைச் சரியாக வீசி இந்திய ஜாம்பவான்கள் அணியை வெற்றிபெற வைத்தார். இதைப் பார்க்கும் இந்திய ரசிகர்கள் சில விடயங்கள் எப்போதுமே மாறாது என்றும் 2007 மட்டுமல்ல எப்போதுமே பவுல் அவுட் என்றால் அதனுடைய சாம்பியன் இந்தியா தான் என்று கொண்டாடுகின்றனர். ■




# புலம்பெயர்ந்தவர்களுக்கு இழப்பீடு வழங்க வலியுறுத்தல்



தொழிலாளர் அமைப்பு இன்னும் செயல்பாட்டில் உள்ளது. ஆனால், ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் இன்னும் சுரண்டப்படுகிறார்கள் என்ற 2021 ஆம் ஆண்டு பொது மன்னிப்பு அறிக்கையை கட்டார் அரசாங்கம் மறுத்தது.

உலகக் கிண்ணப் போட்டிக்கான உட்கட்டமைப்பை நிர்மாணிக்கும் போது காயமடைந்த அல்லது கொல்லப்பட்ட கட்டாரில் குடியேறிய தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று இங்கிலாந்து காற்பந்து சங்கம் (FA) புதன்கிழமை தெரிவித்துள்ளது.

மற்ற வெளிநாட்டினருடன் சேர்ந்து நாட்டின் மக்கள்தொகையில் பெரும் பகுதியை உள்ளடக்கிய புலம்பெயர்ந்த தொழிலாளர்களை நடத்துவது தொடர்பாக மனித உரிமை குழுக்களிடமிருந்து கட்டார் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பு மற்றும் சிகப்பு சதுக்கம் செவ்வாயன்று பீபாவின் பங்காளிகளும் உலகக் கோப்பை ஆதரவாளர்களும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்க உலக காற்பந்து நிர்வாகக் குழுவையும் கட்டார் அரசாங்கத்தையும் வலியுறுத்த வேண்டும். மே மாதம், அம்னெஸ்டி மற்றும் பிற உரிமைக் குழுக்கள், மனித உரிமை மீறல்களுக்கு இழப்பீடாக 440 மில்லியன் டொலர்களை ஒதுக்குமாறு பீபாவிடம் கோரிக்கை விடுத்தன.

“கட்டுமானத் திட்டங்களில் உயிரிழந்த அல்லது காயமடைந்த புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான கொள்கையை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்” என்று FA தலைமை நிர்வாகி மார்க் புல்லிங்ஹாம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார். ■

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 24.09.2022 அன்று வெளியிடப்பட்டது.


சிறப்பிதழ்
THEEMPUNAL
# தீம்புனல்



குருக்கட்டு பிள்ளையார் ஆலய சிறப்பிதழ் உள்ளே

Email : news@theempunal.com | பக்கங்கள் - 06 | 24.09.2022 சனிக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

# வல்லிபுர ஆழ்வார் ஆலய



# மஹோற்சவ சிறப்பிதழ்

‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’



ஆறுமுகம் கந்தப்பு

# ஸ்ரீ வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கோவில் பூர்வீக வரலாறு

இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தின் வடகீழ்ப் பகுதியாகிய பருத்தித்துறையில் 'வல்லிபுரம்' என்னும் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தை 'வல்லிபுரக் குறிச்சி' என்றும் அழைப்பார்கள். வல்லிபுரம் என்னும் கிராமத்தில்தான் வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலயம் அமைந்துள்ளது. இதனால் எல்லோரும் வல்லிபுரக் கோவில் என்றே அழைக்கின்றார்கள். இங்ஙனம் அழைப்பதற்கு இன்னுமோர் காரணமும் உண்டு. வல்லிபுரக் கோவில் முதன் முதலில் தனது காணியில் கட்டி பூசை செய்தும் பராமரித்தும் வந்தவர் வல்லிபுரம் ஆழ்வார் உடையார் என்பவரே. மேலே குறிப்பிட்ட காரணங்களால் 'வல்லிபுரக் கோவில்' என்றே எல்லோராலும் அழைக்கப்படுகின்றது. இது ஈழத்து புராதன விஷ்ணு ஷேத்திரங்களில் ஒன்றாகும்.

இவ்வாலயம், பருத்தித்துறையிலிருந்து மருதங்கேணிக்குச் செல்லும் பிரதான வீதியில் நான்கு கிலோமீற்றர் தொலைவில் கீழ்த்திசையில் காட்சியளிக்கிறது. மேற் (கிழக்கு) திசையில் வல்லிபுரக் குருக்கட்டுச் சித்திவிநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. இவ்விரு ஆலயங்களின் உரிமைக்காரரர் வல்லிபுரத்திலேயுள்ள மூத்த குடியினரான தானத்தார் வம்சத்தைச் சேர்நதவர்களே. இவர்கள் விஷ்ணு அடியார்கள், கோவில் அதிகாரிகள் நாற்பது குடும்பங்கள் வரை வல்லிபுரத்தில் வசிக்கின்றார்கள். இவர்களின் மூதாதையர்களில் ஒருவரான வல்லிபுரம் ஆழ்வார் உடையார் என்பவர் 'வல்லிபுரம்' என்ற பெயரை உடைய தனது சொந்தக் காணியில் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலயத்தைக் கட்டினாரென பல ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது.

ஆரம்பத்தில் தென்னங்கிடுகுகளால் வேயப்பட்ட கொட்டிலாக அமைக்கப்பட்டு, மேற்படி கொட்டிலில் சக்கரத்தை பிரதிஷ்டை செய்து வல்லிபுரம் ஆழ்வாரே பூசை செய்தும் நிர்வகித்தும் வந்தாரென்று வரலாறு கூறுகிறது. இவருடைய சீவிய காலம் வரை இவ்வாலயத்தை இவரே பூசை செய்து ஆலய உரிமைக்காரனாகவும் இருந்து வந்தார். இவர் சந்ததியற்று இறக்கும் போது இவருடைய சகோதரன் வேலர் மகன் சேதர் உடையார் என்பவர் மேற்படி ஆலயத்திற்கு உரிமைக்காரனாகிப் பூசையும் செய்து நிர்வகித்தும் வந்தார். இவர் கிடுகு கொட்டிலாக இருந்த கோயிலை கற்கட்டடமாக அமைத்தார். கோயிலுக்குக் கிழக்கே மணல் பரப்பில் காணப்படும் முருகைக் கற்களே கட்டிடத்திற்குப் பாவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. வேலர் சேதர் உடையார் என்பவர் ஆண்டு இறக்கும் காலம் இவருடைய மகன் சேதர்தாமர் அல்லது தாமோதரர் உடையார் என்பவர் கோயிலுக்கு உரிமைக்காரனாகி பூசையும் செய்து நிர்வகித்தும் வந்தார்.

ஆரம்பத்தில் பூசகர்களே பூக்களை எடுத்துப் பூசை செய்து வந்தார்கள். தாமோதரர் ஆண்டு இறக்கும் காலம் இவரின் பிள்ளைகள் நினைவர், ஆழ்வார் சேதர் என் போர் கோவிலுக்கு உரிமைக்காரர் ஆனார்கள். நினைவர் சுவாமிக்குப் பூசை செய்தார். மற்றவர்கள் கோயிலிலுள்ள ஏனைய பணிவிடைகளைச் செய்தார்கள். நினைவர் உடையாராகவும் கடமையாற்றியுள்ளார். வல்லிபுரக் கோவிலுக்குப் பூசை செய்த வல்லிபுரம் தானத்தார் சந்ததியைச் சேர்ந்த கடைசிப் பூசகர் நினைவாத்தை உடையாராகும். (நினைவர்தான் நினைவாத்தை உடையார்)


சேதர் தாமோதரரும் தாமோதரர் நினைவர் உடையாரும் முக்கியமான மனிதர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். இவர்கள் காலத்தில் இவர்கள் இருவரும் பெருநிலக்கிழாராயிரந்தமையால் தமது சொந்தச் சொத்துக்களில் பெரும்பாகத்தைத் தர்மசாதனம் செய்து கோவில் அமைந்த நிலத்தையும் ஆழ்வார் பெயரிலே எழுதிக்கோயிற் பூசகர்களாயும் அதிகாரிகளாயும் இருந்து கோவில் நிர்வாகத்தை மேற்கொண்டு வந்தனர். பிற்காலத்தில் பண்டாரிகளையும் பிராமண அர்ச்சகர்களையும் நியமித்ததாக அவர்கள் எழுதிய ஆவணங்கள் மூலம் அறியக்கூடியதாயிருக்கிறது. இவர்களுடைய காலங்களில் ஆதி மூலத்திருப்பணி, சுற்றுமதில் திருப்பணிகளும் நிறைவு செய்யப்பட்டதாகவும் இவர்கள் எழுதிய ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது.

நினைவர் உடையார் இறக்கும் காலம் இவருடைய பெண் பிள்ளைகளான வல்லி நாச்சன், ஆழ்வாத்தை, நாச்சிப்பிள்ளை, பொன்னாச்சி ஆகிய நால்வரும் உரிமைக்காரரானார்கள். இவர்கள் காலத்தில் இவர்களுக்கு உதவியாக மயில்வாகனம், சுப்பிரமணியம் என்பவர் மேற்படி ஆலயத்திற்குப் பல திருப்பணி வேலைகளைச் செய்துள்ளார்.

இவருக்குப் பின் துன்னாலையைச் சேர்ந்த மயில்வாகனம் தாமோதரம்பிள்ளை உடையார் கோயில் உரிமைக்காரரும் அதிகாரிகளுமான தானத்தாரோடு சேர்ந்து பல திருப்பணி வேலைகளைச் செய்ய உதவினார் என்பது வரலாறு. அன்னாரின் தொண்டு நினைவு கூரத்தக்கதாகும். ஆலயம் நன்றாக சிறப்புற்று விளங்கத்தொடங்கியது.

ஏராளமான பக்தர்கள் கோயிலுக்கு வரத் தொடங்கினார்கள். இதனால் நினைவர் உடையாரின் வழித்தோன்றல்கள் மாதகலைச் சேர்ந்த பிராமண அர்ச்சகர்களை ஆழ்வார் சுவாமிக்குப் பூசை செய்ய நியமித்தார்கள். அவர்களின் சந்ததியில் வந்த வைத்தீஸ்வரக் குருக்கள், கருணாகரக் குருக்கள் இருவரும் பிரபல்யமானவர்கள்.

இவர்களுக்குப் பின் அன்னாரின் மருமகன் கணபதிச்சாமிக் குருக்கள் கோவிலின் பிரதமகுருக்களாக இருந்தார்கள்.



1960ல் தோற்றம்

தற்சமயம் அவர்களுடைய புத்திரர்கள் சுதர்சனக் குருக்கள், இராமச்சந்திரக் குருக்கள், புருஷோத்தம குருக்கள் ஆகியோர் அப்பணியை மிகச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள்.

இன்னும் ஓர் விஷ்ணு ஆலயம் இயக்கச்சியைச் சேர்ந்த 'மல்வில்' என்னுமிடத்தில் தானத்தார் சந்ததியினரால் கட்டப்பட்டு பாரம்பரி யமாகப் பூசையும் செய்தும் நிர்வகிக்கப்பட்டும் வருகிறது.

வல்லிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டும் மந்துவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசுவின் புத்திரர்களான சின்னத்தம்பி, விஸ்வலிங்கம் ஆகியோர் அப்பணியைச் செய்கிறார்கள்.

ஆலயத்தில் ஆவணிப் பூரணையில் கடலாட்டு விழாவும் அடுத்தநாள் ஆலயத்தருகே அமைந்துள்ள பிரமாண்டமான தாமரைப் பொய்கையில் பட்டுத்தீர்த்த விழாவும் நடைபெறும்.

வல்லிபுரம் என்னும் கிராமத்தில்தான் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் அமைந்துள்ளது. வல்லிபுரம் என்னும் இடத்தால் ஆலயமே வல்லிபுரக்கோவில் என அழைக்கப்படுகிறது. இக்கிராமத்தின் மூத்த குடியினரான தானத்தார் வம்சத்தைச் சேர்ந்த இவர்கள்தான் மாயவனுக்கு முதன் முதல் தங்கள் காணியில் கோவில் அமைத்துப் பூசை செய்தும் நிர்வகித்தும் வந்தார்கள் என சாசனங்கள் மூலம் அறியக்கிடக்கிறது.

வல்லிபுரக் கோவில் கட்டப்பட்ட இடமும் நான்கு வீதிகள் அமைந்துள்ள இடமும் வல்லிபுர ஆழ்வாரின் சந்ததியாருக்கே உரியது. மேற்படி ஆலய சுற்று மதிலுக்கும் தெற்கு வீதிக்கும் இடையில் கட்டப்பட்டுள்ள நாகதம்பிரான், நாச்சிமார் கோவில்கள் வல்லிபுர ஆழ்வாரின் சந்ததியினரே உரிமைக்காரராக இருக்கிறார்கள். வல்லிபுரக் கோவிலுக்கு மேற்கே அமைந்திருக்கும் குருக்கட்டுப் பிள்ளையார் கோவிலையும் இவர்களே நிர்வகித்து வருகிறார்கள்.

சேதர் தாமோதரர் கோவில் பூசகராகவும் அதிகாரியாகவும் இருந்த காலத்திலேதான் பல கட்டுப்பாடுகள் வகுக்கப்பட்டு அமுலுக்கு வந்தன. அவை இன்றும் நடைமுறையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் கோவில் பூசகராயிருந்த காலத்திலே வரணி இயற்றாலையிலிருந்து கந்தர் கதிர்காமர் என்ற பண்டாரத்தைக் கொண்டு வந்து கோவிலோடு சேர்ந்த தனது சொந்தக்காணியில் குடியேற்றி, மூன்று பரப்பு நிலம் சொந்தமா கொடுத்து, கோயிலுக்கான பூப்பத்திரம் எடுத்தல் போன்ற வேலைகளைச் செய்வதற்கும் வழிவகுத்திருக்கின்றார். இதற்குரிய பதிவு செய்யப்பட்ட சாசனம் உள்ளது.

அத்துடன் வல்லிபுரத்திலே தானத்தார் வம்சத்தைச் சேர்ந்தவர்களின் கோகுலங்களின் பட்டிக் குறிகளும் அந்தக் கோபாலனையே குறிக்கின்றன. கோகுலங்களின் உடம்பிலே 'ஆ' என்ற எழுத்துக் குறி இடப்படுகிறது. இது ஆழ்வார் சுவாமியைக் குறிக்கும் அடையாளம். பின் தொடையில் மூர்த்தியின் சக்கரம் அடையாளம் பொறிக்கப்படுகின்றது. முன்கால் சீப்பில் பூக்கொக்கை போன்ற குறி இடப்படுகின்றது.

இது இவர்கள் சுவாமியாருக்கு பூத்தொண்டு செய்ததைக் குறிக்கும். இவை வேறு எங்குமே காண முடியாத வரலாற்றுச் சிறப்புமிக்க சின்னங்களாகும். இன்றும் மேற்படி சின்னங்களை வல்லிபுரத்தார் ஆ நிரைகளில் காணலாம்.

அது மாத்திரம் அல்ல வல்லிபுர மாயவன் கோவில் கொண்டெழுந்தருளிய காலத்திலிருந்து இன்று வரை வல்லிபுரக் கோயிலுக்கும் பூசைக்கும் அபிஷேகத்திற்கும் வல்லிபுரத்து தானத்தார் சந்ததியினரே கிரமமாகவும் நேரம் தவறாமலும் பால் வழங்கி வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலே குறிப்பிடப்பட்ட பல விபரங்களிலிருந்து ஆலயத்தையும் அவ்வூர் மக்களையும் பிரிக்கமுடியாத தொடர்புகள் ஏராளம் உண்டு என்பது புலனாகியது.

வல்லிபுரக் கோவில் வல்லிபுரம் என்னும் கிராமத்தில்தான் அமைந்துள்ளது. ஆலயத்தின் சரியான விலாசம் பின்வருமாறு : ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி தேவஸ்தானம்

வல்லிபுரம், புலோலி என்பதாகும். ■



## ஆசியுரை

நிகழும் சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 04 ஆம் நாள் புதன்கிழமை ( 21.09.2022) காலை 07.30 மணியளவில் வல்லிபுர குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலய மகோற்சவம் கொடி ஏற்றத்துடன் ஆரம்பமானது. அன்றைய தினம் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் வீற்றிருக்கம் விநாயகப் பெருமான் குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலயத்திற்கு பி.ப 05.30 மணியளவில் தமது இருப்பிடத்தை நோக்கிச் செல்வார்.

இன்று சுபகிருது வருடம் 07 ஆம் நாள் சனிக்கிழமை (24.09.2022) காலை 08.45 மணியளவில் வல்லிபுரஆழ்வார் கோவில் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். புரட்டாதி 14 ஆம் நாள் 08 ஆம் உற்சவம் சனிக்கிழமை (01.10.2022) குருக்கட்டு சித்தி விநாயகர் தரிசனத்திற்காக அங்கிருந்து பி.ப 07 மணியளவில் வருகை தருவார்.

புரட்டாதி 20 ஆம் நாள் 14 ஆம் உற்சவம் (07.10.2022) வெள்ளிக்கிழமை சப்பரத்திருவிழா இரவு 07.00 மணிக்கு

புரட்டாதி 21 ஆம் நாள் 15 ஆம் உற்சவம் (08.10.2022) சனிக்கிழமை

தேர்திருவிழாவும் காலை 08.45 மணி

புரட்டாதி 22 ஆம் நாள் 16 ஆம் உற்சவம் (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை சமுத்திரத் தீர்த்தத்திருவிழா பி.ப 03.00

புரட்டாதி 23 ஆம் நாள் 17 ஆம் உற்சவம் (10.10.2022) திங்கட்கிழமை கேணித் தீர்தத் திருவிழா

அன்றைய தினம் மாலை 08.00 மணிக்கு வல்லிபுர ஆழ்வார் கொடிஇறக்கம் இடம்பெற்று பின்னர் மாலை 07.00 மணியளவில் குருக்கட்டு சித்தி விநாயகப் பெருமானுடைய கொடிஇறக்கம் இடம்பெறும் பரந்தாமன் பக்த அடியார்களே இந்து சமயக் கோட்பாடுகளுக்கும் கலாசாரத்திற்கும் அமைவாக உடைகள் அணிந்து பெறுமதியான தங்க ஆபரணங்கள் அணிவதை தவிர்த்து உற்சவங்களின் கலந்து எம்பெருமானின் திருவருட் கடாட்சத்தைப் பெற்று செல்லுமாறு அன்புடன் வேண்டப்படுகிறேன்.

**மேன்மை கொள் சைவ நீதி விளங்குக**
**உலகமெல்லாம்**

ஆலய பிரதம குரு,
பிரம்ம ஸ்ரீ சா. சாந்த ரூபசர்மா,
துன்னாலை. கரவெட்டி

## ஆசியுரை

அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கோவில்
சுபகிருது மகோற்சவம் 2022
பிரதம குருமார்களின் நல்லாசிகள்
கொடியேற்றம் (துவஜாரோகாரம்)

மாயவன் மெய்யன்பதருள !
அவன் அருளாலே அவன்தான் தாழ் வணங்கி
எல்லாம் வல்ல ஸ்ரீவல்லிபுர மாயவன் தாழ் பணிந்து

நிகழும் சுபமங்ககரமான சுபகிருது புரட்டாதி மீ 07 ஆம் நாள் மந்த வாரம் (சனிக்கிழமை) (24.09.2022) எம் பெருமான் ஸ்ரீ வல்லிபுர சக்கரரூப மாயவனுக்கு மகோற்சவம் எனப்படும் பஞ்சகிருத்தியங்களின் ஒன்றான படைத்தல் தொழின் கொடியேற்றத்திருவிழா இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறுவதற்கு எம்பெருமான் திருவருள் கைகூடியுள்ளது. 18 ஆம் நாள் பிராயச்சித்தம் ஆஞ்சநேயர் மடையுடன் மகோற்சவம் இனிதே நிறைவு பெறும் .

இன்றைய நன்நாளில் நீங்கள் அனைவரும் எம் பெருமானின் புகழ்பாடி அவனின் விழாக் கோலத்தில் கலந்துகொண்டு மாயவனின் பேரருள் பெறுவீர்கள் என்பது திண்ணம்.

என்னயே நினைந்திருங்கள் எப்போதும் வாருங்கள் அருகில் நான் இருப்பேன் என்ற பகவானின் பகவத்கீதை உபதேசத்தின் பிரகாரம் என் றென்றும் மெய்யன்போடு மாயவன் வழிபடும் அன்பர்கள் அனைவரும் ஆரோக்கியமான இன்பம் நிறைந்த சுகவாழ்வு வாழ எம் பெருமானின் நல்லருளும் எமது நல்லாசிகளும் தீம்புனல் நாளிதழ் மூலம் உள்ளன்போடு தெரிவித்துக்கொள்கின்றோம். நன்றி சுபம்.

**சர்வம் கிருஷ்ணார்ப்பணம்**

ஸ்ரீஆழ்வார் பீடம்
பிரம்மஸ்ரீ ச.க சுதர்சனக்குரு
வல்லிபுரக்கோவில் பிரம்மஸ்ரீ சுதர்சன கணபதீஸ்வரக்குரு
புலோலி மேற்கு
பிரதம குருமார்கள்

யாவும் நலம்
வாழ்க! வளர்க! தீம்புனல்

## வாழ்த்துரை

கொடியேறும் மாயவனே
அடியார்க்கு அருள்தருவாய்

மாயோன் மேய காடுறை பதியாம் வல்லிபுரத்தினிலே லவல்லி என்ற பத்தையின் மடியினிலே மச்சமாய் உற்பவித்து சக்கர ரூபமாய் வீற்றிருக்கும் பரந்தாமன் இன்றைய புரட்டாதி சனியின் முதல் திதியில் கொடியேறி அருள்பாளிக்க உள்ளான். இன்றும் இனித்தொடரும் பதினேழு மகோற்சவ நாட்களிலும் பெருமான் பேரருள் நிறைந்து அடியார் வேண்டுவன எல்லாம் சித்திபெற எம்பெருமான் பாதம் பணிந்து இறைஞ்சுவோம்

**அரி ஓம் நமோ நாராயணா**
**றங்கா ரங்கா பண்டுறங்கா**
**ரமா ராமா சீதாராமா**

ச.கேசவானந்தன்
செயலாளர்
வல்லிபுரம் ஆழ்வார் ஆலயம்

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் கொடியேற்றம் (2022.09.24)








ENJOY REFRESHING TASTE
pepsi
ENJOY REFRESHING TASTE
pepsi
BLUBERRY CREAM HOUSE
Chavakachcheri Road, Manthikai.
T.P: 077 588 0437
BLUBERRY CREAM HOUSE
ஒரு முறை சுவைத்திடுங்கள்
உன்னதத்தை உணர்ந்திடுங்கள்
pepsi

# வல்லிபுரக் கோவிலும் குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலயமும்

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலயத்திற்கு மேற்கே குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. இவ்விரு ஆலயங்களுக்குமிடையே பல பாரம்பரியமான தொடர்புகள் இன்றும் பேணப்பட்டு வருகின்றன. ஆதிகாலத்தில் வல்லிபுர ஆழ்வார் சந்ததியைச் சேர்ந்தவர்கள் குருக்கட்டுப் பிள்ளையார் கோவில் பூசையை நிறைவேற்றிக்கொண்டுதான் வல்லிபுர ஆழ்வார் சுவாமிக்கும் பூசை செய்வது வழக்கமாக இருந்தது. பிள்ளையார் கோவிலுக்கு மேற்கே இரு திருக்குளங்கள் உள்ளன. அவற்றில் ஒரு குளத்தில் இருந்துதான் திருநாமம் எடுக்கப்பட்டும் வந்தது. வல்லிபுர கோவிலுக்குப் போகும் பக்த அடியார்கள் எல்லோரும் இத் திருநாமத்தை நெற்றியில் பொட்டு வைப்பார்கள். கோவிலுக்கு திருநாமம், மேற்படி குளத்திலிருந்து எடுக்கின்ற காரணத்தால் இக்குளத்திற்கு 'நாமக்குளம்' என்ற பெயர் வழங்கி வருகிறது. மற்றக் குளத்தில் ஆதிகாலத்தில் வல்லிபுரக் கோவில் பட்டுத் தீர்த்த விழாவையும் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை வரும் மாமாங்க தீர்த்தத் திருவிழாவையும் நெடுங்காலமாக நடத்தி வந்தார்கள். இதனால் இக்குளத்திற்கு 'தீர்த்தக்குளம்' என்ற பெயர் வழங்களாயிற்று சில காலத்தின் பின் வல்லிபுரக் கோவில் மேற்கு வீதியில் கற்கட்டுக் கேணி அமைக்கப்பட்டு பட்டுத் தீர்த்தவிழா நடைபெறுகின்றது. தீர்த்தக்கேணி தற்போதைய இடத்தில் அமைக்கப்பட்டது. மிக மிக தீர்க்கதரிசனமானது. ஏனெனில், குருக்கட்டுப் பிள்ளையாரின் பார்வையில் இந்தப் பட்டுத்தீர்த்த விழா நடைபெறுவது மிகவும் சிறப்பான அம்சமாகும். சில வருடங்களுக்கு முன் குருக்கட்டுப் பிள்ளையார் கோவில் தீர்த்தக்குளம் கற்கட்டுக் கேணியாக அமைக்கப்பட்டுள்ளது.



வல்லிபுரத்தைச் சேர்ந்த தாமு சுப்பிரமணியம் அவர்கள் கோயில் முகாமையாளராக இருந்த காலத்தில் அவ்வூர் மக்களினதும் அயல் கிராம மக்களின் உதவியோடு இத்திருப்பணியை நடத்தியவர் பொன்னையா வைத்தியராகும். அன்னாரின் சேவை என்றென்றும் நினைவு கூரத்தக்கதாகும். இக்குளங்களுக்கு மேற்கே நெல் வயல்களுக்கு மத்தியில் அழகான தாமரைத் தடாகம் ஒன்று காட்சியளிக்கிறது.

எம் முன்னோரால் ஆக்கப்பட்ட பண்டைய பாரம்பரியங்கள் இன்னும் மகோற்சவ காலங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. கொடியேற்று வைபவம் நடைபெறமுன் வல்லிபுர சுவாமியாருக்கு கொடியேற்று வைபவம் குருக்கட்டுப் பிள்ளையாருக்கு கொடியேற்று வைபவம் நடைபெறும் இவ்விழா மூன்று நாட்களுக்கு முன்னதாகவே நடைபெறும். மேற்படி விழா வல்லிபுரக் கோவில் பிரதமகுருக்களால் நடத்தப்படும். அன்று சாயந்தரம் வல்லிபுரக் கோவிலுள்ள விநாயகரைக் கொண்டு வந்து குருக்கட்டுப் பிள்ளையார் ஆலயத்தில் வைப்பார்கள். மூன்று நாட்களுக்குச் சுவாமிக்கு விழா எடுத்து பூசை நடைபெறும். இவ்விழா வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலயப் பிரதமகுருக்களால் நிறைவுசெய்யப்படும். இங்ஙனம் மூன்று தினங்கள் நடைபெற்று மூன்றாம் நாள் இரவு மீண்டும் விநாயகப் பெருமானை வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவிலுக்குக் கொண்டு சென்றபின் அங்கு கொடியேற்று விழாவுக்குரிய கிரியைகள் இரவு நடைபெறும். அடுத்த நாள் மாயவனுக்கு கொடியேற்று விழா வெகு விமர்சையாக நடைபெறும். கொடியேறி எட்டாம் திருவிழாநாள் அன்று வல்லிபுர ஆழ்வார் சுவாமி குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலயத்திற்கு எழுந்தருளுவார். அங்கு சுவாமிக்கு பட்டும் மாலைகளும் சாத்தப்பட்டு விசேடமாக நெய்வேத்தியங்கள் படைத்து விசேட பூசை நடைபெறும். பின்னர் சுவாமி வீதி வலம் வந்து வல்லிபுரக் கோவிலுக்குத் திரும்பிச் செல்வார். இந்த பண்டைய பாரம்பரியம் இன்றும் நடைபெறுகிறது.

வல்லிபுரம் மூத்தகுடியினர் கட்டிவைத்த பாரம்பரியங்கள் இன்றும் பேணப்பட்டும் போற்றப்பட்டும் வருகின்றன. மகோற்சவ நிறைவு நாளான பட்டுத்தீர்த்த விழாவன்று சுவாமி கேணித் தீர்த்தமாடி வசந்த மண்டபம் போய்ச் சேர்ந்தும் வழக்கமாக வீதிவலம் காவிக்கொண்டு வரும் தொண்டைச் செய்பவர்களாகிய கற்கோவளம் மக்கள் குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலயத்திற்குச் சென்று அங்கு அவர்களுக்கெனப் பிரத்தியேகமாக வழங்கப்படும் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு போவார்கள். இதுவும் பண்டைய பாரம்பரியங்களிலொன்றாகும். இங்ஙனம் பண்டைய பாரம்பரியங்களிலிருந்து இவ்விரு ஆலயங்களுக்கிடையிலும் பிரிக்கப்பட முடியாத பல தொடர்புகள் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ■





அருள்மிகு வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கோயில்

சுபகிருது வருட மஹோற்சவம் - 2022

| கொடியேற்றம் | தேர் | சமுத்திரத்தீர்த்தம் |
|---|---|---|
| புரட்டாதி மாதம் 07ம் நாள் (24.09.2022) சனிக்கிழமை காலை 08.45 மணிக்கு | புரட்டாதி மாதம் 21ம் நாள் (08.10.2022) சனிக்கிழமை காலை 08.45 மணிக்கு | புரட்டாதி மாதம் 22ம் நாள் (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை மாலை 03.00 மணிக்கு |

நிகழும் சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 07ம் நாள் சனிக்கிழமை (24.09.2022) காலை 08.45 மணியளவில் வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கோவில் மஹோற்சவத் தொடர் கொடியேற்றத்துடன் ஆரம்பமாக எம்பெருமான் திருவருள் பாலித்துள்ளார். பரந்தாமன் பக்தர்கள் அனைவரும் ஆசாரசீலராய் வந்து எம்பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புரட்டாதி | 08ம் நாள் | 02ம் உற்சவம் | 25.09.2022 | ஞாயிற்றுக்கிழமை | உள்வீதி உலா |
| புரட்டாதி | 09ம் நாள் | 03ம் உற்சவம் | 26.09.2022 | திங்கட்கிழமை | உள்வீதி உலா |
| புரட்டாதி | 10ம் நாள் | 04ம் உற்சவம் | 27.09.2022 | செவ்வாய்க்கிழமை | உள்வீதி உலா |
| புரட்டாதி | 11ம் நாள் | 05ம் உற்சவம் | 28.09.2022 | புதன்கிழமை | உள்வீதி உலா |
| புரட்டாதி | 12ம் நாள் | 06ம் உற்சவம் | 29.09.2022 | வியாழக்கிழமை | உள்வீதி உலா |
| புரட்டாதி | 13ம் நாள் | 07ம் உற்சவம் | 30.09.2022 | வெள்ளிக்கிழமை | வெளிவீதி உலா |
| புரட்டாதி | 14ம் நாள் | 08ம் உற்சவம் | 01.10.2022 | சனிக்கிழமை | குருக்கட்டு விநாயகர் தரிசனம் |
| புரட்டாதி | 15ம் நாள் | 09ம் உற்சவம் | 02.10.2022 | ஞாயிற்றுக்கிழமை | வெண்ணைத் திருவிழா |
| புரட்டாதி | 16ம் நாள் | 10ம் உற்சவம் | 03.10.2022 | திங்கட்கிழமை | துகில் திருவிழா |
| புரட்டாதி | 17ம் நாள் | 11ம் உற்சவம் | 04.10.2022 | செவ்வாய்க்கிழமை | பாம்புத் திருவிழா |
| புரட்டாதி | 18ம் நாள் | 12ம் உற்சவம் | 05.10.2022 | புதன்கிழமை | கம்சன் போர்த் திருவிழா |
| புரட்டாதி | 19ம் நாள் | 13ம் உற்சவம் | 06.10.2022 | வியாழக்கிழமை | வேட்டைத் திருவிழா |
| புரட்டாதி | 20ம் நாள் | 14ம் உற்சவம் | 07.10.2022 | வெள்ளிக்கிழமை | சப்பறத் திருவிழா இரவு 07.00 மணி |
| புரட்டாதி | 21ம் நாள் | 15ம் உற்சவம் | 08.10.2022 | சனிக்கிழமை | தேர்த் திருவிழா |
| புரட்டாதி | 22ம் நாள் | 16ம் உற்சவம் | 09.10.2022 | ஞாயிற்றுக்கிழமை | சமுத்திரத்தீர்த்தத் திருவிழா |
| புரட்டாதி | 23ம் நாள் | 17ம் உற்சவம் | 10.10.2022 | திங்கட்கிழமை | கேணித்தீர்த்தத் திருவிழா மாலை 06.00 மணிக்கு கொடியிறக்கம் |

11.10.2022 செவ்வாய்க்கிழமை பிராயச்சித்தம் பிற்பகல் ஆஞ்சநேயர் மடை.
வடக்கு வெளி வீதியில் சுவாமி வரும் போது கற்கோவளம் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்று அந்நாள் உற்சவ கருத்தை சித்தரிக்கும் முறையில் இடம்பெறும்.

மஹோற்சவகால பூஜை நேரங்கள்

| காலை | | மாலை | |
|---|---|---|---|
| உஷாக்காலம் | காலை 06.45 மணி | சாயரட்சைப் பூஜை | மாலை 03.45 மணி |
| 2ம் காலம் | காலை 07.15 மணி | மாலைப் பூஜை | மாலை 04.10 மணி |
| அபிஷேகம் ஆரம்பம் | காலை 08.00 மணி | தம்ப பூஜை | மாலை 04.30 மணி |
| விசேட பூஜை | காலை 09.10 மணி | வசந்தமண்டபப் பூஜை | மாலை 05.15 மணி |
| தம்ப பூஜை | காலை 09.30 மணி | அர்த்தசாமப் பூஜை | இரவு 07.00 மணி |
| வசந்த மண்டப பூஜை | காலை 10.30 மணி | | |
| உச்சிக்காலம் | பகல் 12.00 மணி | | |

மங்கள வாத்தியம்
L.S.பாலேந்திரன்
உடுப்பிட்டி ஜெகநாதன் குழுவினரின் சகோதரன்

பகல் உற்சவம் ஆரம்பம் 08.00 மணிக்கு
இரவு உற்சவம் ஆரம்பம் மாலை 04.00 மணிக்கு

சப்பறம் வசந்தமண்டபப் பூஜை, தேர் வசந்தமண்டபப் பூஜை, சமுத்திர தீர்த்தம் ஆகியன அக்கால சூழ்நிலைக்கேற்ப நேரப்படி நடைபெறும். (மாற்றத்திற்கு உள்ளாகலாம்)

மஹோற்சவ நாட்களில் அன்னதானம் இடம் பெறும்
(ஆலயத்தின் மூலம் அன்னதானம் செய்யவிரும்புவோர் ஆலய அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்)

மு.கு: பஸ்சேவைகள் வழமைபோல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

விசேட கவனத்திற்கு :- இந்து சமயக்கோட்பாடுகளுக்கும் கலாச்சாரத்திற்கும் அமைவாக உடைகள் அணிந்து, பெறுமதியான தங்கத்தினாலான ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்து உற்சவங்களில் கலந்து வல்லிபுர மாயவனின் அருள்பெற்றுச் செல்லுமாறு வேண்டப்படுகின்றனர்.
அனைவரும் முகக்கவசம் அணியவேண்டும். சமூக இடைவெளியைப் பேண வேண்டும். உள்வீதியில் அங்கப்பிரதட்சை, காவடி, அடி அளித்தல், கற்பூரச்சட்டி என்பன தடை செய்யப்பட்டுள்ளது.

கண்ணன் கழலடி போற்றி

இங்ஙனம்
அறங்காவலர் சபை







இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 24.09.2022 அன்று வெளியிடப்பட்டது.